# பிப்ரவரி 2 தேதி முதல் தமிழ்நாடெங்கும்

★ ஆதவனை அந்தரத்திலே நிறுத்திய கற்பரசியின் கதை!
★ மெய்சிலிர்க்க வைக்கும் நாகங்களின் மேன்மையான நடிப்பு!!

## எவி எம்

புரொடக்ஷன்ஸ் தயாரித்த

# நாகதேவதை

அல்லது "ஆதர்ஸ சதி" கன்னடம்
தமிழ் விளக்கத்துடன்

2617
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - FEB 1956
MADRAS

## 1956-ல் உங்கள் எதிரில்

ஒரு தபால் கார்டில் ஏதாவது ஒரு மலரின் பெயரையும், உங்கள் பெயர் விலாசத்தையும் எழுதி அனுப்புங்கள். நாங்கள் உங்களுக்கு ரூ. 1-4-0க்கு தனி தபால் செலவுடன் உங்களுக்கு வரும் 12 மாதங்களில் ஏற்படும் பலன்களையும் வியாபாரத்தில் லாபநஷ்டம், பதவி உயர்வு, உத்தியோக மாற்றம், குழந்தைப்பேறு, சந்துஷ்டி மற்றும் தேக அசௌகரியங்களையும் அவைகளினின்றும் பாதுகாக்கும் குறிப்புகளையும் அனுப்புகிறோம்..

**SHREE SWAMI SATNARAIN JOTISH ASHRAM.**
(P. P. M.) Hoshiarpur (Pb).

## இலவசம்!

ஹேர் ஆயில் நெ. 501 நரை மயிர் கருக்கவும், ரோமம் உதிர்வதைத் தடுக்கவும் உதவுகிறது.

ஒரு புட்டி விலை ரூ. 1-15-0
3 புட்டிகள் விலை ரூ. 5-0-0

எங்கள் வியாபாரத்தை விருத்தி செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் எங்கள் கம்பெனி ஹேர் ஆயிலை உபயோகிப்பவர்களுக்கு அழகான கைக்கெடிகாரம் ஒன்றும் நியூ கோல்ட் மோதிரமும் இனமாகத் தருகிறோம். 15 வருஷ உத்திரவாதம். ஒரே சமயத்தில் மூன்று புட்டிகள் வாங்குபவர்களுக்கு 6 கைக்கடிகாரங்களும் 6 மோதிரங்களும் இலவசமாகத் தருகிறோம். திருப்திகரமாயிராவிடில் பணம் திரும்பப் பெறலாம்.

**AMRIT PHARMACY**
(P. P. M.) NAKODAR

## மாய மோதிரம்! ரொக்கப் பரிசு ரூ. 1,000!



(அபூர்வ சக்தியுடையது)

இந்த மோதிரம் மாயா ஜாலத்தாலும், மெஸ்மரிஸ சக்தியாலும் தயாரிக்கப்பட்டது. யாராவதொருவர் இம் மோதிரத்தை அணிந்து கொள்ளுங்கள்; உங்கள் காரியங்களில் வெற்றியோ, அல்லது, உங்களிடம் பணிவோ ஏற்படச் செய்யும். உங்களை எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும் இது காப்பாற்றும். துர்தேவதைகள் உங்களிடம் அணுகாது. இந்த மாய மோதிரத்தை அணிந்து கொண்டவர்களிடம் ஆண், பெண் அடங்கி நடப்பார்கள். இவர் பெயரைக் கேட்டாலே நடுங்குவர். காணமற்போனவர்களைக் கண்டறியலாம். நீங்கள் காதலில் வெற்றியும், கோர்ட்டு வ்ழக்குகளிலும், உத்தியோக உயர்விலும், அதிகப் பணம் சம்பாதிப்பதிலும் வெற்றி யடைவீர்கள். சுருங்கச் சொன்னால் இம் மோதிரம் ஒரு பாதுகாப்பாளனைப் போன்றது. ஒரு முறை பரீக்ஷியுங்கள். முதல் இரவிலேயே பலன் காண்பீர்கள். இதன் விலை ரூ. 1-15-0. ஸ்பெஷல் ரூ. 3-0-0. ஸ்பெஷல் அதிக சக்தி வாய்ந்தது ரூ. 3-15-0. தபால் .செலவு தனி. பலன் இல்லையென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.

*Principal:* **THE BENGAL MESMERISM HOUSE**
**(P. P. M.) HOSHIARPUR, (P. B.)**

வருகிறது...
நாகபூஜையின் மகாத்மியத்தை
விளக்கும் நல்லதொரு
தமிழ் சித்திரம்...
நாக பஞ்சமி
ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பிலிம் கம்பெனி தயாரிப்பு....
டைரக்ஷன்: கே. பி. நாகபூஷணம் · வசனம்: உதயகுமார்
கண்ணாம்பா · எஸ். வரலக்ஷ்மி ·
அஞ்சலிதேவி ·
ருஷ்யேந்திரமணி · லக்ஷ்மிபிரபா ·
வி. நாகையா · தங்கவேலு ·
வரதன் · நடராஜன் ·
நடித்தது...

ஜுபிலி பிக்சர்ஸ்

38, ஹபிபுல்லா ரோட், சென்னை-17

விரைவில் வருகிறது
பிரபல நக்ஷத்திரங்கள் நடிக்கும்
vRv புரொடக்ஷன்ஸ்.....
பத்தினித் தெய்வம்
பாடல்கள்... தஞ்சை ராமய்யதாஸ்
சங்கீதம்.. விஸ்வநாதன் & ராமமூர்த்தி
வசனம்.... K.M. கோவிந்தராஜன்
ஒளிப்பதிவு.......... N. பிரகாஷ்
நடனம்.......... A.K. சோப்ரா
திரைக்கதை & டைரக்ஷன்:
Ch. நாராயணமூர்த்தி, B.A.
vRv
PSR
V.R.V. புரொடக்ஷன்ஸ் • சென்னை-17

மஹேஸ்வரி பிக்சர்ஸ்
கண்ணின் மணிகள்
M.K.ராதா • புதுமுகம் சுந்தர் • பத்மினி
M.V. ராஜம்மா • N.S. கிருஷ்ணன்
T.A. மதுரம் • கருணாநிதி
முத்துலக்ஷ்மி மற்றும் பலர்
தயாரிப்பு & டைரக்ஷன்:
T. ஜானகிராம்
PSR
மஹேஸ்வரி பிக்சர்ஸ் • சென்னை-26

படம் 14

காட்சி 6

பேசும் படம்

★ பிப்ரவரி 1956 ★

1. செய்திச் சுருள் ... 8
2. நக்ஷத்திர மண்டலத்தில் நாலு வாரங்கள் ... 10
3. சிரஞ்சீவிக் காட்சிகள் ... 13
4. ஜமுனா
இயற்கை வர்ணப்போட்டோ: எஸ். நடராஜன் 17
5. அயன் ஸ்திரீபார்ட ... 20
6. சாயிராம் (வாழ்க்கைச் சித்திரம்) ... 25
7. 'கன்னியின் சபத'த்தில் எம். என். ராஜம ... 35
8. நரசுவின் பிரேம பாசத்தில் சாவித்திரி
(மூவர்ணப் படம்) ... 36
9. 'பெண்ணின் பெருமை'யில்
எம். என். ராஜம் (மூவர்ணப் படம்) ... 37
10. ஸ்டூடியோ விஜயம் ... 40
11. வேட்டை நக்ஷத்திரங்கள் ... 51
12 எம். கே. ராதா–ராஜம்மா
இயற்கை வர்ணபோட்டோ:
எஸ். வி. கோபால்ராவ் ... 56
13. 'பெண்ணின் பெருமை' (படக் காட்சிகள்) ... 57
14. அலிபாபா (திரைக்கதை, வசனம்) ... 65
15. வட இந்திய வெள்ளித்திரை ... 76
16. சதாரம் (படக் காட்சிகள்) ... 81
17. கேள்வி–பதில் 89
18. நான் ரஸித்த காட்சி ... 95
19. தபால் பெட்டி ... 100
20. வெட்டுங்கள் வெட்டுங்கள் ... 103

PESUM PADAM, Tamil Monthly Magazine Printed and Published by T. V. Ramanath, at RAMANATH PRESS, 17, General Patters Road, Madras-2. (PHONE 86001) Proprietors RAMANATH PUBLICATIONS. Managing Editor: T.V. Ramanath Sole Agents for Ceylon: Mohan & Co. Ltd., 74, Dam Street, Colombo and Grand Bazaar, Jaffna. Sole Agent for Malaya P. Sivaguru, 27, Scott Road, Kuala Lumpur; 8, China Street. Penang and 3, Kerbau Road, Singapore.

**Editorial & Publication Offices:**

**17, General Patters Road, Madras - 2.**

MEMBER: AUDIT BUREAU OF CIRCULATIONS LTD.

# செய்திச் சுருள்

## 'நானே ராஜா' வந்துவிட்டான்

ஸ்ரீ கல்பனு பிக்சர்ஸ் முதல் தயாரிப்பான "நானே ராஜா!" சென்ற மாத இறுதியில் தமிழ் நாடெங்கும் திரையிடப்பட்டிருக்கிறது. ஆர். ஆர். சந்திரன் தயாரித்திருக்கும் இப்படத்தின் கதை, வசனங்களை 'கண்ணதாசன்' எழுதியிருக்கிருர். சிவாஜி கணேசன், டி. எஸ். பாலய்யா, எஸ் வி. சுப்பய்யா, சஹஸ்ரநாமம் ஸ்ரீரஞ்சனி, எம். என். ராஜம், கிரிஜா மற்றும் பல நக்ஷத்திரங்கள் நடித்திருக்கும் இப்படக்கதை சரித்திர சம்பவமொன்றை ஆதாரமாக வைத்து எழுதப்பட்டிருப்பதாகும் இ. அப்பாராவ், பி. வி. நாராணயன் இருவரது கூட்டு டைரக்ஷனில் இப்படம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

## 'விகடகவி' வருகிருன்!

விக்ரம் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பான 'தெனுலிராமன்' இம்மாத ஆரம்பத்தில் வெளிவரப் போகிறது. பி. எஸ். ரங்கா டைரக்ட் செய்துவரும் இப்படத்தின் பூரண உரிமைகளை கோல்டன் பிலிம்ஸார் பெற்றிருக்கிருர்கள். சிவாஜி கணேசன் இப் படத்தில் விகடகவி தெனுலிராமனுக வந்து தான் ஹாஸ்ய பாகங்களையும் திறமையுடன் ஏற்று நடிக்க முடியும் என்பதைக் காட்டியிருக்கிருர். பானுமதி கிருஷ்ணதேவராயரை வீழ்த்தும் எண்ணங்கொண்ட சாகசக்காரியாக இதில் தோன்றி, பல நடனங்களை ஆடியிருக்கிருர், நாகய்யா, என். டி. ராமராவ். ஜமுனு நம்பியார் மற்றும் பல நக்ஷத்திரங்கள் நடித்து வரும் இப்படம் 'ரேவதி'யில் தயாராகி வருகிறது.

## வாஹினியில் 'யார் பையன்?'

'நீதிபதி'யை வெளியிட்ட விஜயா பிலிம்ஸார் 'யார் பையன்?' என்ற படத்தை தயாரிக்க ஆரம்பித்திருக்கிருர்கள். டி. ஆர். ரகுநாத் டைரக்ஷனில் தயாராகிறது இது.

## 'காளிதாஸ்' வருகிருர்

வடமொழி கவிஞனை காளிதாஸனின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு 'மகாகவி காளிதாஸ்' என்ற தமிழ்ப் படத்தை, லலித கலா பிலிம்ஸார் தயாரித்து வருகிருர்கள். வாஹினியில் தயாராகி வருகிறது இப்படம். ஹொன்னப்ப , பாகவதர் இதில் கவிஞனுக நடித்து வருகிருர். சரோஜா, ராஜசுலோசனு மற்றும் பலரும் இதில் நடித்து வருகிருர்கள். எவரெஸ்ட் பிக்சர்ஸார் சிவாஜி கணேசனைக் கொண்டு, ராமண்ணு டைரக்ஷனில் காளிதாஸ் படத்தை உருவாக்க திட்டமிட்டிருக்கிருர்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## பெண்ணின் பெருமை

சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன் இருவரும் முதன் முதலாக ஒன்று சேர்ந்து நடிக்கும் ராகினியின் தமிழ்ப் படத்திற்கு 'பெண்ணின் பெருமை' என்று பெயர் தரப்பட்டிருக்கிறது. தலைப்புக்கு ஏற்றபடி ஒரு பெண்ணின் உயரிய பண்புகளைச் சித்தரிக்கும் சுவாரஸ்யமான கதையாக இப்படம் அமைந்திருக்கிறது. அத்தகைய பெண்ணின் பாத்திரத்தில் சாவித்திரி இதில் தோன்றி நடித்து வருகிருர். மற்றும் நாகய்யா கே. ராமசாமி, எம். என். ராஜம், சாந்தகுமாரி மற்றும பல முன்னணி நடிகர்களும் இப்படத்தில் நடித்து வருகிருர்கள். பி. புல்லையாவின் சொந்தத் தயாரிப்பான இப்படத்தின் டைரக்ஷனையும் அவரே ஏற்றிருக்கிருர். ரேவதியில் தயாராகிறது படம்.

## 'மகாதேவி' திரைக்கு

'கோடீஸ்வரன்'ஹாஸ்யப் படத்தை திரைக்கு அளித்த கணேஷ் மூவிடோன் கம்பெனியார், 'மகாதேவி' என்ற படத்தை அடுத்தபடி தயாரிக்க முனைந்திருக்கின்றனர். கண்ணதாசன் திரைக்கதை வசனம் எழுதும் இப்படம் சுந்தர்ராவ் நட்கர்ணியின் டைரக்ஷனில் வளரப் போகிறது. எம். ஜி. ராமச்சந்திரன், பி. எஸ். வீரப்பா, சந்திரபாபு, எம். என் ராஜம், முத்துலக்ஷ்மி முதலியோர் இப்படத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிருர்கள். படப்பிடிப்பு விரைவிலேயே ஆரம்பமாகவிருக்கிறது.

## ‘பெற்றமனம்’ வருகிறது

மு. வரதராசனுரின் கருத்தோவிய மான ‘பெற்றமனம்’ திரைப்படமாக உருவாகி வந்த விஷயம் முன்பே தெரிந்திருக்கும். பிரஸாத் ஆர்ட் தயாரிப்பான இப்படத்தின் உரிமைகளை பிரபல நேஷனல் பிக்சர்ஸார் பெற்றிருக்கிருர்கள். விரைவிலே இப்படத்தை தமிழ் நாடெங்கும் வெளியிட அவர்கள் முயன்று வருகிருர்கள். ‘பெற்றமனம்’ தாயின் மனப்போராட்டத்தை விளக்கும் படம். இதில் புஷ்பவல்லி, சிவாஜி கணேசன் முதலியோர் நடித்திருக்கிருர்கள். தயாரிப்பாளர் பிரஸாத் படத்தையும் டைரக்ட் செய்திருக்கிருர்.

## மூன்று பெண்கள்

சிட்டடெல் ஸ்டுடியோவில் ஜயஸ்ரீ லக்ஷ்மி பிக்சர்ஸ் ‘மூன்று பெண்கள்’ என்ற படத்தை தயாரித்து வருகிருர்கள். பாலய்யா, மனோஹர், எம். என். ராஜம், பி. கே. சரஸ்வதி முதலியோர் நடிக்கும் இப்படத்தை ஆர். பிரகாஷ் டைரக்ட் செய்து வருகிருர். படம் விரைவிலேயே வெளிவரவிருக்கிறது.

## சிட்டடெலில் ‘மல்லிகா’

டைரக்டர் ஜோஸப் தளியத் தயாரித்து வரும் தமிழ்ப் படத்திற்கு ‘மல்லிகா’ என்று பெயர் தரப்பட்டிருக்கிறது. பத்மினி–ஜெமினி கணேசன் பிரதம பாகத்தில் இப்படத்தில் நடித்து வருகிருர்கள். இதே படம் ‘பாயல்’ என்ற பெயரில் பிரத்தியேக ஹிந்தி நடிகர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்தப் படத்திலும் பத்மினி பிரதம பாகத்தில் நடித்து வருகிருர்.

## ஸ்ரீமதியின் ‘விஷகன்யா’

ஸ்ரீமதி பிக்சர்ஸார் ‘விஷகன்யா’ என்ற படத்தை அடுத்தபடி தயாரிக்க ஏற்பாடுகளைச் செய்து வருகிருர்கள். பிரபல நடிகர்கள் இதில் நடிப்பார்கள்.

## பிரமோதா ‘ஹரிச்சந்திரா’

பிரமோதா பிலிம்ஸார் பிரபல ‘ஹரிச்சந்திரா’ கதையை தமிழில் தயாரிக்கப் போவதாக அறிவித்திருக்கிருர்கள். பிரகாஷ் ஸ்டுடியோவில் தயாராகப் போகும் இப்படத்தை பிரகாஷ் ராவ் டைரக்ட் செய்யப் போகிருர். ஜி. வரலக்ஷ்மி, சிவாஜி கணேசன், தங்கவேலு, எம். என். நம்பியார் மற்றும் பலர் நடிக்கப் போகும் இப்படத்திற்கான வசனங்களை ஏ. கே. வேலன் எழுதியிருக்கிருர்.

## ஜெமினியின் திட்டம்

தமிழ், ஹிந்தி இருபாஷைகளிலும் ஓர் படத்தை டெக்னிகலரில் தயாரிக்கும் பிரம்மாண்டமான திட்டமொன்றை ஜெமினி வகுத்து வருகிறது. கூடுமானல் இப்படம ‘சினிமாஸ்கோப்’ முறையில் ஆங்கிலத்திலும் தயாரிக்கப்படும் என்று வாஸன் சொல்லியிருக்கிருர்.

இப்படத்திற்கு முன்பாக கொத்தமங்கலம் சுப்பு எழுதியுள்ள ‘நீலவேணி’ படமாக்கப்படும் என்று தெரிகிறது. கொத்தமங்கலம் சுப்பு இப்படத்தை டைரக்ட் செய்வார்.

## ‘பத்தினித் தெய்வம்’ வாஹினியில்

ஜெமினி கணேசன், எஸ். வி. ரங்கராவ், வீரப்பா, நம்பியார், சந்திரபாபு, ஏழுமலை, ஜி. வரலக்ஷ்மி, சாவித்திரி, ராஜசுலோசன, லக்ஷ்மிபிரபா, பாக்கியம் முதலிய நக்ஷத்திர நடிகர்கள் நடிக்கும் ‘பத்தினித் செய்வம்’ என்ற தமிழ்ப் படத்தை வி. ஆர். வி. புரொடக்ஷன்ஸார் தயாரித்து வருகிருர்கள். வாஹினியில் தயாராகும் இப்படத்தை ஸி.யெச். நாராயண மூர்த்தி டைரக்ட் செய்து வருகிருர்.

## ரோஹிணியின் ‘ரேணுகாதேவி’

ரோஹிணி பிக்சர்ஸ் எச். எம். ரெட்டி, ‘தந்தை சொல்மிக்க மந்திரமில்லை’ என்று தந்தையின் வாக்குப்படி தாயின் சிரத்தையே துண்டிக்கப்போன பரசுராமரின் சரிதத்தை ருசிமிக்க திரைப்படமாக தயாரித்திருக்கிருர். இப்படம் ‘ரேணுகாதேவி’ என்ற பெயரில் வெகு விரைவில் திரையிடப்படவிருக்கிறது. ஒய். ஆர். சுவாமி டைரக்ட் செய்திருக்கும் இதில் நாகேந்திர ராவ், பண்டரிபாய் இருவரும் பிரதம பாகத்தில் நடித்திருக்கிருர்கள்.

# நட்சத்திர மண்டலத்தில் நாலு வாரங்கள்

'நக்ஷத்திர மண்டலத்தில் நாலு வாரங்கள்' என்ற இந்தப் பகுதியை முதன் முதலாக அறிமுகப்படுத்தியபோது, "கணேஷ் மூவிடோன்" என்று தங்கள் கம்பெனிக்கு பெயர் வைக்கப்பட்ட காரணத்தை டைரக்டர் சுந்தர்ராவ் நட்கர்ணி என்னிடம் விளக்கியதை எழுதியிருந்தேன்.

இம்மாதம் சற்றேரக்குறைய அதே போன்றதொரு சம்பவத்தைப்பற்றி உங்களுக்குக் கூறப்போகிறேன்.

"கண்ணின் மணிகள்" படத்தை தயாரிப்புக்கு எடுத்துக்கொள்ள காரணமாக இருந்தது எது என்பதைப் பற்றி டைரக்டர் ஜானகிராம் என்னிடம் சொன்ன விஷயத்தைச் சொல்லப் போகிறேன்.

மினர்வா மூவிடோன் பல வருஷங்களுக்கு முன்பு ஜெயிலர் என்ற படத்தைத் தயாரித்து வெளியிட்டிருந்தது. அந்தக் கதையைத் தழுவி எழுதப்பட்டது இப்படக்கதை.

நம் நாட்டில் ஏராளமான குருடர்கள் இருக்கிருர்கள். இவர்களுக்கு வழியோ விமோசனமோ கிடைக்க சந்தர்ப்பம் வாய்க்குமென்றே தோன்றவில்லை. இதே சமயம் 'குருடர்களுக்குக் கண்பார்வை மீண்டும் கிடைக்குமா?' என்று கேட்கப்படலாம்.

அமெரிக்காவில் குருடர்களுக்கும் பண்பார்வையளிக்கப்பட்டு வருகிறது. பழுதடைந்துள்ள கண்களை நீக்கி, விட்டு, புதிய கண்களைப் பொருத்துவதன் மூலம் கண்பார்வை அளிக்கப்பட்டு வருகிறது அங்கு.

எல்லாம் சரி, புதிய கண்களை குருடர்களுக்கு யார் கொடுப்பது?

அமெரிக்காவில் இப்பிரச்னை எழாமலில்லை; அதே சமயம் அதற்கு சுமுகமான முறையில் அவர்கள் வழியும் கண்டு பிடித்தார்கள்.

ஒருவர் இறந்தவுடன், அவரது பரிபூரண சம்மதத்தின் பெயரில் அவரது கண்களைப் பெயர்த்தெடுத்து, கண்களைச் சேகரித்து, 'கண்கள் சேமிப்பு நிலையம்' ஒன்றை ஏற்படுத்தியிருக்கிருர்கள்.

இந்த வகையில் இந்தியாவில் ஒரு கண்கள் சேமிப்பு நிலையத்தை உண்டாக்க வேண்டும் என்று டைரக்டர் ஜானகிராம் எண்ணிஞராம்.

"இதற்காகவே கண்களை அடிப்படையாகக் கொண்டு இப்படத்தைத் தயாரிக்க ஆரம்பித்தேன். கண்களைக் கொடுப்பதன் மூலம், கண்பார்வையைக் கொடுக்கமுடியும் என்று விளக்கும் வகையில் இப்படக்கதை அமைந்திருக்கிறது" என்று டைரக்டர் ஜானகிராம் சொன்னர்.

"ஆமாம்! கண்களைக் கொடுப்பது யார்? வெறும் படத்தை தயாரித்துரித்துவிட்டால் மட்டும் போதுமா?" என்று கேட்டேன்.

"இதற்கு ஒரு வழி செய்திருக்கிறன். இப்படத்தின் ஆரம்பதினத்தன்று சமூக, படவுலக பிரமுகர்கள் சிலர் தாங்கள் இறந்ததும் தங்கள் கண்களை எடுத்துக்கொள்ள சம்மதித்திருப்பதை வெளியிட ஏற்பாடு செய்திருக்கிறேன்" என்று சொன்னர் ஜானகிராம்.

நல்லதொரு முயற்சித்தான் என்று சொல்லி வைத்தேன் அவரிடம். தவிர, இம்மாதிரியான நல்லதொரு குறிக்கோளுடன் சில படங்கள் தயாராகுமானல் படவுலகின் மீது ஏற்பட்டிருக்கும் கொஞ்ச நெஞ்ச வெறுப்பும் மாறிவிடலாமல்லவா?

* * *

கண்ணின் மணிகளைப்பற்றிச் சொல்லும்போது மற்ருெரு விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன்.

"இந்தப்படத்திலே குருட்டுப் பெண்ணாக 'பத்மினி நடிப்பதற்கு உங்கள் 'பேசும் படம்'தான் ஓரளவுக்குக் காரணமாக இருந்தது" என்று டைரக்டர் ஜானகிராம் குறிப்பிட்டார்.

பத்மினி குருட்டுப் பெண்ணாக நடிக்கவிரும்பிவதாக 'பேசும் பட'த்தில் ஒரு பகுதியில் குறிப்பிட்டிருந்தாரல்லவா? இதைப் பார்த்ததும் பத்மினியை படத்தில் நடிக்க வைப்பதற்காக ஜானகிராம் அணுகிருராம். பத்மினி முதலில் மறுத்துவிட்டாராம். தவிர, "கண்பார்வையை கண்களைக் கொடுப்பதன் மூலம் மீண்டும் அளிக்க முடியுமா?" என்று கேட்டாராம்.

"நான் அமெரிக்க செய்தி இலாகா வாசகசாலையிலிருந்து சில புத்தகங்களைக் கொண்டுபோய் மேற்கோள்களுடன் காண்பித்தேன். பின்னர் அவரும் நடிக்க சம்மதித்தார்'' என்று சொன்னர் ஜானகிராம்.

* * *

இப்படத்தில் வரும் கதாநாயகனுக்கு தீவிபத்தில்சிக்கி கண்கள் தீய்ந்து விடுகின்றன. இதனால் பார்வையிழந்து விடுகிருன். இதற்காக கதாநாயகனாக நடிக்கும் சுந்தர் 'போலி' கண்களை அணிந்து இதில் நடித்து வருகிருர்.

"இதை அணிந்து நடிக்கும்போது வலி ஏற்படும். ஒரு சமயம் சேர்ந்தாற் போல் பல மணி நேரம் இதை அணிந்திருந்ததால் கண்ணில் ஒரே வலி எடுத்துவிட்டது. பின்னர் கண் வைத்தியசாலைக்கு விரைந்து போகும்படி ஆகி விட்டது!" என்று தனது அனுபவத்தை சொன்னர் சுந்தர்.

இந்தப் போலிக் கண்களுக்காக சுமார் பதினயிரம் ரூபாய்கள் வரை டைரக்டர் ஜானகிராம் செலவழித்திருக்கிருராம்.

* * *

சென்றமாதத்தில் ஒரு நாள் ராஜசுலோசனவை அவரது வீட்டில் சந்தித்தேன்.

சென்னை தியாகராயநகரில் சொந்த வீடு கட்டி வரும் அவர், அட்டையினல் செய்யப்பட்ட அந்த வீட்டின் 'மாட'லைக் கொண்டு வந்து காட்டி வீட்டின் அமைப்பற்றி விளக்கினர்.

அப்படி விளக்கி வரும்போது அதில் வரும் ஒரு பெரிய ஹாலைப் பற்றிக் குறிப்பிட்டார்.

இந்த ஹாலில் அவர் நடன ரிஹர்சல்களை வைத்துக் கொள்ளப் போகிருராம்.

தவிர, "தனிப்பட்ட நடன நிகழ்ச்சிகளில் விரைவில் கலந்து சொல்வதென்றும் நான் தீர்மானம் செய்திருக்கிறேன்'' என்று சொன்னர் அவர்.

அவருக்கு மற்ருரு ஆசையும் இருக்கிறது. அதாவது இன்னும் சில வருஷங்களில் படங்களில் நடித்து முடித்து விட்டு, ஓய்வெடுத்துக் கொண்டு, மேனடுகளுக்குப் பிரயாணம் செய்ய வேண்டுமென்று விரும்புகிருர் அவர்.

* * *

எம். என். ராஜம் இருக்கிருரே அவருக்கு '5' என்ருல் ரொம்பவும்

வி. ஆர். வி. புரொடக்ஷன்ஸார் தயாரித்து வரும் பத்தினித் தெய்வத்தில் சாவித்திரி மிக எளிமையான உடையில் திறமையாக நடிககிருர். சி. யெச். நாராயணமூர்த்தி டைரக்ட் செய்யும் படமிது

பிடிக்கும். அதாவது இந்த இலக்கம் தான் அவரது அதிருஷ்டகரமான எண்ணும்—அதாவது 'லக்கி' நம்பர்.

இந்த ருசிகரமான தகவலை சென்ற மாதம் 'கன்னியின் சபதம்' படப்பிடிப்பின் போது, நெப்டியூன் ஸ்டூடியோவில் அவர் தெரிவித்தார்.

அன்றையதினம் ஸ்டூடியோவுக்கு அவர் புதிதாக வாங்கியிருக்கும் தனது சொந்த 'பியட்' காரில் வந்திருந்தார்.

இந்தக்காரின் எண் 3938. இதை மொத்தமாக கூட்டிப்பார்த்தால் 23 வருகிறதல்லவா? இப்போது 2 ஐயும் 3 ஐயும் கூட்டுங்கள். 5 வருகிறதா?

"இந்த எண் வருவதற்காக எவ்வளவு சிரமப் பட்டேன் தெரியுமா?" என்று அவரது கணவர் சொன்னபோது, ராஜம் அவரைப் பார்த்த பார்வை, "நமக்காகத்தானே சிரமப்படுகிறோம்" என்று சொல்வதைப் போலிருந்தது.

* * *

உயிருள்ளபோதே ஒருவரை இறந்து விட்டதாக எழுதிய ஒருவரை, அந்த நபரே நேரில் பார்த்து தான் உயிரோடு இருப்பதாகத் தெரிவித்துக் கொண்டால் எப்படியிருக்கும்?

ஹாஸ்ய நடிகர் ஸி. எஸ். பாண்டியனின் வாழ்க்கையில் இப்படி ஒரு சம்பவம் நடை பெற்றிருக்கிறது.

அவரது தாயார் இறந்து விட்டதாக ஒரு பத்திரிகையில் எழுதியிருந்ததாகவும், சம்பந்தப்பட்ட நபர் மற்றொருமுறை பாண்டியனின் வீட்டுக்கு வந்த போது, 'இறந்து போனதாக' எழுதப்பட்ட அவரது தாயாரே நேரில் வந்து அவரை வரவேற்றாராம்!

இதைப் பார்க்கும் போது மற்றொரு விஷயமும் எனக்கு ஞாபகம் வருகிறது.

அமெரிக்காவிலே ஒரு பெரிய சர்க்கஸ் கம்பெனி நிர்வாகி, தான் இறந்து விட்டதாக பத்திரிகைகளுக்கு செய்தி அனுப்பிவிட்டார். மறுநாள் எல்லா தினசரிகளிலும் அவரது மறைவுபற்றி பத்தி பத்தியாக எழுதப் பட்டிருந்தன.

இதைப் படித்துப் பார்த்துவிட்டு அகமகிழ்ந்த அவர் "நான் இறந்து போனபின் பத்திரிகைகள் எனக்கு தரும் மதிப்பை அறியவே இப்படிச் செய்தேன்" என்று அறிக்கை விட்டாராம்!

* * *

ஹாஸ்ய நடிகை அங்கமுத்துவிடம் ஒரு அலுமினிய வெற்றிலைப் பாக்குப் பெட்டி இருக்கிறது. "இதில் விசேஷம் என்ன இருக்கிறது?" என்று வாசகர்கள் கேட்கலாம்.

விசேஷமில்லாவிட்டால் நான் ஏன் அதைப்பற்றி இங்கு சொல்ல வருகிறேன்.

'தோழன்' படத்தயாரிப்பளரான ஏ. டி. எம். மிடமிருந்து இந்த பெட்டியை பலத்த போட்டிக்கு நடுவே அங்கமுத்து கைப்பற்றினர்.

அவருடன் போட்டி போட்டவர்கள் யார் தெரியுமா? புளிமூட்டை ராமசாமியும், வி. எம். ஏழுமலையும்தான்!

இந்த போட்டிக்குப் பிறகு உடனே மற்றொரு கண்டம் அந்தப் பெட்டிக்கு ஏற்பட்டது.

கும்மிடிபூண்டியிலே, தூக்குதூக்கி நாடகத்திற்காக அவர் சென்றிருந்த போது, நாடகம் நடப்பதற்காகப் போடப்பட்டிருந்த பந்தல் விழுந்து விட்டது. பெட்டிக்கு பலத்த அடி. அப்படியும் தேடிப்பிடித்து அதைக் கொண்டு வந்துவிட்டார் அங்கமுத்து.

'பட்டகாலே படும்; கெட்ட குடியே கெடும்' என்பதற்கேற்ப மூன்றாவதாக 'ரத்தக்கண்ணீர்' படப்பிடிப்பின்போது அந்தப் பெட்டியின்மீது காரை ஏற்றி விட்டார் ஒருவர்.

இத்தனைக்குப் பின்னரும் அந்தப் பெட்டி, (பலவித வைத்திய சிகிச்சைக்குப் பின்னர்தான்!) அங்கமுத்துவிடம் இருக்கிறது.

இன்றும் நாளையும் படப்பிடிப்புக்குப் போகும் போதும், வெளியே செல்லும் போதும் 'முக்கண்டம்' தப்பிய இந்த 'செல்ல'ப் பெட்டியை எடுத்துச் செல்ல அங்கமுத்து மறப்பதே இல்லை! இதற்கு அவர் தரும் ஒரே பதில் என்ன தெரியுமா?

"அதிருஷ்டம் வாய்ந்தபெட்டி அது!" என்பதுதான்.

# சிரஞ்சீவிக் காட்சிகள்

('சிரஞ்சீவிக் காட்சிகள்' என்ற இந்தப் பகுதியில் தாங்கள் டைரக்ட் செய்துள்ள படங்களில் தங்கள் மனதுக்குப் பூரண திருப்தியை அளித்த காட்சிகளைப்பற்றியும், முதன் முதலாக டைரக்ட் செய்த காட்சி பற்றியும் டைரக்டர்கள் சொல்கிருர்கள்.)

['கலைஞர்' எஸ். பாலசந்தர் வயதில் இளையவர். திறமையில் முதியவர். இவர் டைரக்ட் செய்த படங்கள் ஒவ்வொன்றிலும் ஏதேனும் ஒரு நூதன அம்சம் இருக்கும். பாடல்களின்றி தமிழகத்துக்கு அவர் அளித்த 'அந்த நாள்', இவ்வருஷம் சர்க்காரின் விசேஷ பாராட்டுதல்களைப் பெற்றிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.]

நான் டைரக்ட் செய்த முதல்படம் 'என் கணவர்' தான். என்னை டைரக்டர் என்ற முழுப் பொறுப்பில் அறிமுகப்படுத்தக் காரணமாக இருந்தவர் சந்துலால் ஷா.

அடுத்து நான் டைரக்ட் செய்தவை கைதியும், அந்தநாளும். இதில் நான் டைரக்ட் செய்த சிறந்த காட்சி, அதாவது என் மனதுக்கு மிகவும் பிடித்தமான காட்சி, 'அந்தநாள்' படத்தில் வருகிறது.

டாக்டர் ராஜன் ஒரு என்ஜினீயர். தாய்நாட்டில் தனது திறமைக்கு மதிப்பில்லாமற் போகவே, 'ஐந்தாம் படை' ஆட்களில் ஒருவனுகச் சேர்ந்து விடுகிருன் அவன்.

நம் நாட்டில் குண்டு பொழிய தக்க சமயம் எது என்பதை எதிரி நாட்டவனை ஜப்பானுக்கு உளவறிந்து, ரேடியோ மூலம் அடிக்கடி தெரிவிக்கிருன் ராஜன்.

ஒருநாள் ராஜன் சென்றதும் அவனது அறைக்கு வருகிருள் மனைவி உஷா. தாய் நாட்டுப் பற்று நிறைந்த அவளுக்கு, தன் கணவனின் துரோகச் செயல் தெரிய வருகிறது. அவனது ரகசியக் கருவிகளை உடைத்தெறிந்து விடுகிருள் அவள்.

அதே சமயம் அங்குவரும் ராஜன் அவளைக் கண்டபடி ஏசுகிருன். அவளைக் கட்டிப் போடுகிருன்.

தன் மனைவியின் உடலைத்தான் ராஜனுல் கட்டிப்போட முடிந்ததே தவிர, அவளது தேச பக்தியை அவனுல் கட்டிப்போட முடியவில்லை.

'தேசத்துரோகியான தன் கணவனைவிட, தன் தாய்நாடே சிறந்தது' என்ற முடிவுக்கு வரும் உஷா சந்தர்ப்ப வசத்தால் அவனைத் தன் கையாலேயே சுட்டு விடுகிருள்.

'அந்த நாள்' படத்தில் இந்தக் காட்சியை டைரக்ட் செய்யும்போது என் உள்ளம் கொண்ட மனத்திருப்தி, வேறு எந்தப் படத்திலும் எந்தக் காட்சியிலும் ஏற்படவில்லை. எனது 'சிரஞ்சீவிக் காட்சி' இதுதான்.'

— எஸ். பாலசந்தர்.

* * *

[ஒரு சிறந்த டைரக்டருக்கான 'லக்ஷணங்கள்' அனைத்தும் அமையப் பெற்றவர் கே. ராமனுத். அவர் டைரக்ட் செய்துள்ள 'ஏழைபடும் பாடு'ம் அவ்வருஷத்தின் சிறந்த படமெனத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.]

என்னைப் பொறுத்தவரையில் தான் டைரக்ட் செய்த படங்களில் எனக்கு எந்தக் காட்சி மிகவும் பிடித்தது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. குறிப்பாகச் சொல்லுவதானுல், ரஸிகர்களுக்கு எந்தக் காட்சி மிகவும் பிடிக்கிறதோ, அதுவே எனக்குப் பிடித்ததாக இருக்கும்.

## டைரக்டர்கள் சொல்கிறர்கள்

கே. ராம்நாத்

நான் டைரக்ட் செய்த படங்களில் எனக்கு மிகவும் பிடித்தது 'ஏழை படும் பாடு.' அதில் கந்தன் உமா காந்தனை பூமிக்கடியில் சாக்கடையின் வழியே எடுத்துச் செல்லும் காட்சி மறக்க முடியாத ஒரு காட்சி. இதை படம் பார்த்த ரஸிகர்கள் அனைவரும் பாராட்டினார்கள், எனவே ரஸிகர்களுக்குப் பிடித்தமான இக்காட்சி எனக்கும் பிடித்ததாகத்தானே இருக்க வேண்டும்?

ஜுபிடர் பிக்சர்ஸ் 'கன்னியின் காதலி' நான் முதன் முதலாக டைரக்ட் செய்தது. கலை அம்சத்தைப் பொறுத்து எடை போடும் போது எனக்கு மிகவும் திருப்தியளித்த படம் 'கன்னியின் காதலி' என்றுதான் சொல்ல வேண்டும்.

— கே. ராம்நாத்.

* * *

*[எழுத்தாளராக வாழ்க்கைப் பாதையில் காலடி வைத்து, இன்று பட டைரக்டராக பிரபல மடைந்திருக்கும் ப. நீலகண்டன் கற்பனை செறிவு மிக்கவர். அவரது 'முதல் தேதி' சிந்தனைக்கு ஒரு விருந்தாக அமைந்திருந்தது.]*

'ஓரிரவு' படத்தில் ஜமீன்தாரின் முதல் மைத்துனனாக வருகிறான் ஜெகவீரன்.

சந்தர்ப்ப சூழ்நிலையில் சிக்குண்ட ஜமீன்தார், தன் மனைவியைக் கொலை செய்து விடுகிறார். தன் சகோதரியை ஜமீன்தார் கொலை செய்வதை மறைவிலிருந்து படம் எடுத்து விடுகிறான் ஜகவீரன். அதை அவரிடம் காட்டி பயமுறுத்தி பணமும் பறித்து வருகிறான். இந்த ஜகவீரன் சம்பந்தப்பட்ட ஒரு காட்சியைத்தான், டைரக்டராக நான் மாறியவுடன் முதன் முதல் படமெடுத்தேன். ஏவி. எம். ஸ்டுடியோவில் இது நடைபெற்றது.

என்னை டைரக்டராக்கிய பெருமை 'ஓரிரவு'க்குப் போகிற தென்றால், அடுத்து எனக்கு மிகவும் பிடித்த காட்சியைக் கொண்டுள்ள படமாக திகழுகிறது 'கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி'.

கணபதி மேல் நாட்டு நாகரீகத்தில் வசப்பட்டு, ராகினியை தான் மணக்க வேண்டும் என்று நண்பன் அம்பலத்திடம் சொல்கிறான்.

அவன் வெறுத்து உதறிய சாவித்திரி என்ற அவனது முறைப் பெண் தான், பத்மினி—அம்பலம் ஏற்பாட்டின் படி ராகினியாக வேஷம் போடுகிறாள்.

ராகினிக்கு சங்கீதம் என்றால் ரொம்பவும் பிடிக்கும் என்று தெரிந்து கொள்ளும் கணபதி, அவளை தன் சங்கீதத்தால் மயக்குவதற்குத் திட்டமிடுகிறான்.

ப. நீலகண்டன்

ஆனால் கணபதிக்கோ பாடவராது! நிலைமையைச் சமாளிப்பது எப்படி?

இந்நிலையில் அம்பலம் அவனுக்கு ஒரு யுக்தி சொல்கிறான்.

கணபதி ராகினிக்குத்தெரியும் இடத்தில் உட்கார்ந்து கொண்டு, மறைவிலிருந்து தான் பாடுவதற்கேற்ப வாயசைக்க வேண்டும் என்று அம்பலம் சொல்கிறான். கணபதி அம்பலத்தின் திட்டத்தை ஏற்று வாயசைக்க ஆரம்பிக்கிறான். ராகினியும் கவனிக்கிறாள்.

ஓரிடத்தில் திடீரென்று அம்பலம் பாட்டை நிறுத்தி விடுகிறான். ஆனால் கணபதி மட்டும் வாயை அசைக்கிறான் பாடுவது போல. ராகினிக்கு ஆச்சரியமாகப் போய்விடுகிறது. கணபதி வாயசைக்கும் அதே நேரம், பாட்டு வராமலிருந்தால் யார்தான் சந்தேகப் படமாட்டார்கள்?

ராகினிக்கு சந்தேகம் வரவே விடுவிடென்று கணபதியின் வீட்டுக்குள் போகிறாள்.

அங்கே சென்று பார்த்ததும் தான் கணபதி 'இரவல் குரல்' வாங்க அம்பலத்தின் தயவை நாடிய விவரம் ராகினிக்கு தெரிகிறது.

இந்தக் கட்டம் தான் நான் டைரக்ட் செய்த படங்களிலேயே எனக்குப் பிடித்தமானது; இதில் அம்பலமாகவும் கணபதியாகவும் ராகினியும் நடித்தவர்கள் யார் என்பது படம் பார்த்த உங்களுக்குத் தெரிந்திருக்குமே!

— ப. நீலகண்டன்.



கே. வேம்பு

ராமண்ணா

* * *

['வாழப் பிறந்தவள்' மூலமாக டைரக்டராக அறிமுகமான டி. ஆர். ராமண்ணா ஆர்வமும் திறமையும் நிறைந்தவர். அவரது சமீபத்திய படம் 'குலேபகாவலி'. காளிதாஸ், புதுமைப்பித்தன், காத்தவராயன் கதை அவர் டைரக்ட் செய்யும் படங்களாகும்.]

'வாழப் பிறந்தவள்' படம் வெளி வந்த சமயம் பத்திரிகைகள் எல்லாம் அதை வெகுவாகப் பாராட்டி எழுதியிருந்தன.

அதில் கீதாவாக நடித்த ராஜகுமாரியைப் பற்றி எழுதும்போது, பின் வரும் காட்சியில் அவரது நடிப்பு மிகச் சிறப்பாக இருந்தது என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

அந்தக் காட்சி இதுதான்:

கீதாவுக்கு விவரம் அறியாத வயதிலேயே திருமணமாகிவிடுகிறது. தன் சொந்த அத்தான் ராஜாவை மணக்கும் அவளுக்கு, வயது வந்ததும்தான் விஷயம் விளங்குகிறது. ஆனால் பணத்தாசை கொண்ட ராஜாவின் தந்தை, சுமதிக்கு அவனை மணம்

முடித்துவிடுகிருர். இந்நிலையில் தன் வீட்டிற்கு ராஜா வரப்போகிருன் என்ற தகவல்கேட்ட கீதாவுக்கு ஒரே சந்தோஷம். பாடுகிருள்; ஆடுகிருள். அன்றிரவு படுக்கையில் படுக்கும் அவளுக்குத் தூக்கம் வருவதில்லை. தூக்க மயக்கத்தில் இருக்கும் தன் தாயை அடிக்கடி "அம்மோவ்! அம்மோவ்!" என்று கூப்பிட்டு எழுப்பி ராஜாவைப்பற்றி விவரங்களை விசாரிக்கிருள்,

இந்தக் காட்சியைப் பற்றி நான் குறிப்பிட வந்ததற்கும் காரணமிருக்கிறது. மேற்படி காட்சியைத்தான் நான் முதன் முதலாக டைரக்ட் செய்தேன். எனது முதல் படத்தில் முதல் காட்சிக்கே இவ்வரவேற்பு கிடைத்ததில் எனக்குப் பெருமை இராதா?

நான் டைரக்ட் செய்த முதல் படம் 'வாழப் பிறந்தவள்'. ஆனுலும் 'கூண்டுக்கிளி'தான் என் மனதுக்கு மிகவும் பிடித்திருக்கிறது.

அதில் ஜீவா மங்களாவைக் கற்பழிக்க முயற்சிக்கையில் இடி இடித்து கண் குருடாகிவிடும் காட்சி இருக்கிறதே, அதுதான் நான் டைரக்ட் செய்த படங்களிலேயே எனக்கு மிகவும் பிடித்த கட்டமாகும்.

'வாழப் பிறந்தவ'ளில் என்னை டைரக்டராக்கிய அந்த 'அம்மோவ்' காட்சியையும், 'கூண்டுக்கிளி'யில் மேற்படிக் காட்சியையும் எனது 'சிரஞ்சீவிக் காட்சி'கள் என்று சொல்லலாம். என் வாழ்நாளில் மறக்க முடியாதவை அவை.

— ராமண்ணு.

* * *

*[டைரக்டர் கே. வேம்பு தனக்கென சில நடைமுறைகளை வகுத்துக் கொண்டு, அதன் வழியே மாருது செல்பவர். அவரது படங்களே இதற்குச் சான்ருக இருக்கும். பிலிம் சென்டரின் 'நன்னம்பிக்கை'யையும், 'சுரதலி' சிங்களப் படத்தையும் டைரக்ட் செய்து வருகிருர் அவர். 1934-ல் படவுலகில் பிரவேசித்தவர் அவர்.]*

1940-ம் வருஷம். இடம் நியூடோன் ஸ்டுடியோ. அதில் ஒரு பிரம்மாண்டமான ராஜதர்பார் ஜோடிக்கப்பட்டிருந்தது. தர்பாரிலே அரசன் வீற்றிருக்கிருன். அவனது சபையிலே உள்ள இரு புலவர்களுக்குள் தர்க்கம் நடைபெறுகிறது.

பெண்ணைப்பற்றிய பிரச்னை அது.

"ஒரு ஸ்திரீ எத்தியாகத்தையும் செய்யத் தயாராக இருப்பாள். ஆனுல் கணவனின் இதயத்தில் மற்ருெரு பெண்ணுக்கு இடம் தரப் பொறுக்கவே மாட்டாள் அவள்!" என்று அரண்மனை ஆஸ்தான கவி சொல்கிருர்.

இந்தக் காட்சி 'மதன மாலா' படம் பார்த்தவர்களுக்கு சட்டென்று நினைவுக்கு வரும். நான் தனிப்பட்ட முறையில், டைரக்டர் என்ற பீடத்தில் அமர்ந்து, முதன் முதலாக எடுத்த காட்சிமேலே விவரித்திருப்பதுதான். எனது சிரஞ்சீவிக் காட்சிகளில் இதுவொன்று.

நான் டைரக்ட் செய்த படங்களில் எனது விருப்பத்துக்கு முழுப்பாத்திரமான காட்சிகள் இரண்டுதான். அவை அசோசியேடட் புரொடக்ஷன்ஸ் 'அம்மா' படத்தில் வருகின்றன.

சாந்தம்மா பெண் கேட்க, டி. பாலசுப்ரமண்யத்தின் வீட்டுக்கு வரும் காட்சியையும், படத்தின் இறுதியில் மயானத்தில் திக்குரிசி, லலிதா தோன்றும் காட்சியையும் என்னுல் மறக்கவே முடியாது.

முதல் காட்சியை எடுக்க எனக்கு ஏழு நாட்கள் பிடித்தன. நூற்றிருபத்தெட்டு ஷாட்டுகளில் இதை எடுத்தேன்.

இறுதிக் கட்டத்தில் லலிதா தன் தவறுக்குப் பிராயச்சித்தம் செய்து கொள்ளும் கட்டத்தில் நடிகர்களின் நடிப்பு எனக்குப் பரிபூரணத் திருப்தியை அளித்தது.

என் வாழ்நாளில் 'மதனமாலா' 'அம்மா' இரண்டையும் என்றும் நான் மறக்கமுடியாது.

— கே. வேம்பு.

இந்தப் படத்தை எந்த இளவரசனுக்கு அனுப்பினாலும் உடனே! திருமணத்திற்கு நாள் குறித்துவிடுவான்!

—'நாகுல சவிதி'யில் ஜமுனா.

'பால சந்யாசம்ம கதா'வில் ஜி. வரலக்ஷ்மி, பழங்காலப் பொன்னணிகளைச் சுமக்கிறார்.

# திங்கள் ★★★★★

மாதப் பத்திரிகை

பிரதி ஆங்கில மாதம் 15-ம்தேதி வெளிவருகிறது.

திங்கள் தனக்கென ஒரு புதிய பாதை வகுத்துக் கொண்டிருக்கிறது. கட்டுரைகள், படங்கள்—கதைகள் கிடையாது. ஏராளமான விஷயங்களைப் பற்றிப் பலதரப் பட்டவர்கள் எழுதும் கட்டுரைகள்—விஷயங்கள் கணக்கி லடங்கா. படக் கட்டுரைகள் ஒரு தனி அம்சம். மறக்க முடியாத சம்பவம், ஹாஸ்ய சம்பவம்—இவை விசேஷ அம்சங்கள்.

தனிப் பிரதி விலை எட்டு அணா

வருஷ சந்தா ரூபாய் ஆறு

★

## ராமநாத் பப்ளிகேஷன்ஸ்

சென்னை-2

---

பிப்ரவரி இதழில் :

**போலீஸ் நாய்கள்—கும்பகோணம் - விசேஷ படக் கட்டுரைகள்**

**ஏராளமான படங்கள் - சுவை மிகுந்த கட்டுரைகள்.**

இன்றே சந்தாதாரராகச் சேருங்கள்.

# ★ "அயன்" ஸ்திரீ பார்ட் ★

[இன்று படவுலகில் வில்லாதி வில்லன்களாகவும 'நிகரில் லாக் கோவல' கதாநாயகர்களாகவும், ஹாஸ்ய மேதைகளாக வும் விளங்கும் பழைய நாடக நடிகர்களில் நூற்றுக்குத் தொண் ணூற்றென்பது பேர், அவர்களது நாடக நாட்களில் 'அயன் ஸதிரீ பார்ட்' போட்டவர்கள்தான். சொல்லப் போனால ஸதிரீ பார்ட் போடாமல் யாரும் நடிகராகியிருக்க முடியாது என்பதே உண்மை. அப்படி ஸ்திரீ பார்ட் போட்டு ரசிகர்களை மயக்கி முன்னணிக்கு வந்து, இன்று பட உலகில் சக்கைப் போடு போடும் நடிகர்களின் ரஸமான 'ஸ்திரீ பார்ட்' அனுபவங்கள் இந்தப் பகுதியில் வெளியிடப்படுகின்றன.]

நமது ஹாஸ்ய நடிகர்களில் தனக் கென்று ஒரு தனிப் பாணியை அமைத்துக்கொண்டு ரசிகர்களைச் சிரிக்கச் செய்யும் டி. ஆர். ராமச் சந்திரன், பல வருஷங்கள் சிரிப்பையே அறியாதவராக இருந் தார். துன்பத்துக்குமேல் துன்பம் அவரைத் தொடர்ந்துவந்து சித்திர வதை செய்து கொண்டிருந்தது. இந்த அனுபவமே அவரைப் பிறகு ஹாஸ்ய பாகத்திற்கு இழுத்துச் சென்றது. சேற்றில் செந்தாமரை மலர்வதுபோல வறுமையிலும் கஷ்டத் திலும்தான் மகிழ்ச்சி தோன்றுகிறது. ராமச்சந்திரன் மட்டும் கஷ்டப்பட்டி ராவிட்டால் மகிழ்ச்சியை மற்ற வருக்குக் கொடுக்கும் பாக்கியமும் கிடைக்காமல் போய் விட்டிருக்கும். அவரை இந்தப் பகுதிக்காகப் போய்ப் பார்த்தேன். அவர் தனது அனுபவங் களை ரசமாக எடுத்துச் சொன்னார்.

ராமச்சந்திரன் அப்போதுதான் ராகவேந்திரராவ் என்பவரது முயற்சி யால் ஜெகந்நாத அய்யரின் மதுரை பால மோகன ரஞ்சித சபையில் நடிக ராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். முதல் நாளே அவருக்குப் பாவாடை தாவணி கட்டிவிட்டார்கள். பாம்பைப் போல் நீண்ட கருங் கூந்தல்; நெற்றி யில் காலணா அளவு ஜிகினுபோட்ட குங்கும பொட்டு; கண்ணுக்கு மை; கை நிறைய வளையல்கள் ; பெருத்த மார்பகம் இத்தியாதி வைபவங்க ளுடன் காட்சியளித்த ராமச்சந்திரன் கண்ணாடிக்கு முன்னால் பல மணி நேரம் நின்னு கொண்டிருந்தார்!

அப்போது அங்கே நாலைந்து பெண்கள் வந்தார்கள்.

'ஏண்டியம்மா! இவதான் இன்னிக்கி கம்பெனிக்கி வந்த புதுப்பொண்ணு?' என்று ஒருத்தி மற்றவளிடம் கேட்டாள்.

இன்னொருத்தி ராமச்சந்திரனைப் பார்த்து, "நீதானு அது?" என்றாள். ராமச்சந்திரனுக்கு அவள் 'அது' என்று கேட்டது தூக்கி வாரிப் போட் டாலும் தன்னை ஒரு ஆண் என்பதை அந்தப் பெண்கள் புரிந்து கொள் ளாதது மகிழ்ச்சியைக் கொடுத்தது. "ஆமாம்; இன்னிக்கி வந்தவ நான் தான்" என்று ஒரு வெட்டு வெட்டிய படி சொல்லிவிட்டு அவர்களைப் பெருமையாகப் பார்த்தார். அப் போது அங்கே நாடக வாத்தியார் வந்தார். வெட்கத்துடன் ராமச்சந் திரன் கண்ணாடியைப் பார்த்துவிட்டு ஒதுங்கி நின்றார். வாத்தியார் அந்தப் பெண்களைப் பார்த்து, "டேய் தோழிப் பசங்களா! புதுசா வந்திருக் கான் இவன். ஏதாவது குறும்புத்தன மாக கலாட்டா பண்ணி பயமுறுத்தி டாதீங்க" என்றார். அப்போதுதான் தன்னை அந்த 'கட்டையில் போகிற' பையன்கள் கலாட்டா செய்ததை ராமச்சந்திரன் அறிந்தார்! உடனே தோளில் தன் முகவாய்க் கட்டை யால் இடித்துக் கொண்டு அப்பால் சென்றார்!

முதல் நாள் நாடகத்தில் மேடை யிலே அந்த தோழி நண்பர்களுடன்

நடனமாடினார். அவர் இயற்கையிலேயே சிவந்தமேனியும் நல்ல உடற்கட்டும் கொண்டவர். வேஷம் பகு பிரமாதமாக இருந்தது. சபையினர் அவரையே உற்றுப் பார்த்தபோது வெட்கமாகப் போய்விட்டது! போதாக் குறைக்கு கதாநாயகனான ராஜபார்ட் நடிகர் வேறு, 'யாரோ புதுசுபோல் இருக்கு' என்று அவரையே பார்க்கவே அவருக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது! அவரிடம் மற்ற தோழிகளுக்குப் பொறாமைகூட வந்துவிட்டதென்றால்...!

இந்தக் காரணங்களால் ராமச்சந்திரன் வெட்கப்படப் போய் அது அவரது திறமையாக மற்றவர்களால் கருதப்பட்டது. அடுத்து ராமச்சந்திரனுக்கு அந்த வேஷத்தில் பாராட்டும் பரிசுகளும் குவிய ஆரம்பித்தன. 'பெண் வேஷத்திற்கே இவ்வளவு கவர்ச்சி இருக்கும்போது பெண்ணாகவே பிறந்து விட்டிருந்தால் எப்படியிருக்கும்?' என்று, தான் பெண்ணாகப் பிறக்காமல் போய் விட்டதற்காக ராமச்சந்திரன் வருத்தப்பட்ட நாட்கள்கூட உண்டாம்!

இப்படிச் சில மாதங்கள் கழிந்ததும் ராமச்சந்திரனுக்கு ஒருவித பயம் ஏற்பட்டது. தன்னுடைய அவயவங்களிலும் நடை உடை பாவனைகளிலும் பெண்மை அதிகமாவதை உணர்ந்தார்! நன்றாக நடிக்கப்போய் ஆணுமில்லாமல் பெண்ணுமில்லாமல் ஆகிவிடப் போகிறதே என்று பயப்பட்டார். அப்போதுதான் அவரது 'விழிகள்' அவருக்கு வழிகாட்டி விட்டன! போவோர் வருவோரையெல்லாம் 'விழி விழி' என்று விழித்துப் பார்த்தார். அந்த விழிகளை அவர் உருட்டும் விதத்தைக்கண்டு விழுந்து விழுந்து சிரித்த சக நடிகர்கள் 'வாத்தியாரிடம் சொன்னார்கள். சிரிக்க வைக்கும் திறமை கொண்ட அவரை ஹாஸ்ய பாகத்தில் நடிக்கச் செய்து விட்டார் வாத்தியார். இல்லாவிட்டால் அழகான தேவமாதாக வரும்போது, தாடகை, சூர்ப்பனகை முதலிய ராக்ஷஸிகளைப்போல் விழித்துக் கொண்டு இருந்தால் சபையில் கலாட்டா செய்ய மாட்டார்களா! "நான் சமயோசிதமாக விழித்தால் தான் பாவாடை தாவணியை அவிழ்த்துப் போட்டு விட்டு வேட்டி கட்ட முடிந்தது." என்று தன் விழியைப்பற்றிக் கூறினார் டி. ஆர் ஆர். அவரது ஹாஸ்யம் தமிழ்ப்பட உலகிற்கு பெரிதும் பயன் பட வேண்டு

ஹாஸ்ய நடிகர் ராமச்சந்திரனை....

பெண் வேஷத்தில் பார்த்தால்...!

'அப்பா' டி. பாலசுப்பிரமணியம்... எப்போது அம்மாவானுர் தெரியுமா?

மென்றிருக்கும் போது, அவர் ஸ்திரீ பார்ட்டாகவே இருந்திருந்தால் என்னவாகியிருக்கும்? "இப்பகூட நான் கள்வனின் காதலியில் பெண் வேஷம் போட்டேனே. நமக்கு அந்த வேஷம் போட்டா ஜோராக இருக்கும். நீங்ககூட மயங்கிடுவீங்க" என்று அவர் சொன்னபோது நான் ஓடி வந்து விட்டேன். அவரது பெண் வேஷம் முத்தய்யனைப் போல் நம்மையும் பரலோகத்துக்கு அனுப்பி விட்டால்......?

டி. ஆர். ராமச்சந்திரனைப் பார்த்து விட்டு நேரே அனுபவ நடிகர் டி. பாலசுப்பிரமணியம் வீட்டிற்குச் சென்றேன். வழக்கம் போல அவர் தான் வளர்க்கும் மீன்களுக்குத் தண்ணீர் மாற்றுவது, தீனி போடுவது போன்ற வேலைகளில் மூழ்கியிருந்தார். "ஸ்வோர்ட் டெயில் குட்டி போட்டிருக்கு! எடுத்து தனியா போட்டுட்டு வந்து விடுகிறேன்" என்று சொல்லி அவைகளைக் கவனித்து விட்டு வந்து உட்கார்ந்தார். 'நீங்கள் நாடகங்களில் பெண் வேஷம் போட்டதுண்டா?' என்றபோது அவர் என்னைப் பார்த்துப் புன் முறுவலித்தார்! அதிலே இந்தக்காலத்து பெண்களில் பலரிடம் காணப்படாத வெட்கம் குமிழிட்டது! 'ஸ்திரீ பார்ட் நடிகனாக நான் இருந்ததில்லை. சந்தர்ப்பம் வரும் போது போட்டிருக்கிறேன்' என்று சொல்லி விட்டு சம்பவங்களையும் குறிப்பிட்டார்.

பாலசுப்பிரமணியம் அப்போது ராஜாம்பாள் நாடகக் கம்பெனி நடிகர். சரியான காளைப்பருவம். நல்ல திடகாத்திரமும் கவர்ச்சியான தோற்றமும் கொண்ட அவர் முக்கிய வேஷங்களில் நடித்து வந்தார். திருவாரூர் கருணாநிதி தியேட்டரில் முகாமிட்டிருந்த கம்பெனி, அன்று பவளக்கொடி, நாடகத்தை நடத்த விருந்தது. அல்லி, பவளக்கொடி இரண்டு ஸ்திரீபார்ட் நடிகர்களும் காலையில் சகஜமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். பிற்பகலில் அல்லிக்கு ஜுரம் கண்டது. போகப் போக ஜுரவேகம் அதிகரித்ததே தவிர குறைய வில்லை. முக்கிய வேஷதாரி திடீரென்று நோய் வாய்ப் படவே எல்லோரும் யோசிக்க ஆரம்பித்து விட்டார்கள். நாடக பாத்திரங்களின் வசனம் பாடல்கள் எல்லாம் வழக்கம்போல் எல்லோருக்குமே பாடமாகியிருந்தது. வாத்தியார் பாலசுப்பிரமணியத்தை பார்த்தார். அவ்வளவுதான் பாலசுப்பிரமணியம் புடவை கட்டிக்கொண்டார்! அன்று அர்ஜுன வேஷதாரிக்கு எதிரே நெளிந்து நின்றுர் அவர்.

"எனக்கு ஸ்திரீபார்ட் போடுவதென்ருல் பயமில்லாவிட்டாலும் கவலை உண்டு. நமது இயற்கைக்கு நேர் எதிரிடையான ஒரு வேஷத்தைத் தாங்கும்போது ஒரு இம்மியும் பிசகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எனக்குச்சரியான பருவம்வந்த காலம் அது. நிமிர்ந்த நடை; கட்டுக் கோப்பான உடற்கட்டு; ராஜபார்ட் டெல்லாம் போட்டு நிமிர்ந்து நடந்ததால் ஏற்பட்டிருந்த வீரிய நடை. அப்போது போய் நான் ஸ்திரீபார்ட் போட நேர்ந்தது.

"நிமிர்ந்த உடலை வளைத்து நெளித்துக் குறுக்கிக் கொள்ள வேண்டும். அதிலே நயமும் இருக்க வேண்டும். இடை சிறுத்தது போல் நாணிக் கோணி நடக்க வேண்டும். குரலை மென்மைப்படுத்த வேண்டும். கண்ணின் பார்வையிலே ஒரு போதையைக் கொள்ள வேண்டும். இப்படிப் பெண்மையை நாம் அடையும்போது சிறு தவறு நேர்ந்தாலும் நம்மைக் காட்டிக் கொடுத்து விடும் அந்தப் பெண்மை. ஆகவே ஸ்திரீ பார்ட்டில் தோன்றுவதற்காக நம்மைக் கஷ்டப்படுத்திக் கொள்ள வேண்டும். நான் அல்லி வேஷம் போட்ட அன்று எம். எஸ். முத்துகிருஷ்ணன் அர்ஜுனன் வேஷம் போட்டார். அவர் என்னைவிட உயரத்தில் குறைந்தவர் அவருக்கு அருகே நான் நிற்பதென்ருல் எப்படி உடலை குறுக்கிக் கொள்ள வேண்டும், பாருங்களேன். இந்தக் காலத்தில் பட உலகில் இந்தக் கவலையெல்லாம் கிடையாது! எட்டடி உயரமிருக்கும் கதாநாயகிக்கு ஆறடி உள்ள கதாநாயகனைப் போட்டு விடுவார்கள்! அப்போது இதெல்லாம் நடக்காது" என்று விவரமாக எடுத்துச் சொன்னுர் பாலசுப்பிரமணியம்.

அதற்குப் பிறகு சென்னை ஒற்றைவாடையில் ஒரு ஸ்பெஷல் நாடகத்தில் நடித்தார் பாலசுப்பிரமணியம். சுமார் 1928-ம் வருஷம் நடந்தது இது. அன்று அவர் ராமாயண நாடகத்தில் சீதை வேஷம் போட்டார். அசோக வனத்திலே சீதையின் சோகக் காட்சியில் நடிக்கும்போது அழுதிருக்கிருர் அழுதிருக்கிருர், அப்படி அழுதிருக்கிருர்! பெண் வேஷம் போடும்படி நேர்ந்து விட்டதற்காக அழுதாரோ, ராமனை நினைத்துக் கொண்டு அழுதாரோ தெரியாது. ஆனுல் அந்தக் கட்டத்தில் கண்ணீர் விடாத ரசிகர்களே இல்லை. "பெண் வேஷம் போடுவது ஒரு ஆண்தான் என்பது ரசிகர்களுக்குத் தெரியும். ஆனுல் காட்சிகளிலே எமது நடிப்



என். என். கண்ணப்பாவும்..

பெண் வேஷம் போட்டவர்தான்

பால் அதை மறையும்படிச் செய்ய வேண்டியது எங்கள் பொறுப்பாகிறது. அல்லி வேஷம்கூடப் பரவாயில்லை. வீராவேசமாக நடித்துச் சமாளித்து விடலாம். ஆனால் சோக பாத்திரங்களில்தான் உயிர் போய் விடும்" என்றார் டி. பாலசுப்பிரமணியம். 'இன்றும்கூட நமது நடிகைகளில் பலரைவிட அவர் பெண் வேஷத்தில் தோன்றினால் நன்றாகத்தான் இருக்கும்' என்று நினைத்தபடி, மீனைக் கவனிக்கும்படிக் கூறிவிட்டு, என். என். கண்ணப்பாவிடம் வந்தேன்.

நாடகங்களில் பெண் வேஷம் போடாவிட்டால் அவன் நடிகனே அல்ல என்று கருதப்படுகிறது. கண்ணப்பா 1937-ம் வருஷம் அக்டோபர் மாதம் 20-ம் தேதி நவாப் ராஜமாணிக்கம் கம்பெனியில் சேர்ந்தார். சென்னை ராயல் தியேட்டரில் கம்பெனி ஏசுநாதர் நாடகத்தை நடத்திக்கொண்டிருந்தது. சேர்ந்ததும் சமரிய ஜாதிப் பெண்ணாக முதன் முதலில் நடித்தார் கண்ணப்பா. அப்போது அவருக்குச் சாரீரம் கணீரென்றிருந்தது. ஆனால் பெண்வேஷம் பொருத்தமாக இல்லை. கண்ணப்பா சங்கோஜம் மிகுந்தவர். முதல் நாளன்று ஒரு பெண் வேஷ நடிகனை உண்மையிலேயே பெண் என்று நினைத்து மரியாதையோடு ஒதுங்கினார்.

கம்பெனிகளில் பாடத் தெரிந்திருப்பவர்கள் இருப்பார்கள். அனேகமாக எல்லோரும் கட்டுக் குடுமியுடன் காட்சியளிப்பார்கள். இவர்களை பெண் ஆண் என்று கண்டு பிடிப்பது மிகவும் சிரமம். கண்ணப்பா ராஜபக்தியில் விக்ராந்தனின் மனைவி தேவாங்கனையாக வேஷம் போட்டு பிரமாதமாக நடித்து விட்டார். அத்துடன் பிரேமகுமாரி, கிருஷ்ணலீலா, சதிஅனுசுயா, மனோஹரா, துருவன், ராமாயணம் போன்ற நாடகங்களில் அயன் ஸ்திரீ பார்ட் போட்டார். அப்போதெல்லாம் அவர் ஒரு விஷயத்தை உன்னிப்பாகக் கவனித்தார். பெண்வேஷம் மட்டும் போட்டுக் கொண்டுவந்த நடிகன் தனது ஆண்மையை இழந்து வருவதையும் அவன் நடையுடை பாவனைகளிலும் பேச்சிலும் பெண்மை பிரதிபலித்ததையும் கண்டு திடுக்கிட்டார். அதிலிருந்து அயன் ஸ்திரீ பார்ட்டை விட்டொழிக்க வழிதேடினார். நல்லவேளையாக அவர் அயன் ராஜபார்ட்டிலும் நடித்துக் கொண்டிருந்ததால் இந்த ஆபத்து அவருக்கு ஏற்பட வில்லை. அயன் ராஜபார்ட்டில் அவருக்கு நல்ல வரவேற்பிருந்ததால் அதிலேயே அவரை நடிக்கச்செய்தார் நவாப். தான் கம்பெனியில் இருந்தவரை நடித்தார் கண்ணப்பா.

"நாடகக் கம்பெனிகளில் கட்டுப்பாடுகள் அதிகம். ஆண் வேஷம் போடுபவனுக்கு மற்ற பெண்களுடன் பழக (ஏன் பார்க்கக்கூட முடியாது) சந்தர்ப்பமே கிடைக்காது. ஆகவே பெண் வேஷதாரியுடன் ராஜபார்ட் நடிகன் தவறான வழிகளில் ஈடுபடும் பயங்கரம் நாடக கம்பெனிகளில் நிறைய உண்டு. பெண் வேஷதாரியும் மேடையில் தோன்றும்போது தவிர, மற்ற சமயங்களில் யாரையும் பார்க்க முடியாது. அதனால் தன் வேஷத்திலே லயித்து லயித்து நடித்து கடைசியில் பெண்மையின் பாலிஷ் பெற்று விடுவான். இந்த துரதிருஷ்டம் பிடித்த நடிகன் அந்தக் கம்பெனியை விட்டு வெளியேறினால் வாழ முடியாது. ஆண் வேஷங்களில் தோன்ற அவனது சரீர அமைப்பு இடம் கொடுக்காது. பெண்களே நடிக்கும் இந்தக் காலத்தில் பெண் வேஷக்காரன் எதற்கு? வெளி வேலைக்குச் சென்றாலும் 'அலி' என்றழைத்துக் கேலி செய்வார்கள். இப்படி அயன் ஸ்திரீ பார்ட்டினால் வாழ்வையே பாழாக்கிக் கொண்டவர்கள் எத்தனை பேர் தெரியுமா?"... கண்ணப்பாவின் கண்களில் உணர்ச்சி மிகுதியால் நீர் சொரிந்தது. ஒரே நாடகக் கம்பெனியில் பல வருஷம் ராஜபார்ட் போட்டு நடித்து வந்திருக்கும் கண்ணப்பா, தன் சகநடிகர்களின் நிலையைப் பற்றிக் கூறிய விஷயத்தைப் பற்றி யோசித்தேன்.

"நீங்கள் இப்படிச் சொல்லுகிறீர்களே ஒழிய இப்போதெல்லாம் நடிகர்கள் பெண் வேஷங்களில் வருவதை ஒரு 'பாஷ்'ஆகக் கருதுகிறார்களே, அதற்கு என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டேன். "தொழிலில் கண்டிப்பாக இருக்க முடிவதில்லை" என்றார் கண்ணப்பா. நானும் நடையைக் கட்டினேன். ★

# ★ சாயிராம் ★

அன்று அந்தப் பள்ளிக்கூடத்தில் பரீக்ஷை நடந்து கொண்டிருந்தது. ஐந்தாவது வகுப்பு உபாத்தியாயர் தனது 'சோடா பாட்டில்' மூக்குக் கண்ணுடியை மூக்கின் நுனியில் தள்ளி, அதற்கும் புருவத்திற்கும் இடையிலிருந்த 'இடைவெளி'யால் கூர்மையாகப் பார்த்துக் கொண்டிருந்தார். மனக்கணக்கு பரீக்ஷையின் கடைசி கேள்வி அது.

"ஐந்து சேர் கொண்டது ஒரு வீசை. ஒருவன் இருபத்தி ஏழரை சேர் திராக்ஷைப் பழம் வாங்கினுல் அது எத்தனை வீசை? ஒன். டூ.. த்ரீ! எல்லோரும் பலகைகளைக் கீழே வையுங்கள்" என்று அதட்டி விட்டு, ஒவ்வொரு மாணவனின் பலகையையும் பார்த்து மார்க்குகள் போட்டுக் கொண்டே வந்தார். கடைசி பலகையில் உட்கார்ந்து கொண்டிருந்த சிறுவன் அவரைப் பார்த்து விழி விழி என்று விழித்தான். அவன் பலகையை வாங்கிப் பார்த்தார் அவர். அவரது புருவம் நெரிந்தது. கண்கள் சிவந்தன. தலைப்பாகையை எடுத்து விட்டு வழுக்கைத் தலையில் 'லொட் லொட்'டென்று அடித்துக் கொண்டார். "டேய் சீதாராமா! என்னடா இது?" என்று கோபத்துடன் அந்தச் சிறுவன் முகத்திற்கெதிரே பலகையைப் பிடித்தார்.

"தங்கக் குடமெடுத்துத்
தண்ணிக்கிப் போறவளே—என்
தங்கம் ரத்தினமே—அடி என்
ரங்கோன் ரத்தினமே...
ஆ.. ஜணுக்தா... ஆ ஜுமுக்தா.
ஆ... குமுக்தா... குமர குப்பான்...
ஹை... ஹை..."

என்று எழுதப் பட்டிருந்ததைப் பார்த்த அந்த மாணவனின் முகம் மலர்ந்தது! 'நாமாக்கும் இப்படி எழுதியிருக்கிறோம்' என்ற பெருமையோடு ஆசிரியரைப் பார்த்துப் புன்முறுவலித்தான்! அதைவிட எரியும் நெருப்பில் எண்ணெயை விட்டான் என்றே சொல்லலாம். அவ்வளவுதான், கோபம் கொண்ட ஆசிரியர் பையன் முதுகில் பட்டாஸ் சுட்டு விட்டு, "டேங்கப்பா! நீ தயவு செய்து பள்ளிக்கூடத்தை விட்டுட்டு டிராமா கம்பெனிலே சேர்ந்துடு. இந்த முப்பத்தொன்பது குழந்தைகளாவது பிழைத்துப் போகட்டும்"





என்று கெஞ்சிக் கேட்கவும் செய்தார். ஆசிரியரின் கோரிக்கைக்கிணங்க, ஐந்தாவது வகுப்பில் மும்முறை முனைந்த சீதாராமன், சகமாணவர்களின் நல்வாழ்வுக்காகத் தன் படிப்பைத் தியாகம் செய்தான்! ரோஷக்காரனுன அவன் மறுதினம் கூடப் பள்ளிக்கு வரவில்லை. இந்த ரோஷக்கார பிள்ளைதான் இன்று பட உலகின் ஹாஸ்ய நக்ஷத்திரங்களில் ஒருவராகத் திகழும் சாய்ராம் என்ருல் ஆச்சரியமாக இருக்கிறதா? சாய்ராம் என்பது அவரது அசுவமேதயாகத்தின் போது அவருக்கு ஏற்பட்ட பெயராகும். விவரமாகச் சொல்லுகிறேன், கேளுங்களேன்!

சுமார் முப்பது, முப்பத்தைந்து வருஷங்களுக்குமுன் அறந்தாங்கியில் கிட்டாச்சி என்கிற கிருஷ்ணசாமி அய்யர் வழக்கறிஞராகப் பணியாற்றி வந்தார். கிட்டாச்சி அய்யர் என்ருல் அந்த வட்டாரத்திலே அறியாதவரே கிடையாது. அவரது தர்மபத்தினி பர்வதம்மாள். அவர்களுக்கு வெங்கடேஸ்வரன், சீதாராமன், விசாலம் என்ற மூன்று குழந்தைகள் பிறந்தனர். சீதாராமன் துன்மதி வருஷம் மார்கழி மாதம் 8-ம் தேதி பிறந்தார். பிறந்த இரண்டு ஆண்டுகளிலேயே அப்பாவை விழுங்கிவிட்டு, திருச்சி ரயில்வேயில் வேலை பார்த்து வந்த தமையனுரிடம் வந்து சேர்ந்தார். தகப்பனுர் இல்லாத குறையைப் போக்கி அவரது தேவைகளையெல்லாம் பூர்த்தி செய்தார் தமையனுர். நாடகம், சினிமா என்ருல் முதல் வரிசையில் சீதாராமனை பார்க்கலாம். நாடகப் பாடல்கள் மனப்பாடம் பிள்ளையாண்டானுக்கு. அதை விட்டு

விட்டு மூத்த சகோதரர் அவரைப் பள்ளியில் சேர்த்தார். முட்டி மோதி எப்படியோ ஐந்தாவது வகுப்புக்கு வந்து அனுபவமும் பெற்று விட்டார் சீதாராமன்!

உபாத்தியாயர் பள்ளிக்கு வர வேண்டாமென்று கேட்டுக் கொண்டதும் நாடகக் கம்பெனியில் சேர விரும்பினார் சீதாராமன். ஆனால் முத்தண்ணா, தாயார் யாருக்குமே இது பிடிக்கவில்லை, ஆகவே இரவோடிரவாக யாருமறியாமல் வீட்டை வீட்டுக் கிளம்பி 'சொந்த ரயி'லில் சிதம்பரம் வந்தார். அங்கே நடராஜனைத் தரிசித்துக்கொண்டு நேரே சென்னைப்பட்டணம் வந்து சேர்ந்தார்! பதின்மூன்று வயதே நிரம்பிய சீதாராமன் சென்னையில் திக்கு திசை தெரியாமல் திண்டாடினார். கார்ப்பொரேஷன் குழாயில் தாகம்தீரும் வரையிலாவது ஜலம் வந்த காலம் அது! ஆகவே சீதாராமனின் சாப்பாட்டுக் கவலை தீர்ந்தது!

சென்னை தங்கசாலையிலே அப்போது அயன் ராஜபார்ட் நடிகர் மணி அய்யர் தங்கியிருந்தார். சீதாராமன் தட்டுத்தடுமாறி அவரிடம் போய்ச் சேர்ந்தார். எந்தக் காரணத்தாலோ அவருக்குப் பையனைப் பிடித்துப்போய் விட்டது. தன்னுடனேயே வைத்துக் கொண்டு சாப்பாடு துணி மணிகளுக்கும் வசதி செய்தார். அவர் நாடகங்களுக்குப் போகும் போதெல்லாம் சீதாராமனும் உடன் செல்வார். அவர் வீட்டின் எதிரில் காட்டிலாகா உத்தியோகஸ்தர் ஒருவர் இருந்தார். அவர் சீதாராமனின் நடை, உடை ,பாவனைகளிலிருந்து 'வீட்டை விட்டு ஓடி வந்த

நிலேயைப் புரிந்து கொண்ட முத் தண்ணு உத்திரவு கொடுத்து விட் டார். அன்றே சீதாராமன் சென் னேக்குப் பயண மாகி கன்னேயா வின் தம்பி கிருஷ் ணேயாவைச் சந் தித்தார். 'சரவண பவ' பாடலே சீதா ராமன் பாடக் கேட்ட கிருஷ் ணேயா அன்றே வேஷம் போடச் சொல்லி விட்டார். ராமாயண நாடகத் தில் ஒரு ராக்ஷஸி வேஷத்தோடு சீதாவனவாச கட் டத்தில் நடித்தார் சீதாராமன். அன்று ஒரு வேடிக்கை நடந்தது.

சீதாதேவியும் அரக்கிகளும் அசோக வனத் தில் இருக்கிருர்கள்.

வன்' என்று யூகித்து அழைத்து ஜாடையாக வீட்டு விலாசத்தைத் தெரிந்துகொண்டார். இரண்டொரு தினங்களில் வெங்கடேஸ்வரன் தன் தம்பியை அழைத்துவர ஒரு நண்பரை அனுப்பிவிட்டார். இஷ்டமில்லா விட்டாலும்கூட சீதாராமன் திருச்சி திரும்பவேண்டியதாயிற்று. படிப்பில் போட்டால் தம்பி ஓடி விடுவான் என்று பயந்த அண்ணு, புல்லாங் குழலில் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தார். இரண்டு மாதங்களில் புல்லாங்குழலில் இருந்த காற்றை யெல்லாம் ஊதிவிட்டு நிறுத்திவிட் டார் சீதாராமன்.

ஒருநாள் அண்ணு எதிரில் போய் நின்று பூமியைப் பார்த்தபடி, "நான் மெட்ராஸ் போயி டிராமா கம்பெனிலே சேர்ந்துடப் போறேன்" என்ருர். அதாவது அந்த அழகான தம்பி அண்ணுவுக்கு எதிர் நின்றுபார்த்துப் பேசுவதில்லேயாம்! அவ்வளவு அடக்க ஒடுக்கம் உள்ளவர்! தம்பியின் மன

அப்போது ஆஞ்சனேயர் வந்து அரக்கிகளே மந்திரத்தால் மயக்கி தூங்கச் செய்து சீதாதேவியிடம் ராமனின் கணேயாழியைக் காட்ட வேண்டும். நாடகத்தில் ஹனுமான் வேஷத்தில் புகழ் பெற்று 'ஆஞ்ச நேயர் கோவிந்தசாமி நாயகர்' என்றே அழைக்கப்பட்ட கோவிந்த சாமி நாயகர் நடிப்பதாக சீதாராமன் அறிந்தார். அவரைப்பார்க்க ஆவ லுண்டாயிற்று. அதேசமயம் ஹனு மார் வேஷத்தில் வந்தார் கோவிந்த சாமி. மந்திரம் போட்டார். எல்லா அரக்கிகளும் சுருண்டு விழுந்தனர். சீதாராமனுக்கு சுருண்டு விழவேண்டு மென்பதும் தெரியாது. நாயகரை பார்க்கவும் ஆசை. சீதையோடு ஹனுமார் பேசும்போது எழுந்து பார்க்க ஆரம்பித்து விட்டார். கூச்சல் போட்டிருந்தாலும் இயற்கையாக இருந்திருக்கும். அதுவுமின்றி வாழைப்பழம்பார்க்கும் குரங்குபோலப் பார்க்கவே சபையில் அவுட்டு சிரிப்பு எழுந்தது. நிலேமையைப் புரிந்து

கொண்ட கோவிந்தசாமி சாயிராமை அப்படியே 'அலாக்காகத் தூக்கி, பக்க வாட்டில் போட்டு விட்டார். அந்த ரத்திலிருந்து 'தொபீல்' என்று விழுந்த சீதாராமன் 'நாடகமுமாச்சு, மண்ணுங்கட்டியுமாச்சு' என்ற ஆத்திரத்திலும் பயத்திலும் எழுந்து கொட்டகையை விட்டுத் தெருவில் அரக்கிவேஷத்தோடு ஓட அரம்பித்து விட்டார்! அவரைப் பிடித்து இழுத்து வருவதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது! முதல் நாள் அனுபவமே இப்படி ஆகிவிட்டதால் சீதாராமன் ஹாஸ்ய பாகத்தில் நடிப்பதற்கு ஏற்றவர் என்பது புரிந்து விட்டது! நாடகத்தில் நடிப்பதற்காகச் சம்பளம் கிடையாது. அவருக்கு மோர்சாதம் என்றால் உயிர். அதுகூடக் கிடைக்காது. எப்படியோ இரண்டு வருஷம் அந்தக்கம்பெனியில் இருந்தார். ராமாயணம், லவகுச, சந்திராவளி, கிருஷ்ணலீலா நாடகங்களில் ஹாஸ்ய பாகங்களில் நடித்தார் சீதாராமன்.

கம்பெனி வாழ்க்கை அலுத்துப் போய் விட்டது. விலகி சென்னை தங்கசாலையில் ஒரு அறையை வாடகைக்கு எடுத்துக்கொண்டு தங்கினார். அங்கே கிருஷ்ண பிரஸ் இருந்தது. ஸ்பெஷல் நாடகங்களுக்கு நோட்டீஸ் அடிக்க அங்கே பல கான்டிராக்டர்கள் வருவார்கள். அந்த அச்சகத்தார் மூலம் ஸ்பெஷல் நாடகங்களில் சீதாராமன் சந்தர்ப்பம் பெற்றார். சம்பளம் ஐந்து ரூபாய்க்கு காலணாக்களாகவே வைத்துப் பொட்டலம் கட்டிக் கொடுப்பார்கள். திருத்தணியில் கிருத்திகைக்காக கிருஷ்ணலீலா நாடகத்துக்குப் போயிருந்தபோது ஒரு விசித்திர-விபரீத சம்பவம் நடைபெற்றது. இரண்டு நாள் நாடகம் ஏற்பாடாகியிருந்தது. முதல் நாள் வசுதேவராக நடித்தவருக்குச் சம்பளம் கொடுக்காததால் மறுநாள் காலையில் சொல்லாமல் போய் விட்டார். நாடக ராஜபார்ட் நடிகர் எம். எஸ். மணி பாகவதர் சீதாராமனை வசுதேவர் வேஷம் போடச் சென்னார். விருப்பமில்லாவிட்டாலும் மறுக்க முடியாமல் ஒப்புக் கொண்டார் சீதாராமன். நாடகத்தில் வசுதேவர் சோகமாக வரும் கட்டத்தில் சபையினர் சீதாராமனை பார்த்துச் சிரித்தார்கள். சோகவாடையேயில்லை அவரிடம். "சாந்தமுலேக" என்று பாட ஆரம்பித்தார். அவ்வளவுதான், மலைப்பிஞ்சு ஏராளமாக மேடையை நோக்கி வர ஆரம்பித்து விட்டது! திருத்தணி பாறைகள் நிறைந்த மலைப்பாங்கான பிரதேசமல்லவா! பிஞ்சு நிறைய கிடைத்ததுபோலும். "இனி மேலாவது மலையடிவாரத்தில் நாடகம் நடிக்கப் போகாதீர்கள்" என்று நான் அவரை எச்சரித்தேன்.

இந்தக் கலாட்டாவில் முதலாளி வசூல் தொகையுடன் ஓடிவிட்டார். திருத்தணி நாடகத்தில் நடிக்க வந்ததற்குப் பலனாக சீதாராமனுக்கு கிடைத்தவை டோப், தாடி, காஷாய கவுன் ஆகியவைதான்! ரொம்பவும் சிரமப்பட்டபின் சென்னைக்கு வந்தார் அவர்; டிக்கட் வாங்காமல்தான்!

அப்போது ஸ்ரீராமுலு நாயுடு சென்டிரல் ஸ்டுடியோவில் தயாராகி வந்த 'பிரகலாதா'வில் நடிக்க நடிகர்களைத் தேடி சென்னை வந்திருந்தார். சீதாராமன் அவரைச் சந்தித்த போது கோவை வந்து தன்னைப் பார்க்கும் படிச் சொல்லிவிட்டுப் போய்விட்டார். டி. ஆர். மகாலிங்கம் அவரது நண்பர். அவருடன் சட்டாம்பிள்ளையாக பிரகலாதாவில் முதன்முதலாக நடித்தார் சீதாராமன். அடுத்து 'சதி முரளி'யில் நடித்தார். எம். கே. ராதா, எம். ஆர். சந்தானலக்ஷ்மி, டி. ஆர். மகாலிங்கம், நாராயணராவ் முதலியோர் நடித்த படம் சதி முரளி. அப்போது சீதாராமன் மகாலிங்கத்திற்கு ஆங்கிலம் சொல்லித் தருவார்! "ஸி. ஏ. டி. கேட்—பாய்...எம். ஏ. டி மேட்—பூனை..." என்று அவர் சொல்வதை மகாலிங்கம் 'கரெக்டாகச்' சொல்வாராம்! அப்போது அசோகா பிலிம்ஸ் என்ற பெயரில் என். எஸ். கிருஷ்ணன் கம்பெனி ஆரம்பித்து கோவையில் படம் பிடிக்க வந்தார். டி. எஸ். துரைராஜின் உதவியால் கம்பெனியில் சேர்ந்தார் சீதாராமன். எனெஸ்கே அவரை 'பிராங்கின்ஸ்டன்' என்று செல்லமாக அழைப்பாராம்! 'புத்திமானே பலவான்' படம் முடிந்ததும் துரைராஜ் எனெஸ்கேயிடமிருந்து விலகவே சீதாராமனும் விலகி விட்டார். சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டுடியோவில் அப்போது ஆர். பத்மநாபன் 'மாயா

ஜோதி' படப்பிடிப்பில் ஈடுபட்டிருந்தார். மகாலிங்கம் - ஜெயலக்ஷ்மி ஜோடியுடன் சீதாராமனும் நடித்தார். பிறகு 'சதி சுகன்யா'வில் மகாலிங்கம், டி. ஆர். ராஜகுமாரி, எஸ். டி. சுப்பய்யா முதலியோருடன் நடித்தார். துரைராஜ் 'சாவித்திரி' படத்தில் நடிக்க கல்கத்தாவுக்குப் போய் விடவே சீதாராமனும் சென்னை வந்து விட்டார்.

யுத்த பீதியினால் சென்னை அப்போது ஏறக்குறைய காலியாகி ஸ்மசானமாகக் காட்சி யளித்தது. அங்கே தனது பாலிய நண்பன் ராமநாதனை (தற்போது இந்த ராமநாதன் வி. கே. ராமசாமியிடம் மேனேஜராகப் பணியாற்றுகிறார்) சந்தித்தார் சீதாராமன். அவருக்கு தைரியம் கூறி பம்பாய்க்கு அழைத்துப் போனார் ராமநாதன். ஆனால் இந்த டிக்கட் பரிசோதகர்களுக்கு அவர்கள் போகவேண்டிய இடம் பற்றி அக்கறை இருக்கிறதா என்ன? ரேணிகுண்டாவில் அவர்களை இறக்கிவிட்டு விட்டார்! அங்கிருந்து விஜயவாடா சென்று அங்கிருந்து மீண்டும் நந்தியால் சென்றார்கள். அவர்கள் நந்தியாலில் போய் இறங்கியபோது ஒரு முடிவு செய்து கொண்டார்கள். 'ஸ்டேஷன் அவர்களது மாமனார் வீடு; ஊரில் எங்கே போனாலும் பிரிந்து விட்டால் அங்கே வந்து சேர்ந்துவிட வேண்டியது' என்பதுதான் திட்டம். சீதாராமன் பசி வாட்டுகிறது என்றபோது ராமநாதன் ஒரு யுக்தி செய்தார். நேரே கோல்டன் கேப் என்ற ஓட்டலுக்கு அழைத்துப்போனார். வேலை கேட்டார்கள். முதலாளி சரி என்றார். உடனே ஹோட்டல் சம்பிரதாயப்படி இருவரும் வயிறு புடைக்கத் தின்றார்கள். மாலையில் திட்டப்படி நேராகக் கிளம்பி ஸ்டேஷனுக்கு வந்துவிட்டார் சீதாராமன். இருவருக்கும் துணிமணி வாங்க முன்பணம் பெற்று ராமநாதனும் ஸ்டேஷனுக்கு வந்து விட்டார்!

பண்ணின பாவம் தீர, சாயிபாபாவின் பாதங்களில் விழலாமென்று தீர்மானித்து ஷிர்திக்குக் கிளம்பினார்கள், சாதாரணமாக டிக்கட்டு வைத்திருப்பவர்கள் அவசர அவசரமாகக் கிளம்பி நேரே போய்ச் சேருவார்கள். ஆனால் டிக்கட் வாங்காதவர்களுக்கு என்ன அவசரம்! நிதானமாகப் போய்ச் சேர்ந்தார்கள். அங்கே சத்திரத்தில் அருமையான சாப்பாடு போட்டார்கள். வயிறார உண்டு களைப்பு தீர்ந்தபின் சாயிபாபாவின் சிஷ்யர் அப்துல் பாபாவை தரிசித்தனர். அவர் சீதாராமனை ஆலிங்கனம் செய்து கொண்டே 'சாயி...சாயி...' என்றார். அந்த நிமிஷமே சீதாராமன் தன் பெயரை மாற்றி 'சாய்ராம்' என்று வைத்துக்கொண்டார். இப்போதுதான் சீதாராமன் சாய்ராமாக மாறிய விஷயம் உங்களுக்குத் தெரிகிறதல்லவா? சாய்ராம் ராமநாதனுடன் சென்னைக்குத் திரும்பினார். ஆனால் வரும் வழியில் கடப்பையில் பாழாய்ப் போன டிக்கட் பரிசோதகர் இறக்கி விட்டு விட்டார்! எங்காவது ஸ்டேஷனில் இறக்கி விட்டால் சாய்ராமுக்கு பசி எடுக்க ஆரம்பித்து விடும்! கடப்பை ஸ்டேஷனில் பசி வந்து விட்டது, சாய்ராமனுக்கு! ராமநாதனை ஏதாவது 'ஐடியா' பண்ணச் சொன்னார். அங்கே இருந்த கான்டீ



னுக்கு சாய்ராமும் ராமநாதனும் போனார்கள்; வேலை கேட்டார்கள். "ராமநாதா! இங்கே நீ சர்வரா இரு. பெல்லாரி கிளைக்கு ஒரு சரக்கு மாஸ்டர் தேவை. இவரு செய்வாரா?" என்றார் முதலாளி. ராமநாதன் சாய்ராமிடம் ஜாடை காட்டிவிட்டு, "ஓ பேஷா செய்வானே" என்றார். அன்றே சாய்ராம் பணத்தோடு பெல்லாரி சென்றார்; சாப்பாட்டை முடித்துக் கொண்டுதான்! அவர் சென்றவுடனே தன் கீழுள்ள சிப்பந்திகளை மிரட்டி இரவு வேலைகளை முடித்து விட்டார். மறுநாள் காலை அவர் எதிரில் வந்து நின்றார் ராமநாதன். பெல்லாரியில் ரயிலேறினால் முதுகு தோல் உரிந்துவிடும் என்று பயந்து அடுத்ததாக உள்ள 'ஹகாரி' ஸ்டேஷனுக்குப் 'பொடி' நடையில் போனார்கள். அங்கே வண்டி வர நேரமிருக்கவே அசதியுடன் படுத்தார்கள். வண்டிவந்து போகும் வரை எழுந்திருக்கவில்லை! பிறகு அங்கே கிளம்பத் தயாராக இருந்த கூட்ஸ் வண்டியில் கல்லடுக்கியிருந்த திறந்த வாகனில் ஏறி விட்டார்கள். குண்டக்கல்லில் கை இறங்காததால் ஸ்டேஷனுக்கு வெளியே வண்டி நின்றது. இறங்கிக் கொண்டார்கள். நேரே ஸ்டேஷனுக்குச் சென்றதும் அவர்களுக்குள் சண்டை மூண்டது. சாய்ராம் சென்னை போகலா மென்றார். ராமநாதன் வால்டேர் போகவேண்டும் என்று பிடிவாதம் பிடித்தார். கடைசியில் ராமநாதன் சாய்ராமின் சாப்பாட்டுக் கவலையைப் போக்குவதாகச் சொல்லவே சாய்ராம் ஒப்புக்கொண்டு கிளம்பினார்! விஜயவாடா சென்றபின் நெடுதகோல் என்ற இடத்தில் வண்டி நின்றதும் சாய்ராம் பசிக்கிறது என்றார். டிக்கட் வாங்கியது மூழ்கியா போகிறது? இறங்கி நேரே ஸ்டேஷனுக்கு ஒரு பர்லாங் தள்ளியிருந்த ஒட்டலுக்குச் சென்றார்கள். ராமநாதன் சாய்ராம் கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுத்துத் தானும் சாப்பிட்டார். நிறைய பார்ஸலும் கட்டி வாங்கிக் கொண்டார்கள். முதலாளியிடம் சென்ற ராமநாதன், "கொஞ்சம் பையனை கூட அனுப்பறீங்களா? ஸ்டேஷன்லே எங்க கூட வந்தவங்க இருக்காங்க. இன்னும் ஏதாச்சும் தேவையிருக்கும். மொத்தமா பணம் கொடுத்தனுப்பறேன்"



என்றார். முதலாளி பையனொருவனை உடன் அனுப்பி வைத்தார். ஸ்டேஷன் அருகே சென்றதும், 'இன்னும் கொஞ்சம் டிபன் கொண்டுவா' என்று அயிட்டங்களைக் கூறி அனுப்பி விட்டு, அடுத்த ஸ்டேஷனுக்கு ரயில் பாதை ஓரமாகவே நடந்தார்கள். சாய்ராமுக்கு ராமநாதனின் திறமையில் அபார நம்பிக்கை ஏற்பட்டு விட்டது! ரயிலுக்குதான் டிக்கட் கிடையாது என்றால்.. டிபனுக்குத்தான் காசுகிடையாது என்றால்... பார்ஸலும் கட்டிக்கொண்டு வந்து விட்டாரே' என்று ராமநாதனை மனதிலே பாராட்டிக்கொண்டார்!

அந்த ஸ்டேஷனில் ஒரு ரயில் வண்டி தயாராக இருந்தது. இருவரும் பார்ஸல் பொட்டலங்களுடன் ஏறி உட்கார்ந்தார்கள். விசாகப்பட்டணத்தில் அவர்களை டி. டி. ஆர். மரியாதையுடன் இறக்கி விட்டார். அங்கே ஊரைச்சுற்றிப் பார்த்து வரும்போது திருச்சி நண்பரொருவரைச் சந்தித்தார்கள். அவர் 'தாராபூர் எஞ்சினீயரிங் காண்டிராக்டர்' கம்பெனியில் எஞ்சினியராக இருந்த அய்யாசாமி

அய்யரிடம் சிபாரிசுசெய்தார். ராம நாதன் கொஞ்சம் படித்தவர். ஆகவே அவர் கணக்கு பரிசோதனையாளரின் உதவியாளராக நியமிக்கப் பட்டார். ஒரு மாதம் சென்றதும் புஷ்பா என்கிற சூபர்வைசர் சாய்ராமுக்கு மேஸ்திரி வேலை வாங்கிக் கொடுத்தார். அப்போது அங்கே யுத்த பீதியிருந்தது. எங்கும் ஒரே இருள். ஆகவே சாய்ராம் வேலையைவிட்டு விட்டு, திண்டுக்கல்லுக்கு மாற்றலாகியிருந்த சகோதரரிடம் வந்து சேர்ந்தார். நாட்கள் கழிந்தன.

திருச்சியில் வைரம் செட்டியாரின் ராமபாலகான விநோத சபா 'திருமழிசை ஆழ்வார்' நாடகத்தை நடத்திக் கொண்டிருந்தது அப்போது. சட்டாம்பிள்ளை வெங்கட்ரரமன், எஸ். ராஜப்பா, முஸ்தபா, எம். எஸ். பாக்கியம் முதலியோர் அதில் நடிகர்களாயிருந்தனர். வெங்கட்ராமன் சாய்ராமுடன் சதிமுரளியில் நடித்தார். அவரை சாய்ராம் பார்த்தபோது அவர் செட்டியாரிடம் அழைத்துச் சென்று சிபாரிசு செய்தார். செட்டியார் அன்றே சேர்த்துக்கொண்டார். திருச்சி முகாமிலிருந்து கிளம்பும் போது, கடைசி நாடகத்தன்று தான் சிவாசாரியர் வேஷம் போட விரும்புவதாகச் சொன்னார் சாய்ராம். நடிகர்களிடையே எதிர்ப்பு இருந்தது. ஆனால் செட்டியார் நடிக்கச் செய்தார். நன்கு நடித்து நல்ல பெயரெடுத்த சாய்ராம் கம்பெனியின் சூபர்வைசராக நியமிக்கப்பட்டார். திருவாரூருக்கு கம்பெனிசென்றது. திருமழிசை ஆழ்வார், தாகசாந்தி, பக்த சாருக தாசர், குடும்பவாழ்க்கை, செயின்ட் பிலாமினோ, ஏழைப்பெண், விஜய நகர சாம்ராஜ்யா முதலிய நாடகங்களில் சாய்ராம் நடித்தார். 1946-ல் கம்பெனியுடன் சென்னைக்கு வந்தார் அவர். திருமழிசை ஆழ்வாரில் சிவா சாரியராகவும், குடும்ப வாழ்க்கையில் ஒரு குமாஸ்தாவாகவும், விஜயநகர சாம்ராஜ்யாவில் ஹரிச்சந்திராதெருக்கூத்திலும் நடித்த சாய்ராமின் திறைமையை பத்திரிகைகள் பாராட்டியிருந்தன. அவருக்கு இருந்த வரவேற்பைக் கண்ட செட்டியார் அவரிடம் வெறும் வெள்ளைக் காகிதத்தில் கையெழுத்து வாங்கிக் கொண்டார். பிறகு ஒப்பந்தம் ஒன்று எழுதி பூர்த்தி செய்யப்பட்டது. இதை யறியாத சாய்ராம் டி. எஸ். துரைராஜின் மரகதா பிக்சர்ஸ் தயாரித்து வந்த ஏழுமுடி மன்னனில் நடிக்க ஒப்பந்தம் செய்து கொண்டார். மற்றும் கன்னு பிலிம்ஸ் திருமழிசை ஆழ்வாரிலும், ஏகம்பவாணனிலும் நடித்தார். 'நாரதர்' ஸ்ரீநிவாஸராவ் சாய்ராமின் திறமையைப் படவுலகம் அறிந்து சந்தர்ப்பம் கொடுப்பதாக எழுதியிருந்த செய்தியைப் படித்துவிட்டு செட்டியார் சாய்ராமை கண்டிக்க ஆரம்பித்தார். அப்போது அவர் பத்து நாள் ரஜா கேட்டு சேலம் போய் ஏழுமுடி மன்னனில் நடித்துவிட்டுத் திரும்பும் போது நோட்டீஸ் வந்தது. அத்துடனும் கொஞ்சம் பணத்துடனும் செட்டியாரிடம் வந்தார். செட்டியார் பேட்டி கொடுக்க மறுத்தார். அதற்குள் வி. என். சம்பந்தம் மூலம் ஜுபிடரிலிருந்து சாய்ராமுக்கு அழைப்பு வந்தது. கோவை சென்று ஒப்பந்தம் செய்து கொண்டு சேலம் போனார். துரைராஜ் தைரியம் கூறவே மீண்டும் கோவை திரும்பி கிருஷ்ண விஜயம் படத்தில் நடித்தார். முதல் நாள் ஷூட்டிங்கின் போது கோர்ட் மூலம் செட்டியார் 'இன்ஜங்ஷன் ஆர்டர்' வாங்கியிருப்பதறிந்து பணத்துடன் சென்னை வந்து சேர்ந்தார்.

'நாரதர்' ஸ்ரீநிவாஸராவ் இருவருக்கும் சமாதானம் செய்வித்து ஒரு முடிவுக்கு வரச் செய்தார். அதன்படி தான்பெறும் தொகையில் மூன்றில் ஒரு பங்கை சாம்ராம் செட்டியாருக்குக் கொடுத்து வந்தார். இப்படி சுமார் ஆறுயிரம் ரூபாய் வரை செட்டியார் சாய்ராமிடமிருந்து பெற்றார். கிருஷ்ணவிஜயம், மோகினி, கன்னியின் காதலி, விஜயகுமாரி படங்களில் நடித்த சாய்ராம் மோகினி படத்தின் மூலம்தான் ரசிகர்களுக்கு அறிமுகமானார். பீம்சிங் சாய்ராம் என்று புகழப்பட்ட அவருக்கு கன்னியின் காதலியில் அவர் ஏற்ற புத்திசாலி பாத்திரம் மேலும் புகழ்தந்தது. 1949-ல் செட்டியாரின் ஒப்பந்தம் தீர்ந்ததும் அவருக்கு ஒரு நமஸ்காரத்தைப் போட்டுவிட்டு தனது பால்ய நண்பரான மகாலிங்கத்திடம் போய்ச் சேர்ந்தார்.

பிப்ரவரி
வெளியீடு
ராகினி பிலிம்ஸ்
பெண்ணின்
பெருமை
சிவாஜி
கணேசன்
ஜெமினி
கணேசன்
சாவித்திரி...சாந்தகுமாரி
நாகய்யா...எம். என். ராஜம்
பிரண்ட் ராமசாமி etc.
வசனம், பாடல்..... தஞ்சை ராமையதாஸ்
டைரக்ஷன்..... பி. புல்லையா

ராஜ்ஸ்ரீ வெளியீடு

ஸ்ரீசுகுமார் புரொடக்ஷன்ஸ் என்ற ஸ்தாபனத்தின் பெயரில் மகாலிங்கம் தயாரித்த முதல் படம் மச்சரேகை. தொடர்ந்து மோகனசுந்தரம், சின்ன துரை, விளையாட்டு பொம்மை ஆகிய படங்களிலும் நடித்தார். சாய்ராம், வி. கே ராமசாமி, டி. கே. ராமச்சந்திரன் மூவரும் மகாலிங்கத்தின் நண்பர்கள். அவரால்தான் அவர்கள் சென்னையில் தங்கினார்கள். அவரிடம் அவர்களுக்கு ஒப்பந்தம் கூடக் கிடையாது. பணத்தை மட்டும் குறி கொண்டு அவர்கள் அம்பியுடன் சேரவில்லை. சாய்ராம் இவை தவிர, மாயமாலை, பெண்மனம், குமாரி, சுதர்சன், கனவு, நல்லவன், வீர சுந்தரி, புதுயுகம், கோமதியின் காதலன், நல்லதங்கை, டவுன்பஸ், கிருஹலக்ஷ்மி, ஏழையின் ஆஸ்தி முதலிய படங்களில் நடித்தார். அவர் நடித்து சமீபமாக வெளியான படம் நான் பெற்ற செல்வம். ஒரு குத்துச் சண்டை வீரராக - பண்ரொட்டியாக- நடித்திருக்கிறார் அவர். தற்போது நரசுவின் (கிஸ்மத) படம், கோகில வாணி, குங்குமம், படித்தபெண், பாட்டி சொன்ன கதை, சந்திப்பு முதலிய படங்களில் நடித்து வருகிறார். கோகிலவாணி முடிந்துவிட்டது. திரைக்கு வரத்தயாராகி விட்ட இப் படம் எந்த தேதியிலும் திரையிடப் படலாம்.

விளையாட்டு பொம்மை படத்தில் சாய்ராம் நடிக்கும் போது வைரம் செட்டியாரின் கம்பெனி நின்று விட்டது. அந்த நடிகர்கள் சாய்ராமிடம் வந்தனர். ஒரு நாடகக் கம்பெனியை ஆரம்பித்து ஊர் ஊராய்ச் சென்று நடத்தினர். 'புயலுக்குப்பின்?' என்ற நாடகம் முதலில் 1951-ல் சென்னை ரசிக ரஞ்சனிசபையில் அரங்கேறியது. பிறகு ஒற்றை வாடையிலும், ஆவடி, மதுரை, தூத்துக்குடி, சிவகாசி முதலிய இடங்களிலும் நாடகம் நடந்தது.

ஆனாலும் கம்பெனி நஷ்டத்தில் நடக்கவே ஆரப் சாயபு என்கிற கன்டிராக்டருக்கு விற்றுவிட்டுச் சென்னை திரும்பினர்.

"ஹாஸ்யம் என்னும் போதே எனக்குஎல். நாராயணராவின் நினைவு தான் வருகிறது, அவரிடம் எனக்கு ரொம்பவும் பக்தி உண்டு" என்று கூறும் சாய்ராமுக்கு வி. கே. ராமசாமியைப்பற்றி நல்ல அபிப்பிராயமுண்டு. 'அப்பா வேஷத்திலும் கொல்லாமல் கொல்லும் வில்லன் வேஷத்திலும் அவரிடத்தில் தனித்திறமை பளிச்சிடுகிறது' என்று அபிப்பிராயப் படுகிறார் சாய்ராம். நிறைய ஆங்கிலப்படங்களைப் பார்க்கிறார் சாய்ராம். "எனக்கு சோகபாத்திரங்களில் நடிப்பதில் ஆசையுண்டு. ஆனால் வேறுயாருக்கும் அந்த அபிப்பிராயம் ஏற்பட வில்லை. சந்திப்பு படத்தில் மட்டும் எனக்கு என் விருப்பப்படி சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது" என்று சோகமாகச் சொன்னார் சாய்ராம். ஆனால் அதிலும் ஹாஸ்யம்தான் தொனித்தது! காலஞ் சென்ற தவ நடிகர் பி. யு. சின்னப்பாவுக்கு சாயிராமிடம் ரொம்பவும் அன்பு உண்டு. அவரை தன் உயிர்த் தோழனாக மதித்தார். "நடிக மேதையான சின்னப்பா என்னிடம் கொண்டிருந்த அன்பை நினைக்கும் போதே உள்ளம் பூரிக்கிறது" என்று பெருமையோடு கூறினார் சாய்ராம்.

சுமார் ஆறுமாதத்துக்கு முன்தான் சாய்ராம் மதுரையைச் சேர்த்த சுகுணாவை மணந்தார். அவரது சகோதரர் நான் பேட்டிக்குப் போன போது அங்கே இருந்தார். "ஒரு கால் கட்டு இருந்தாத்தான் வீட்டிலே தங்குவான் என்று நினைச்சேன். ஆனா பய ஒரு நிமிஷம் கண்ணுக்கு அம்பட மாட்டேங்கிறான்" என்று அவர் அங்கலய்த்தார். ஆமாம், சாய்ராம் ஒரு இடத்தில் ஐந்து நிமிஷத்துக்குமேல் நிற்க மாட்டார். சாய்ராம் புஷ் ரேடியோ செட் வைத்திருக்கிறார். அதிலே ஹிந்தி செய்திகளும் பாடல்களும் கேட்பது அவருக்கு ரொம்ப பிரியமானது. மூத்த சகோதரர் வெங்கடேஸ்வர அய்யரிடம் தான் சாய்ராமுக்கு கொஞ்சம் பயம். அவர் வீட்டிலிருக்கும்போது சாய்ராம், 'இந்தப் பூனை பால் குடிக்குமா?' என்பது போலிருப்பார். சகோதரருடனும், தாயாருடனும் ஒரே குடும்பமாக இருந்துவரும் சாய்ராம் பழகுவதற்கு ரொம்பவும் ஏற்றவர். அவரது திறமையை யாரும் சந்தேகிப்பது கிடையாதாகையால் எதிர்காலம் பற்றிக்கவலையில்லை.

— எஸ். வி. ஸம்பத்குமார்

இப்படி இவர்கள் கிளம்புவது நிச்சயமாகக் கோவிலுக்குத்தான்!
நந்தியின் 'சௌபாக்யவதி'யில்—சுரபி பாலசரஸ்வதி, சாவித்திரி

# "எனக்கு பிரியமான நறுமணம்"

என்கிருர் சாவித்திரி

"லக்ஸ் டாய்லட் சோப்பின் புதிய வாசனை உண்மையாகவே விரும்பப்படுகிறது. அதன் நறுமணம் அதிக நேரம் தேகத்தில் கமழும்"

சுத்தமான, வெண்மையான லக்ஸ் டாய்லட் சோப்பின் சிறந்ததாக நறுமணமாக்கப்பட்டுள்ள நுரை உலகத்தில் மிக்கப் பிரபலமான அழகுடைய பெண்மணிகள் சருமத்தை புத்தம் புதிதாகவும், மிருதுவாகவும், வனப்புடனும் வைத்திருக்கிறது.

உங்கள் தினசரி எழிலளிக்கும் ஸ்னானத்திற்கு பெரிய சைஸ் சோப்பை உபயோகித்து மகிழுங்கள்

## லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

L.T.S. 461-50 TM

'சதார'த்தில் இந்த அழகிய நடனம் வருகிறது.

காற்றைக் கிழித்துக் கொண்டு வந்த மின்சார ரயில், கிண்டி ஸ்டேஷனில் ஒரு குலுங்கு குலுங்கி நின்றது.

நின்ற வண்டியிலிருந்து இறங்கி, ஸ்டேஷனை விட்டு, எங்கோ என் மனம் போன போக்கில் நடந்து கொண்டிருந்தேன்.

திடீரென்று வான வெளியிலே ஒரு சோக கீதம் மிதந்து வந்தது.

பெண் ஜென்மம் இதானா
நான் பிறந்ததும் வீணா—இந்தப்
பேதையின் வாழ்நா
ளெல்லாம்
கண்ணீர் தானா?

என்று யாரோ ஒரு பெண் பாடிக்கொண்டிருந்தாள். மனம்போன போக்கில் நடந்து கொண்டிருந்த நான் பாட்டின் கருத்தில் வசப்பட்டு, குரல் வந்த திசையை நோக்கி நடந்து சென்றேன்.

அங்கே ஒரு பெண் இந்தப் பாட்டைப் பாடியபடி, அபிநயம் பிடித்துக் கொண்டிருந்தாள். மேலும் நெருங்கிச் சென்றேன் நான்.

ஜகமெங்கும் தீபாவளித்
திருநாளின்று நானே
இருள் சூழ்ந்து நின்றேனே

என்று அப்பெண் பாடிக்கொண்டிருந்த சமயம் திடீரென்று அவளது பார்வை மேலே திரும்பி, 'பால்கனி' மீது விழுந்தது. அடுத்து சோக ரேகை ஓடிய அப்பெண்ணின் முகத்தில் ஒரு புதுப் பொலிவைக் கண்டேன்.

நமது பிரதயேக காமிரா நிபுணர் ஸ்டுடியோக்களை சுற்றி வருகிறார்

'இந்த திடீர் மாறுதலுக்குக் காரணம் என்ன? யாரைப் பார்த்ததால் அவரது முகம் இப்படி மாறியது?' என்று நினைத்தபடி, அந்த திசையில்

'பாக்கியவதி' படத்திற்கான பாடல் ஒலிப்பதிவு செய்யப்பட்டபோது எடுத்த படம். டைரக்டருக்கு அருகே அமர்ந்திருப்பவர் பாலசரஸ்வதி. அவருக்குப் பின்னால் சங்கீத டைரக்டரும் ஏ. ஸி. பிள்ளையும் இருக்கிறார்கள்.

நானும் திரும்பிப் பார்த்தேன். அங்கே ஒரு அழகிய வாலிபன் நின்றிருந்தான். அவனது உதட்டில் ஒரு புன்னகை மிளிர்ந்தோடியது. "காதலனைக் கண்டதால் ஏற்பட்ட மாறுதல் போலும் இது" என்று நான் நினைத்துக் கொண்டேன்.

நடனம் ஆடிய அப்பெண்ணும் இப்போது காதலனைக் கண்ட பூரிப்பில், பம்பரமாகச் சுழன்று ஆடிக் கொண்டிருந்தாள்.

'கட்' என்று எங்கிருந்தோ அசரீரி போல் ஒரு குரல் கிளம்பி வந்தது.

சொல்லி வைத்தாற் போல் ஆட்டமும் பாட்டும் நின்றன.

நான் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். அங்கே டைரக்டர் வேதாந்தம் ராகவய்யா நின்றிருந்தார்.

'ஓஹோ! இப்படியா விஷயம்! நாம் வந்திருப்பது நரசு ஸ்டுடியோவா? அப்படியானால் சரியான சந்தர்ப்பத்தில்தான் வந்திருக்கிறோம்' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டேன்.

நரசு ஸ்டுடியோவில் தயாராகி வரும் அவர்களது சொந்தப் படமான தமிழ் 'கிஸ்மத்'தில் இந்த நடனமும் பாட்டும் வருகின்றன.

கிஸ்மத்தின் கதை உங்களில் பெரும்பாலோருக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். பம்பாய் டாக்கீஸ் தயாரிப்பான இப்படம் திரையிடப்பட்ட இடங்களிலெல்லாம் அமோக வெற்றி பெற்றிருக்கிறது.

இதில் வரும் கதாநாயகன் திருட்டைத் தொழிலாகக் கொண்டவன். கதாநாயகியோ பண்பாடு மிக்கவள்.

கதாநாயகிக்கு தன் காதலன் இப்படித் திருடித் திரிகிறானே என்ற கவலை.



'பெண்ணின் பெருமை' ஸெட்டில், 'தேவதா' ஹிந்திப் படத்தில் நடிக்க வந்த இந்திராவுடன் கணேஷ்

தற்செயலாக ஒரு நாள் கதாநாயகி நடனமாடும் போது இடறி விழுந்து, கால் ஊனமடைந்து விடுகிறது.

அந்த ஊனக் காலுடனே மற்றொரு நாள் தன் மனத்துயரத்தை யெல்லாம் ஒரு பாட்டில் வடித்துப் பாடுகிருள் கதாநாயகி. அதே சமயம் அவளது காதலனும் யாருமறியாமல் அங்கு வருகிருன். அவனைக் கண்ட அவளுக்குச் சந்தோஷம் எல்லை மீறிப்



'சதாரம்' நடனத்திற்கு ஒத்திகை பார்க்கப்படுகிறது.

போய்விடுகிறது. தன்னை மறந்து, தனது ஊனக்காலையும் மறந்து பம்பரமாக ஆட ஆரம்பித்து விடுகிருள் அவள்.

இடது மேல்: 'கண்ணின் மணிக'ளுக்காக பத்மினி காதணி போட்டுக் கொள்கிருர்.

'பெண்ணின் பெருமை' நடிகர்களுடன் டைரக்டரும் தயாரிப்பாளருமான பி. புல்லய்யா.



'பெண்ணின் பெருமை' செட்டில் அப்பா துரைசாமி, நாகய்யாவிடம் ஏதோ விளக்குகிறார்.

கிஸ்மத்தில் வரும் மேற்படி காட்சி தான் நரசுவின் தமிழ் தயாரிப்புக்காக அன்று படமாக்கப்பட்டது.

இதில் கதாநாயகியாக சாவித்திரியும் திருடிப் பிழைக்கும் அவரது திரைப்படக் காதலராக ஜெமினி கணேசனும் நடித்து வருகிறார்கள்.

'ஆசை' படப்பிடிப்பில் டைரக்டருடன் கிருஷ்ணனும் கணேசனும்.

மேற்படி காட்சியில் பாடப்படும் பாட்டு 'கிஸ்மத்' ஹிந்திப் படத்தில் அமைந்திருக்கும் அதே மெட்டில் (சிறு மாறுதல்களுடன்) அமைந்திருக்கிறது. எஸ். ராஜேஸ்வரராவ்

வலது மேல்: ராஜஸ்ரீயின் தெலுங்குப் படத்தில் அஞ்சலி தேவி இப்படித் தோன்றுகிறார்.



'கண்ணின் மணிக'ளில் நடிக்க வந்த கருணாநிதியுடன் ஆர். நாகேஸ்வரராவ் வேட்டை பற்றிப் பேசுகிறாரோ?

'கண்ணின் மணிக'ளின் இன்ஸ்பெக்டர் ராதா ஒய்வெடுத்துக் கொண்டிருக்கிருர் செட்டுக்கு வெளியே.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு.

குறிப்பாக வயதான பெண்களை வீட்டில் வைத்திருப்பவர்களுக்கு 'ஆறுதல் மொழி'யாக இந்தப் பழமொழி சொல்லப்படுவதுண்டு.

ஒரு பெண்ணின் திருமணமாக எழுந்த பேச்சைப்பற்றிக் கவனித்ததால்தான் இதை நான் இங்கு குறிப்பிடவந்தேன்.

ஹஸ்தினபுர அரசர் நரேந்திரனின் மகன் சாரங்கதரன். சித்ராங்கத மன்னனின் ஒரே பெண் சித்ராங்கி.

வயதான தன் மகளுக்கு வரன் தேடுகிருர் சித்ராங்கத மன்னன்.

அப்போது ஒரு புரோகிதர் சாரங்கதரனின் படத்தைக்

சாவித்திரி 'பியானோ' வாசிப்பது. 'சரணதாசி' தமிழ்ப் பதிப்பிற்கு.

இப்படத்தின் சங்கீத டைரக்ஷனைக் கவனித்து வருகிருர்,

பிப்ரவரி வெளியீடான இப்படம், தெலுங்கிலும், பிரத்யேக நடிகர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டு வருகிறது.

'ராஜஸ்ரீ' படத்தில் வில்லனும், கதாநாயகியும்.

கொண்டுவந்து, சித்ராங்கத மன்னனிடம் கொடுக்கிருர்.

அழகும் கம்பீரமும் ஒருங்கே அமையப்பெற்ற சாரங்கதரனை தன் மருமகனாக ஏற்றுக்கொள்ள ஆசை கொள்கிருர் சித்ராங்கத மன்னன்.

அவனது படத்தை அந்தப்புரத்திலிருக்கும் தன் மகள் சித்ராங்கிக்கு அனுப்பி வைக்கிருர்.

ஆமாம், இதையெல்லாம் நான் எங்கே பார்த்தேன் என்று சொல்ல வேண்டாமா?

'சாரங்கதரா' படத்திற்காக இக்காட்சி ரேவதியில் படமாக்கப்பட்டது.

சித்ராங்கத மன்னனாக இதில் வெங்கடாசலமும், புரோகிதராக வி. எம். ஏழுமலையும் நடித்து வருகிருர்கள்.

சித்ராங்கி–சாரங்கதரன் ஜோடியாக பானுமதியும், சிவாஜி கணேசனும் தோன்றுகிருர்கள்.

மினர்வா பிக்சர்ஸ் தயாரிப்பான இப்படத்தை வி. எஸ். ராகவன்–முருகதாஸா இருவரும் டைரக்ட் செய்து வருகிருர்கள். எஸ். டி. சுந்தரம் படத்திற்கான வசனங்களை எழுதியிருக்கிருர்.

* * *

நிரசு ஸ்டுடியோவில் 'கிஸ்மத்' செட்டில் பார்த்த சாவித்திரியை, வாஹினியில் லலிதகலா பிலிம்ஸாரின் படப்பிடிப்பில் மீண்டும் சந்தித்தேன்.

'சரண தாசி' என்று தெலுங்கில் தயாரித்து வரும் படத்தை அவர்கள் தமிழிலும் தயாரித்து வருகிருர்கள்.

இனி நான் பார்த்த படப்பிடிப்பை சொல்லி விடுகிறேன்.

ஒரு பெரிய பங்களாவின் திறந்த மாடி அது. அங்கே ஒரு பியானே போடப்பட்டிருக்கிறது.

லக்ஷ்மி என்ற அந்தப் பருவப்பெண் தன் காதலன் வேணுவை நினைத்துப் பாடிக்கொண்டிருக்கிருள். அதாவது அந்த நாளில் வேணுவுடன் பாடிய பாட்டை, அடி அடியாக நினைவுபடுத்திக்கொண்டு பாடுகிருள். அந்தப் பியானே மீது வேணுவின் புகைப்படமும் வைக்கப்பட்டிருக்கிறது.

அதே சமயம் லக்ஷ்மியின் மாமி அங்கு வருகிருள். வேணுவை அவளுக்குப் பிடிக்காது. அத்துடன் லக்ஷ்மி அவனை விரும்புவது அடியோடு பிடிக்காது. எனவே லக்ஷ்மியை மேற்கண்ட சூழ்நிலையில் பார்க்கும் போது அவள் எப்படி ஆத்திரப்பட்டிருப்பாள் என்பதை நேயர்களே யூகித்துக்கொள்ளலாம்! இருந்தாலும் இதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் லக்ஷ்மியிடம் வந்து, "உனது தந்தை இன்னும் காபிகூட சாப்பிடவில்லை. எல்லாம் உன்னுல்தான்!" என்று

'சதாரம்' படத்தை உருவாக்குபவர்களுடன் அதில் நடித்துவரும் சாரங்கபாணியும் வி. கே. ராமசாமியும்



சொல்லி மெள்ள அவனை உள்ளே அனுப்பி விடுகிறாள். அவள் சென்றதும் வேணுவின் படத்தை எடுத்து வெளியே எறிந்து விடுகிறாள்.

இதுதான் நான் பார்த்த அச்சிறு காட்சி. சாவித்திரிதான் இதிலே லக்ஷ்மியாக வருகிறார். கே.ஆர். செல்லம் அவரது மாமியாகத் தோன்றுகிறார். சரணதாசியை டி. பிரகாஷ் ராவ் டைரக்ட் செய்து வருகிறார். இப்படத்தின் தமிழ்ப் பதிப்பிற்கு இன்னும் பெயர் வைக்கப்படவில்லை.

* * *

நேயர்களை அறுபது நாட்கள் பின் நோக்கிச் சென்று, டிஸம்பர் மாத 'பேசும் பட'த்தில் 'ஆசை' படப்பிடிப்பு பற்றி படித்ததை நினைவு படுத்திக் கொள்ளும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

நித்யானந்தம் மார்க்கெட்டுக்கு எதிரில், குதிரைமீதிருந்தபடி ஜெமினி கணேசனை நாம் பார்த்ததும், ஜிப்ஸிப் பெண்ணாக வரும் பத்மினியை அவர் நேசிப்பதும் நினைவுக்கு வருகிறதல்லவா ?

இதோ இப்பொழுது நாம் அதே ஜெமினி கணேசனை அவரது வீட்டில் பார்க்கிறோம். அவர் முகத்தில் ஒரே பரபரப்பு. ஏதோ விசேஷ செய்தியை எதிர் பார்ப்பவர் போலத் தெரிகிறதல்லவா ?

ராஜம்மா பேசவேண்டிய வசனத்தை அவருக்குச் சொல்லுகிறார் டைரக்டர் ஜானகிராம்.



முதல்நாள் தான் சந்தித்த பெண்ணைப்பற்றித் தகவல் அறிந்து வரும்படி தனது வேலையாள் ஜக்கனிடம் சொல்லி அனுப்பும் அவர், 'அவன் என்ன செய்தி கொண்டு வருவானோ?' என்று ஆவலுடன் எதிர்பார்ப்பதில் தவறென்ன இருக்கிறது?

தன்னைத் தேடி வாசலுக்கும் உள்ளுக்குமாக நடக்கும் கணேசனை, ஏமாற்றிவிட்டு ஜக்கன் அவரது அறைக்குள்ளே வந்துவிடுகிறான்.

ஜக்கனை கண்டதும் திடுக்கிட்டுத் திரும்பும் கணேசன், ''அட ஜக்கா!

எப்போ வந்தே நீ?'' என்று கேட்டுவிட்டு, அவன் போய் வந்த காரியத்தைப் பற்றி விவரமாகச் சொல்லும்படிக் கேட்கிறார்.

பத்மினியையும் ராதாவையும் 'கண்ணின்மணிகளுக்காக டைரக்ட் செய்கிறார் ஜானகிராம்.

விரைவில் வருகிறது!
பார்வர்டு ஆர்ட் பிலிம்ஸ்
கோகிலவாணி
காதுக்கினிமையாக கானம் · G. ராமனுதன்
கருத்துக்கேற்ற தமிழ் நடை · S. D. சுந்தரம்
கண்குளிர ஒளிப்பதிவு · J. G. விஜயம்
காணத்தகுந்த கற்பனைச்சித்திரம் டைரக்ஷன்:
S. A. நடராஜன்
ஸ்டுடியோ · பிரிமியர் (மைசூர்)
Elegant
விவரங்களுக்கு
பார்வர்டு ஆர்ட் பிலிம்ஸ் No. 2642, 2வது மெயின்ரோட் வி.வி.மோஹல்லா மைசூர்.

ஜக்கஞக இதில் நடிப்பது யார் தெரியுமா? 'பொன்னுடை போர்த்தப் பட்ட' நமது கலைவாணர் என். எஸ். கே. தான். காக்கி புஷ்கோட்டும் கால் சராயும், புதுமாதிரியான தொப் பியும் நறுக்கு மீசையுமாக அவர் தோன்றும்போதே ரஸிகர்கள் நிச்ச யம் விலாப்புடைக்கச் சிரிக்கப் போகி ருர்கள். அவரது சம்பாஷணைகளும் நடிப்பும் இக்கட்டத்தில் சிறப்பாக அமைந்திருக்கின்றன.

'நடேஷ் ஆர்ட்' தயாரிப்பான இப் படத்தை தயாரிப்பாளர் எம். நடே சன் டைரக்ட் செய்கிருர்.

* * *

நீண்ட நாட்களுக்குப் பின், வாஹினி யில் நான் ஒரு 'ரிக்கார்டிங்'கைப் பார்த்தேன்; அதாவது கேட்டனுப வித்தேன்.

ரவி புரொடக்ஷன்ஸ் 'பாக்கிய வதி'க்காக பாலசரஸ்வதி பாடும் பாட்டு அது. அது சேர்ந்தாற்போல் இரண்டு நாட்கள் பதிவாக்கப் பட்டது.

தக்ஷிணமூர்த்தி சங்கீதம் அமைத் திருக்கும் இப்பாட்டு, படத்தின் இறு திக்கட்டத்தில் வருகிறது.

"நானே பாக்கியவதி!" என்று முடியும் இப்பாட்டை உடுமலை நாரா யணகவி இயற்றியிருக்கிருர். பிரஸாத் டைரக்ட் செய்யும் 'பாக்கியவதி'யில் சிவாஜி கணேசன், தங்கவேலு, பத் மினி, ராகினி, எம். என். ராஜம் முதலியோர் நடிக்கப் போகிருர்கள் என்றும் படிப்பிடிப்பு விரைவில் ஆரம்பமாகும் என்றும் தயாரிப்பாள ரான ஏ. ஸி. பிள்ளை என்னிடம் கூறினர்.

* * *

''நானேபாக்கியவதி'என்ற பாட்டை முணுமுணுத்தபடி வாஹினியி லிருந்து மெல்ல வெளியே வந்தேன்.

கண்மூடி கண் திறப்பதற்கு முன்பாக என் முன்னே ஒரு பிரம்மாண்டமான குகை காட்சியளித்தது.

இருள் சூழ்ந்த அந்த பயங்கரமான குகையைப் பார்ப்பதற்கே எனக்குப் பயமாக இருந்தது. உடல் நடுங்க ஆரம்பித்து விட்டது.

சிறிது நேரம் வரை 'உள்ளே போவதா, வெற்றிகரமாக வந்த வழியிலே திரும்பி வேகமாகப் போய் விடுவதா' என்று அங்கேயே நின்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

அப்போது யாரோ சிலர் பேசும் சப்தம் கேட்டது. எங்கிருந்து பேசு கிருர்கள்? யார் பேசுகிருர்கள்? என்று நான் நின்ற இடத்திலிருந்து நாலா பக்கமும் சுற்றிப் பார்த்தேன்.

கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் யாரும் தென்படவேயில்லை. ஆனல் பேசும் சப்தம் என்னவோ தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தது.

அப்படியானல் எங்கிருந்து இந்த ஒலி வருகிறது?

சிறிது உற்றுக் கவனித்தபோது அது தெரிந்து விட்டது.

என் கண் முன்னே. என்னைப் பயப் படுத்திக் கொண்டிருந்த அந்தக் குகையிலிருந்துதான் அது வந்தது.

'யாரோ சிலர் இங்கு வந்திருக்கி ருர்கள். அதுவும் அவர்கள் தமிழி லேயே பேசுவதால் நமது செந்தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்க வேண்டும். நாம் இனி பயப் படுவதற்கு காரணம் என்ன இருக் கிறது? வருவது வரட்டும்' என்று நினைத்தபடி, என் உடலை ஒரு குலுக்கு குலுக்கிவிட்டு, தைரியமாக குகைக்குள் நுழைந்தேன்.

எனது நடையின் முடிவு, ஒரு பெரிய சிலையின் முன்பு என்னைக் கொண்டுவந்து நிறுத்தியது.

சிலையை உற்றுப் பார்த்தேன். எங்கோ பார்த்த முகமாக இருந்தது. இன்னும் அருகில் நெருங்கிப் பார்த்த போது அது ராகினியின் சிலை என்பது தெரிந்தது.

ராகினியின் சிலை இங்கு எங்கே வந்தது? இங்கு ஏதோ பேச்சு சப்தம் கேட்டதே, பேசிக் கொண்டிருந்தது யார்?

இவற்றைத் தெரிந்து கொள்ளும் ஆவலில் சுற்றிலும் ஒரு கண்ணேட் டம் விட்டேன்.

பாலய்யா, பத்மினி, வீரப்பா மற்றும் சிலரும் சிலைக்கு முன்பாக நின்றிருந்தார்கள்.

'பயங்கரமான ஒரு குகை; அதில் ராகினியின் சிலை. பாலய்யா, பத்மினி அங்கு—அப்படியானால் இது நிச்சயம் ஒரு படப்பிடிப்பாகத்தான் இருக்க வேண்டும்' என்று தீர்மானித்துக் கொண்டேன்.

அதற்கு ஏற்றாற்போல் 'கட்', 'லைட்ஸ்—ஆன்', 'மானிடர் ரெடி' என்ற படவுலக மந்திரச் சொற்களும் சிறிது நேரத்தில் அங்கு ஒலிக்க ஆரம்பித்தன.

இருண்டு கிடந்த குகை. இப்போது ஒளி வெள்ளத்தில் மிதந்தது.

அடுத்து பாலய்யா வீரப்பாவை இழுத்துச் சென்று, "இதோ பார் நீ வஞ்சித்த பூங்கொடி" என்று ராகினியின் சிலையைக் காட்டினார். பின்னர் இருவருக்குள் துப்பாக்கிச் சண்டை நடந்தது. தொடர்ந்து சமாதானமும் ஏற்பட்டது.

அடுத்து பத்மினி நடனமாடினார். சமரசமடைந்த பாலய்யா, வீரப்பா, பத்மினி எல்லோரும் சிலைக்கு முன்பே சந்தோஷமாக நிற்கிறார்கள்.

மேற்படி காட்சி பிரின்ஸிபல் பிக்சர்ஸ் தயாரிக்கும் 'வெறும் பேச்சல்ல' படத்தில் வருகிறது என்பதை தெரிந்து கொண்டேன்.

தவிர, நான் பார்த்த காட்சி பற்றி மேலும் சில விவரங்களைத் தந்தார் அங்கிருந்த ஒரு நண்பர்.

ராகினி ஒரு ஜமீன்தாரினால் வஞ்சிக்கப்பட்டு விடுகிறார். தன்னை வஞ்சித்தவனைப் பழிக்குப் பழிவாங்கவேண்டுமென்று கூறுகிறார் அவர் தன் மகன் பாலய்யாவிடம். அவரும் அதைச் செய்து முடித்தபின் தாயிடம் வந்து வணங்குகிறார்.

'வெறும் பேச்சல்ல' படத்தின் முடிவில் வருகிறது இது. காட்சிக்குக் காட்சி திடுக்கிடும் சம்பவங்கள்





போன்: 63. தந்தி: SIMCO

காந்திய முறைப்படி குடிசைத் தொழிலாகத் தினம் தயாராகும் 3300 குரோஸ் தீப்பெட்டிகளும் எங்கள் டிப்போக்களில் செலவாகி வருகின்றன.

சிறந்த சரக்கு உற்பத்தி! சிறப்பான பொதுஜன ஆதரவு!

எங்கள் 40 குச்சி கோபுர மார்க்; சிம்கோ லைட் மார்க்; சிம்கோ சைக்கிள் மார்க்; சிம்கோ 60 குச்சி வேட்டை சிங்கம் மார்க் தீப்பெட்டிகள் கடற்கரை, குளிர் பிரதேசங்கள், மற்றும் மலபார் மழைக்கும் உகந்தவை.

★

சிம்கோ, சிவகாசி.

## 'பேசும் படம்'

17, ஜெனரல் பேட்டர்ஸ் ரோடு
சென்னை-2

சந்தா விகிதம்

ஒரு வருஷம்

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 9 | 0 | 0 |
| வெளிநாடு | ,, | 12 | 0 | 0 |

ஆறுமாதம்

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ,, | 4 | 8 | 0 |
| வெளிநாடு | ,, | 6 | 0 | 0 |

வி. பி. பி.யில் அனுப்ப இயலாது. ஆறுமாதத்துக்குக் குறைந்த சந்தா கிடையாது.

குறிப்பு: 'பேசும் படம்' சந்தாதாரர்களுக்குப் பிரதி வருஷமும் ஏப்ரல் மாதத்தில் வெளிவரும் 'பேசும் படம்' ஆண்டு மலரும் அதிகக் கட்டணமின்றியே அனுப்பி வைக்கப்படும்.

நிறைந்த படம் இது. பிரின்ஸிபல் பிக்சர்ஸ் தயாரிப்பான இப்படத்தில், மேற்படி நடிகர்கள் தவிர, எஸ். வரலக்ஷ்மி, சுதர்சன் மற்றும் பலரும் நடித்து வருகிறார்கள். படத்தை ஜோஸப் பள்ளிபாட் டைரக்ட் செய்து வருகிறார்.

படம் முடிவடையப் போகிறது என்று நான் குறிப்பிடும்போது, விரைவில் அது திரைக்கு வந்துவிடும் என்பதும் தெரிகிறதல்லவா?

நெப்டியூனில் ஜூபிடர் ஏஎல்.எஸ். கூட்டுத் தயாரிப்பான 'கன்னியின் சபதத்'தில் ராஜசுலோசனா ஆடும் நடனமொன்றை, டைரக்டர் எஸ். பாலசந்தர் சமீபத்தில் படமாக்கினார். ஏ. கே. வேலன் கதை, வசனம் எழுதியிருக்கும் இப்படத்தில் கே. ஆர். ராமசாமி, தங்கவேலு, மாதுரி தேவி, ராகினி மற்றும் பல பிரபல நடிகர்கள் நடித்து வருகிறார்கள்.

இதே ஸ்டுடியோவில் கருணாநிதியின் 'புதையல்' கதையை, கமால் சகோதரர்கள் படமாக்கி வருகிறார்கள். பத்மினி, எம். கே. ராதா' சிவாஜி கணேசன், பாலய்யா முதலியோர் நடிக்கும் இப்படத்தை கிருஷ்ணன்-பஞ்சு டைரக்ட் செய்து வருகிறார்கள்.

* * *

பத்து மாதங்கள் சுமந்து பெற்ற குழந்தை திடீரென்று. "நீ என் அம்மா இல்லை!" என்று ஒரு தாயைப் பார்த்துச் சொல்லுமானால், அந்தத் தாய்க்கு எப்படி இருக்கும்?

இந்த மாதிரி ஒரு போதும் நடக்காது என்று நீங்கள் சொல்லலாம்! ஆனால் டைரக்டர் ஜானகிராம் தயாரித்து வரும் 'கண்ணின் மணிகள்' படத்தில் இப்படியொரு திடுக்கிடச் செய்யும் காட்சி வருகிறது.

இன்ஸ்பெக்டர் ராதாவை மணக்கிறார் ராஜம்மா. அவர்களது காதல் வாழ்க்கையில் முதல் மலராக ஒரு பெண் குழந்தை பிறக்கிறது.

குழந்தைக்கு திடுதிடுப்பென்று ஒரு நாள் காய்ச்சல் வந்து விடுகிறது.

"அம்மா! அம்மா!" என்று முனகும் தன் செல்வத்தை அணைக்க ஓடி வருகிறாள் தாயார்.

படுத்தபடியே தன் தாயாரின் முகத்தில் கைகளை வீசிப் போடும் அக்குழந்தை திடீரென்று. "நீ என் அம்மா இல்லை" என்று சொல்கிறது.

"ஹா!" என்று எதிர்பாராத இப்பெரும் தாக்குதலைக் கண்டு திகைத்து விடுகிறார் ராஜம்மா.

அடுத்து டாக்டர் சுந்தர் வருகிறார். அவர் ஏதோ ஆறுதல் சொல்லி விட்டுப் போகிறார்.

"கண்ணின் மணிகள்" பற்றி சென்ற மாதம் குறிப்பிட்டிருந்த ஒரு விஷயம் வாசகர்களுக்கு நினைவிருக்கும் என்று நினைக்கிறேன்.

முக்கிய பாத்திரங்களை ஏற்று நடிக்கும் நடிகர்களின் இயற்பெயரே, அவர்களது பாத்திரங்களுக்கும் வைக்கப்பட்டிருக்கிறது என்று அதில் குறிப்பிட்டிருந்தேன்.

மேற்படி காட்சியில் எம். வி. ராஜம்மா, புதுமுகம் சுந்தர், மற்றும் ஒரு சிறுமி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

# வேட்டை நக்ஷத்திரங்கள்

"வில்லன்"
ஆர். நாகேஸ்வரராவ்

நக்ஷத்திரங்களில் சிலர் வேட்டையில் மோகம் கொண்டவர்கள் என்று குறிப்பிட்டிருந்தேன். அப்படிப் பட்டவர்களின் வேட்டை அனுபவங்கள் ரொம்பவும் ரசமாக இருக்கின்றன. ஒருவரைப் பார்க்கிலும் இன்னொருவர் இந்த அனுபவங்களை அழகாக விவரிக்கிருர். தெலுங்கு படவுலகில் வில்லன் வேஷங்களில் புகழ் பெற்று, "வில்லன் நாகேஸ்வர ராவ்" என்றே புகழ் பெற்றுவிட்ட ஆர். நாகேஸ்வரராவ் ஒரு சிறந்த வேட்டைப் பிரியர் என்பதறிந்து அவரிடம் போனேன். அவரது அனுபவங்களைக் கேட்ட பிறகு அவர் சரியான வில்லன்தான் என்று தீர்மானித்தேன்.

நாகேஸ்வரராவ் மிகவும் இளம் வயதிலேயே வேட்டையில் ஆர்வம் கொண்டிருந்தார். "உண்டிவில்"லில் பக்ஷிகளையும் மரத்திலிருக்கும் ஒணான் முதலியவைகளையும் குறி வைத்து அடிப்பதில் இன்பம் கண்டு கொண்டிருந்த அவருக்குப் போகப் போக மிருக வேட்டையில் ஆர்வம் பிறந்து கிறுக்கும் பிடித்துவிட்டது. எதையும் குறி வைத்தால் அடிக்காது விடமாட்டார் அவர். "பள்ளி நாட்களில் வாலியை ராமன் தாக்கியது போல என் வகுப்பு மாணவ விரோதிகளை மறைவிலிருந்து குறிவைத்து 'மலைப் பிஞ்சால்' தாக்குவேன்! அவர்கள் உபாத்தியாயரிடம் போய் நான் அடித்ததாகச் சொல்லுவார்கள். ஆசிரியர் என் முதுகெலும்பின் பலத்தை பரிசோதிப்பார்" என்று ஹாஸ்யமாகக் குறிப்பிட்டார் நாகேஸ்வரராவ். இன்றும்கூட துஷ்ட மிருகங்களை வேட்டையாடும்போது மறைவில் நின்று தாக்குவதையும் அந்தக் கலியுக ராமனிடம் கூறியபோது "அது தந்திரமே ஒழிய பயமில்லை" என்று சொன்னார்.

வில்லனுக்கு மிருக வேட்டையில் எவ்வளவு ஆசையிருந்ததோ அவ்வளவு பயம் அவரிடம் அவர் வீட்டாருக்கு இருந்தது. இளம் கன்று பயமறியாது என்பது போல, 'வேட்டையாடப் போகிறேன்' என்று சிறு பிள்ளை சொன்னால் வீட்டாருக்கு எப்படியிருக்கும்? ஆகவே நாகேஸ்வரராவ் வேட்டைக்குப் போக அனுமதிக்கப்படவில்லை. 1941-ல்தான் அவர் வேட்டையாடத் தொடங்கினார்.

செகந்தராபாத் பாரமவுண்ட் தியேட்டர் மானேஜராக நாகேஸ்வரராவ் அப்போது பணியாற்றி வந்தார். அவரது காண்டிராக்டர் நண்பர் பிரசாதுடனும் மற்றும் சில நண்பர்களுடனும் ஒரு சமயம் அவர் காட்டு வழியாகப் போய்க்கொண்டிருந்தார். அவரது நண்பரொருவர் அவரது வேட்டைப் பைத்தியத்தைக் கண்டோ, தியேட்ட

ருக்குள் "ஓசி"யில் படம் பார்ப்பதை மனதில் கொண்டோ (!) அவருக்கு இரட்டைக் குழல் துப்பாக்கியைப் பரிசளித்திருந்தார். காடுகள் சூழ்ந்த அந்த இடங்களிலே துப்பாக்கி லைசென்ஸ் பெறுவது அவ்வளவு கடினமாக இருக்கவில்லை. அந்த லைசென்சுள்ள துப்பாக்கி ஜீப்பிலிருந்த நாகேஸ்வரராவின் தோளில் தொங்கியது. காட்டு வழியே ஜீப் போகும்போது துப்பாக்கியை எடுத்து தயாராக வைத்துக்கொண்டார்கள். நைஜாமுக்கு சொந்தமான அகில இந்திய ரேடியோ அவுட்போஸ்ட் இருக்குமிடம் காட்டு மிருகங்கள் நிறைந்த இடம். அங்கே ஜீப் வேகமாகப் போகும்போது இரு மான்கள் துள்ளித்துள்ளி ஓடுவதை கோஷ்டியினர் கண்டனர்.

'டுமீல்...டுமீல்...'

இரு மான்களும் சில வினாடிகளில் அங்கேயே சலனமற்றுக் கிடந்தன.

"சபாஷ் நாகு, சபாஷ்! பெரிய பெரிய வேட்டைக்காரர்கள்கூட எதிர்பார்த்து மானைச் சுட்டாலும் குறி தவறிவிடுகிறது. ஓடும் ஜீப்பிலிருந்து முதன் முதலாக நீ மானைச் சுட்டதால் உன் திறமை நன்றாகத் தெரிகிறது. இனி நீ எங்களை மிஞ்சிவிடுவாய்" என்று பிரசாத் பாராட்டினார். மான்களை நண்பர்கள் துண்டிக்க ஆரம்பித்தனர். ஒன்று ஆண்; மற்றொன்று அதன் மனைவி. அதன் வயிற்றைக் கிழித்தபோது அங்கே இரண்டு குட்டிகள் காணப்பட்டன. இன்னும் இரண்டொரு நாட்களில் குட்டிகள் வெளி உலகிற்கு வந்திருக்க வேண்டும். ஆனால் துரதிருஷ்டவசமாய் நமனுலகு சேர்ந்தன. மான் இறந்தவுடனே அதன் ஈரலை சூடு இருக்கும்போதே புசித்தால் அவ்வளவும் உடலுக்கு வலிமையூட்டுமாம். "எனக்கு அன்று இருந்த ஆர்வமும் குஷியும் என்னை கனவு லோகத்திற்கே கொண்டுபோய் விட்டன. இன்று அம்மாதிரி நடந்திருந்தால் வேட்டையாடுவதையே நிறுத்தியிருப்பேன். ஆனால் எந்த மிருகமானாலும் காட்டிலே கண்டுவிட்டால் அதை வீழ்த்திவிடவேண்டுமென்ற மனோபாவம் வளர்ந்துவிட்டது" என்றார் நாகேஸ்வர ராவ்.

"துப்பாக்கியால் சுட்டுத்தான் மிருக வேட்டையாட வேண்டுமென்று வைத்துக்கொண்டால் ஒன்றும் நடக்காது. குண்டு வெடித்து மறுபடி குண்டு திணிப்பதற்குள், அடிபட்டோ படாமலோ இருக்கும் மிருகம் நம் மேல் பாயும். அப்போது நாம் வெறும் சரீரத்தாலேயே சமாளிக்கும் மன வலிமை பெற்றிருக்க வேண்டும்"— என்று வில்லன் கூறினார். அதற்கு உதாரணமும் சொன்னார்.

பூனாவுக்கும் கண்டலாவுக்கும் மத்தியிலேயுள்ள காட்டு வழியே அவர் தனது நண்பர்களுடன்போய்க்கொண்டிருந்தார். ஒரு திருப்பத்தில் அவர் தெரு நடுவே ஒரு புலி படுத்திருப்பதைக் கண்டார். அது நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தது. பொழுது சாய்ந்து இருள் கவ்விய நேரம் அது. காரின் விளக்கை அணைத்து விட்டார் நாகேஸ்வரராவ். வண்டியை நிறுத்தி துப்பாக்கியை எடுத்து அந்தப் பெரிய புலியை சுடுவதற்கு நேரமில்லை. பிரேக் சப்தத்தில் அது விழித்துக்கொண்டு ஓடினாலும் ஓடும்; பாய்ந்தாலும் பாயும். ஆகவே சமயோசிதமாக காரின் வேகத்தை அதிகப்படுத்தி அதன் மேல் ஏற்றிவிட்டார். 'டடக் டடக்' என்று முன் சக்கரங்களும் பின் சக்கரங்களும் ஏறி வண்டி முன்புறம் போனதும் நிறுத்தி மீண்டும் பின்புறம் செலுத்தினார். மீண்டும் 'டடக் டடக்' சப்தம். புலி மாண்டது. மகா குஷியுடன் அதைக் காரில் போட்டுக் கொண்டுபோய் தோலை சுத்தப் படுத்தி வைத்துக் கொண்டார்.



ரஜாக்கர்கள் அட்டூழியம் அளவு கடந்துபோனதால் நாகேஸ்வரராவ் தன் துப்பாக்கியை விட்டுவிட்டு ஹைதராபாத் ராஜ்யத்தை விட்டே வெளியேறினர். பூர்ணபிக்சர்ஸ் ஸ்தாபனத்தாருக்கு பார்வதிபுரத்தில் பூர்ண தியேட்டர் சொந்தமாக இருக்கிறது. நாகேஸ்வரராவ் அந்தத் தியேட்டருக்கு மேனேஜராகப் பணியாற்றச் சென்ருர். அப்போதெல்லாம் தினசரி காலையிலும் மாலையிலும் நிறைய பறவைகளைச் சுட்டு கூட வந்தவர்களுக்குத் தருவது சாதாரண விஷயமாக இருந்தது. இதனல் அவருக்கு ஒரு கோஷ்டியும் ஏற்பட்டது. ஒரிஸ்ஸா காடுகளில் கொண்டல்ராவ் நாயுடு என்ற நண்பரும் வில்லனும் ஒரு பிரம்மாண்டமான புலியைச் சுட்டுக் கொன்ருர்கள். இதெல்லாம் சகஜமான நிகழ்ச்சிகளாகி விட்டன வில்லனுக்கு.

ஆனல் 1950-ம் வருஷம் 12-ம் தேதி சங்கராந்தியன்று அவருக்கு ஏற்பட்ட அனுபவம் பயங்கரமானது. அன்றிரவு அவர் ஆஸ்டின்-40 காரில் தன் நண்பர்களுடன் மஞ்சீரியல் காடுகளிலிருந்து ஹைதராபாத்துக்குப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். வழியில் கம்மாரெட்டி என்கிற ஊர் வந்தது. காடுகள் நிறைந்த அந்தப் பிரதேசம் ஹைதராபாத்திலிருந்து சுமார் எண்பது மைல் தூரத்தில் இருக்கிறது. இரவு சரியாக ஒரு மணி. ஸ்மசான அமைதி நிலவிய அந்தப் பிராந்தியத்தின் நிசப்தத்தைக் குலைத்துப் பயங்கர எதிரொலியை ஏற்படுத்தியது, காரின் ஓட்டத்தால் ஏற்படும் சப்தம்.

சக்கரம் 'கசுக்' என்று ஏறி இறங்கும். பார்த்தால் ஒரு முயல் செத்துக் கிடக்கும். தற்கொலை செய்து கொள்ள விரும்புவதைப் போல பத்து பதிஞேரு முயல்கள் சக்கரத்தில் மாட்டிக் கொண்டு மாண்டன. முயல்கள் இப்படி இரவு வேளைகளில் கண்மண் தெரியாமல் ஓடிவந்து மாட்டிக் கொள்வது சகஜமானலும் ஏனே யாவரிடையேயும் ஒரு திகில் ஏற்பட்டது. வில்லன் மட்டும் தைரியமாக இருந்தார். அவர் வேட்டைப் பிரியராயிற்றே! பதிஞேரு முயல்களைப் பலி கொண்டு ரத்தம் தோய்ந்து சிவப்பாகி விட்ட சக்கரங்களுக்கு இன்னும் ரத்தவெறி தணியவில்லை. இன்னும் வேலை பாக்கியிருந்தது போலும். நடுத்தெருவில் பிரம்மாண்டமான (எட்டடியிருக்கும்) வேங்கை படுத்திருந்தது. நாகேஸ்வரராவ்கூட அதன் ஆகிருதியைக் கண்டு ஒரு கணம் தடுமாறினர். ஆனல் உடனடியாகச் சமாளித்துக் கொண்டு உயிருக்குத் துணிந்து ஒரு காரியம் செய்தார். காரின் வேகத்தை அதிகப்படுத்தி அதன் மேல் போய்ச் சடாரென்று மோதினர். அவரது குறி தவறவில்லை. ஆனல் அவரும் தூக்கியெறியப்பட்டுப் படுகாயமடைந்தார். மண்டையிலே முன்னும் பின்னும் வளைந்து சுமார் பதிஞேரு அங்குலம் கிழிந்துவிட்டது. கண்ணுக்கு மேலே ஆழமாகக் குத்திக் கிழிந்து விட்டது. உடலெங்கும் அடி. ரத்தம் வழிந்தது ஆனலும் வில்லன் தன் நண்பர்களிடம் புலி மாண்டு விட்டதா என்று விசாரித்துக் கொண்டிருந்தார்! நண்பர்களுக்குச் சிறு காயம், அவ்வளவு தான்.

நாகேஸ்வரராவ் உடனே கம்மாரெட்டி ஆஸ்பத்திரிக்கு தூக்கிச் செல்லப்பட்டார். அங்கே அவருக்கு தலையில் இருபத்தைந்து தையல்கள் போடப்பட்டன. அங்கிருந்து ஹைதராபாத் ஆஸ்பத்திரிக்கு அகற்றப்பட்டு சுமார் இரண்டு மாதங்கள் படுக்கையிலிருந்தார்.

மலைக்கள்ளனில் ஒரு புலி வருகிறதல்லவா! தெலுங்கு (அக்கிராமுடு) மலைக்கள்ளனில் நடிக்கச் சென்றபோது அந்தப் புலியுடன் நாகேஸ்வரராவ் போட்டோ எடுத்துக்கொண்டார். ஆலை சொந்தக்காரர் ஏ. எல், ஸ்ரீநிவாஸராவ் குட்டியில் பிடித்ததாம் அது. "எனக்கு நான் சுடும் மிருகங்களுடன் போட்டோ எடுத்துக்



கொள்ள வேண்டுமென்ற ஆசை நிறைய உண்டு. ஆனால் நான் அகாலத்தில் வேட்டையாடும்போது புகைப் படக்கலையில் பயிற்சியுள்ளவர்களுடன் போக நேரிடுவதேயில்லை. ஆகவே தான் அந்தப் புலியுடன் போட்டோ எடுத்துக்கொண்டேன்" என்றார் வில்லன்.

நான் சென்ற மாத ஆரம்பத்தில் நாகேஸ்வரராவை பார்த்தேன். இந்தக் கட்டுரைக்கான விஷயங்களைச் சொன்னதும் வேறொரு விஷயமும் கூறினார். "விஜயநகரம் அருகே காடுகளில் ஒரு 'அனுபவம் வாய்ந்த கிழப் புலி' இருக்கிறது. தான் கொல்லும் மிருகங்களுடன் அது மறைந்து விடுகிறது' என்று என் நண்பர் எழுதியிருக்கிறார். நானும் நடிகர் எஸ். வி. ரங்கராவும் (இந்த நடிகரும் வேட்டையில் வில்லன் என்பதை நாகேஸ்வரராவ் சொல்லித்தான் நான் அறிந்தேன். இந்தப் பகுதிக்குப் புற்றிலிருந்து ஈசல் புறப்படுகிறது பார்த்தீர்களா!) வருகிற பதினைந்தாம்தேதி போகப்போகிறோம். தவறாமல் அந்தப் புலித்தாத்தாவைச் சுட்டு விடுவோம்" என்று நாகேஸ்வரராவ் கூறியபோது நான் அவர்மீது கேள்விபாணம் தொடுத்தேன்.

"அனுபவம் வாய்ந்த கிழப் புலி' என்று எப்படிக் குறிப்பிட முடியும்?" என்று நான் கேட்டபோது, அந்தக் கேள்வியை எதிர்பார்த்தவர் போலப் பேசினார் அவர். "மிருக வேட்டையிலே இது தான் நமக்கும் அனுபவத்தைக் கொடுக்கக் கூடியது. மிருகங்களின் இயற்கை மனோபாவத்தை நாம் கவனிக்காமல் துப்பாக்கியுடன் போவதில் பிரயோஜனமில்லை. புலி எப்போதும் தான் கொன்ற மிருகத்தை விட்டுச் செல்லும். பிறகு தோன்றிய போதெல்லாம் வந்து கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிட்டு விட்டுப் போகும். ஆனால் இந்தப் புலி தான் கொன்றதைத் தூக்கிச் செல்கிறது. வேட்டையாளரிடமிருந்து பலமுறை தப்பியிருப்பதால், அங்கே அடிக்கடி வருவதால் ஆபத்து ஏற்படும் என்று தெரியும். சிறு புலியானால் பயமின் வரும். துணிந்து எதிர்க்கும். கிழமாதலால் ஆபத்தை ஏற்படுத்திக் கொண்டு சமாளிப்பதைவிட தன் இரையுடன் செல்வது நல்லது என்ற முன்யோசனையுடன் போய்விடுகிறது. இதைக் கொண்டு நிச்சயமாக மதிப்பிட முடிகிறது" என்று வில்லன் சொல்லி முடித்ததும் 'சபாஷ் வில்லன்' என்று கூறத் தோன்றியது. ஆனால் புலியைப் பற்றிய விஷயமாதலால் பயத்தில் வார்த்தைகள் உள்ளேயே நின்றுவிட்டன!

புலி கிழமானாலும் புலி புலிதானே. கதைகளில் புலி வந்தாலே நமக்குப் பயமாயிற்றே! அப்படியிருக்க இப்போது......!

நாகேஸ்வரராவின் விஜயநகர விஜயம் வெற்றிகரமாக முடிந்ததும் உங்களுக்குச் சொல்லாமலா இருப்பேன்? ★

பெயரும் சித்ராங்கி என்பதால் கையிலிருப்பதும் சித்திரக்கோல் என்பதில்லை. மினர்வாவின்—'சாரங்கதரா'வில் பானுமதி



கையிலிருக்கும் கனியைவிட கருத்திலிருக்கும் கன்னியிடம்தான் அவருக்கு ஆசை அதிகம் என்பதை பார்வையே சொல்லுகிறதே!

—'கண்ணின் மணிக'ளில் ராதா-ராஜம்மா.

ராகினி

# பெண்ணின் பெருமை

காட்சிகள்

PSR

சாந்தகுமாரி, எம். என். ராஜம், நாகய்யா, கே. நடராஜன், பிரண்ட் ராமசாமி, பி. எஸ். ஞானம், சிவதாணு, அங்கமுத்து, வி. பி. பலராம் முதலியோரும் நடித்து வருகிறார்கள். வசனம், பாடல்களை ராமய்யாதாஸ் எழுதியிருக்கிறார்.







ஜெமினி கணேசன்
அண்ணுகவும்
சிவாஜி கணேசன்
தம்பியாகவும்
தோன்றி சக்கைப்
போடு போடுகிருர்
கள் இதிலே.



சாவித்திரி 'பெண்ணின் பெருமை'யை விளக்கும் ஒரு ஆதர்சகிராமகுடும்ப பெண்ணுக நடித்து வருகிருர்.

ராகினி பிலிம்ஸார் முதன் முறையாக தமிழ் நாட்டின் இரு பிரபல சினிமா கணேசன்களையும் இப்படத்தில் நடிக்கச் செய்திருக்கிறார்கள். பி. புல்லையா இப்படத்தைத் தயாரித்து டைரக்ட் செய்திருக்கிறார்.



மாடர்ன் தியேட்டர்ஸ்

# அலிபாபாவும் 40 திருடர்களும்

## திரைக்கதை வசனம்

### அறிமுகம்

காசிம்கான் ஒரு பணப்பேய். கூடப் பிறந்தவனானாலும்கூட அவனுக்கு அவசியமில்லை. அவன் பம்பரம் என்றால் அதை ஆட்டுவிக்கும் கயிறு அவன் மனைவி சலீமா. இவர்களால் ஏமாற்றப்பட்டவர்கள்தான், காசீமின் தம்பி அலிபாபாவும் தங்கை ஆயேஷாவும். அலிபாபா ஆயேஷாவுடன் கஷ்டஜீவனம் செய்யும்போது, காசீம் கான் பாக்தாத்தின் அமீராக மாளிகையிலே வாழுகிறான். மார்ஜியானா ஒரு நாடோடி நடனப் பெண். பெரும் செல்வந்தர்களான அவர்கள் குடும்பத்தில் அவளைத் தவிர, மற்ற எல்லாவற்றையும் பறித்து விட்டனர், அபுஹுசேன் என்ற கொள்ளைக்காரனும் அவன் கோஷ்டியினரும். உற்றார், உறவினர், செல்வம் எல்லாம் இழந்த மார்ஜியானாவுக்கு தாயும் தந்தையுமாக இருந்து ஆதரிக்கிறான் தௌலத். அவள் நடனமாடும்போது அவன் டோலக் வாசிப்பான். அதில் வரும் பணத்தில் அவர்கள் பிழைக்கிறார்கள். ஆயேஷாவின் தோழி புல்புல். அவள் அந்த வீட்டு வேலைகளை ஒழுங்காகக் கவனித்துக் கொள்ளுகிறாள், குலாம் ஒரு சக்கிலியன், பணத்திற்காக வாயைப் பிளக்கும் நடைப்பிணம் அவன். சம்பாவும் ரம்பாவும் இரு கழுதைகள். அலிபாபாவுக்குச் சொந்தமானவை!

### காட்சி 1

#### ஆண்டவன் கட்டளை

பாக்தாத் நகரில் மார்ஜியானா நடனமாடிப் பிச்சையெடுக்கிறாள். தௌலத் டோலக் வாசிக்கிறான். அப்போது அங்கே காசீம் கானின் தளபதி ஷேர் கான் வருகிறான்.

ஷேர்: மார்ஜியானா! ஆடுவதற்கென்றே பிறந்தவள் நீ. ஆஹாஹா! காஷ்மீர் கம்பளம் உன் உடல்!

மார்: யார் காலிலும் மிதிபட நான் தயாராக இல்லை.

ஷேர்: தொட்டால் மென்மை தரும் பட்டு உன் மேனி.

மார்: பிறர் மேனியை அலங்கரிக்க எனக்குப் பிடிக்காது.

ஷேர்: (சவுக்கால் அவள் முகத்தைத் திருப்பி) கேள் மார்ஜியானா!

#### பாத்திரங்கள்

| | |
|---|---|
| எம். ஜி ராமச்சந்திரன் | அலிபாபா |
| எம். ஜி. சக்ரபாணி | காசிம்கான் |
| கே. சாரங்கபாணி | தௌலத் |
| பி. எஸ். வீரப்பா | அபுஹுசேன் |
| தங்கவேலு | குலாம் |
| பானுமதி | மார்ஜியானா |
| பி. சுசீலா | ஆயேஷா |
| எம். என். ராஜம் | புல்புல் |

டைரக்ஷன்:

டி. ஆர். சுந்தரம்

வைரம் மகுடத்தில் இருக்க வேண்டும்; மண்ணிலல்ல. பாடிப் பிச்சை கேட்டு நீ ஆடித் திரிவதைவிட, அமீர் காசிம்கானின் அந்தப்புரத்தில் ஆடினால் பகட்டான மாளிகையில் படாடோபமாக வாழலாம்.

மார் : (ஏகத்தாளமாக) சுதந்திரமாகச் சுற்றும் கிளிக்கு தங்கக் கூண்டை காட்டுகிறார் இந்த தாராளக்காரர்! ஐயா சாஹேப்! மாளிகையின் பூனைக்கு இரையாக இது ஏமாந்த கிளியல்ல.

ஷேர் : மார்ஜியானா! நீ அதிர்ஷ்டத்தைத் தள்ளுகிறாய்!

மார் : இல்லை, ஆபத்தைத் தவிர்க்கிறேன். சர்தார்ஜீ! மார்ஜியானா மானேதான். அதைப் போல் மானமும் கொண்டவள். கற்பை விற்று உங்கள் காசிம்கானின் அற்ப தாசியாக இருப்பதை விட ஏழைகளுக்கு முன் ஆடிப் பிழைப்பதில் கேடொன்றுமில்லை. உங்கள் அழைப்புக்கு ஆயிரம் சலாம். நீங்கள் போகலாம்.

ஷேர் : உனக்கு அவ்வளவு திமிரா?

சாட்டையைப் போட்டு அவளைப் பக்கத்தில் இழுக்கிறான்.

ஷேர் : பணிந்து விடு!

மார் : ச்சீ!

ஷேர்கான் சவுக்கை வேறுமாதிரி இழுக்கிறான். அவள் சுற்றிக் கொண்டே போய்க் கீழே விழுகிறாள்.

தௌலத் : சர்தார்ஜீ! சர்தார்ஜீ!!

ஷேர் : ஏய் டோலக்!

தௌ : தப்பு தப்பு! என் பெயர் டோலக் இல்லை. ஹமாரா நாம் தௌலத். போலோஜீ! இரண்டு தடவை சொல்லிப்பாருங்க, தௌலத்! தௌலத்!

ஷேர் : சீ! போ அப்பால்.

தௌ : சர்தார்ஜீ சர்தார்ஜீ! வேண்டாம். காட்டெருமை யானையை எதிர்க்கலாம்; மானை எதிர்த்து என்னங்க பிரயோசனம்?

ஷேர் : முட்டாள் பேர.

தௌ : இந்த அக்ரமத்தைக் கேட்பார் யாருமே இல்லியா? அல்லா! இது உனக்கு நல்லா இருக்கா?

ஷேர்கான் தௌலத்தை இரண்டு அடி அடிக்கிறான்.

---

என் கடமையைத் தான் நான் செய்தேன்.

---

தெள : ஐயையோ ... ஐயையோ!
ஷேர்கான் மார்ஜியானுவை அடிக்க மறுபடியும் சவுக்கை ஓங்க ஒரு கை அவன் கரத்தைப் பலமாகப் பற்றுகிறது. திரும்பிப் பார்க்கிருன்.

ஷேர் : அலிபாபா! உன் அண்ணன் வீட்டிலிருந்து துரத்தியும் இன்னும் உன் திமிர் அடங்கவில்லே.

அலி : ஏன் இந்தப் பெண்ணே அடித்து அவமானப்படுத்தினுய்?

ஷேர் : (அலட்சியமாக) ம் ஹூம் அவள் வேலி இல்லாத ரோஜா. யார் வேண்டுமானுலும் பறிக்கலாம்.

அலி : வேலியில்லா விட்டாலும் ரோஜாவைப் பாதுகாக்க முட்கள் இருப்பது உனக்குத் தெரியாதா? இதோ பார் முள் படுத்தும் பாட்டை.
சாட்டையைப் பிடுங்கி தள்ளிவிடுகிருன். ஷேர்கான் விழுகிருன்.

அலி : ஷேர்கான்! பாக்தாத் நகர சந்தை பெண் வேட்டைக் காடல்ல. இந்த அப்பாவிகளே விட்டுவிடு!

ஷேர் : ம்...எனக்குக் கட்டளேயிட வேண்டியவன் நீயல்ல. உன் அண்ணன் அமீர்கான். அவர் தான் என் தலேவன்.

அலி : (சிரித்து) எல்லோருக்கும் மேலாக ஒரு தலேவன் இருக்கிருன். ஆண்டவன். அவருடைய கட்டளேக்கு நீயும் நானும் மட்டுமல்ல, அமீர் காசிம்கான் உள்பட இந்த நானிலமே தலே வணங்கித் தான் ஆகவேண்டும்.

தெள : ம்...கொடு என் கத்தியை.

ஷேர்கானுக்கும் அலிபாபாவுக்கும் சண்டை நடக்கிறது. அந்தக்கோஷ்டி அலிபாபாவிடம் உதை வாங்குகிறது,

---

நல்ல சமயத்தில் வந்து என்னேக் காப்பாற்றினீர்கள்......

---

தெள : குருவிக்கு பாம்புன்னு அந்தப் பாம்புக்கு (அலியைக்காட்டி) இந்தக் கருடனேயும் படைச்சிருக்கார் கடவுள்.

ஷேர்கான் முறைக்கிருன். தெளலத் சிரிக்கிருன்.

அலி : ஷேர்கான்! பிழைத்துப்போ! இனியேனும் மனித உணர்ச்சியோடு நடந்துகொள்.

ஷேர்கான் தட்டுத்தடுமாறிக் கொண்டு எழுந்திருக்கிருன்.

தெள : சர்தார்ஜி! மீசையிலே மண்ணு ஒட்டியிருக்கு. அப்படியே லேசா தொடையுங்க!

ஷேர் : அலிபாபா! அடிமை சிறுக்கிக்காக உன் ஆயுளேக்குறைத்துக் கொண்டாய்.

மார் : (கிண்டலாக) அடிபட்ட நாய் குலேக்கிறது.

ராகினி பிலிம்
ஸார் முதன் முறை
யாக தமிழ் நாட்டின்
இரு பிரபல சினிமா
கணேசன்களையும்
இப் படத்தில் நடிக்
கச் செய்திருக்கிறார்
கள். பி. புல்லையா
இப்படத்தைத் தயா
ரித்து டைரக்ட்
செய்திருக்கிறார்.





எங்கள் நடனத் திறமை பார்!

அலி : ஷேர்கான்! இருப்பவன் பயந்து சாவான். இல்லாதவன் துணிந்து சாவான். நான் சாகும் வரையில் உங்கள் ஈனச் செயலுக்கு (கத்தியைக் காட்டி)... தடை உண்டாக்கிக் கொண்டிருக்கும்.

ஷேர் : *நிறுத்து.*

தௌ : *ஜாவ்.*

மௌல்வி : (வந்து) *அலிபாபா!* செல்வத்தை நம்பி செருக்காக இருக்கும் உன் அண்ணன் ஆட்களுக்கு நல்ல புத்தி கற்பித்தாய். ஆண்டவன் உன்னை ஆசிர்வதிப்பார்.

**அலிபாபா போகிறான்.**

மார் : தௌலத்! அவர் போறாரு.

**தௌலத்தும் மார்ஜியானாவும் அலியைத் தொடர்ந்து ஓடி வரு**

குலாமுக்கு பை நிறைய மோஹராக்கள் தருகிறாள் மார்ஜியானா.

கின்றனர். மார்ஜியானு ஏதோ சொல்ல வாயெடுக்கிருள்.

தௌ : அலிபாபாஜி ! அலிபா பாஜி! நாங்க ரெண்டு பேரும் நன்றியைச் சொல்லணும்னு ஓடோடி வந்தோம். போட்ட சத்தத்தை காதுல வாங்காம நீங்க போய்க்கிட்டே இருக்கீங்க.

மார் : நல்ல சமயத்தில் வந்து என்னைக் காப்பாற்றினீர்கள்.

அலீ : என் கடமையைத் தானே நான் செய்தேன்?

மார் : உங்களைப் புகழுவதற்கு...

அலீ : வார்த்தைகள் தேட வேண்டாம். என்னை புகழ்ந்ததாக எண்ணிக் கொள்கிறேன்.

தௌ : மனசுக்குள்ளே என்னென்னமோ உதிக்குது, ஓதைக்குது. ஆனு நாக்கு உதவி செய்

---

இந்தச் சமையல் செய்த கைகளுக்கு வைர வளையல்கள் போட்டிருப்பேன்!

---

யலே. அப்படித்தானே மார்ஜி யான...?

மார் : என்வாழ்க்கையிலே! எனக்காக உதவி செய்த முதல் மனிதர் நீங்கள்தான்.

அலி : எனக்கு அதிகமாகப் பேசிப் பழக்கமில்லே. நான் வருகிறேன்.

மார் : உங்கள் வீட்டில் எனக்கு அடைக்கலம் தருவீர்களா...?

அலி : ம்...எனக்கு பெண்களைக் கண்டாலே பிடிக்காது. அதிலும் ஆண்களை அடக்கியாளும் கண்களை கண்டாலே எனக்கு ரொம்ப பயம். நான் வரட்டுமா ?

தௌ : ஹூம் துனியாவிலே பார்க்க முடியாத தனி ஆளு.

மார் : (வெறுப்புடன்) அகந்தை பிடித்தவர்.

(அலிபாபா தன் சகோதரி ஆயேஷாவுடன் வீட்டுக்குள்ளே செல்கிறான். இதைப் பார்த்து அலிபாபாவை தவருக நினைக்கிருள் மார்ஜியானு.)

மார் : (நடித்து) பெண்களை கண்டாலே எனக்குப் பிடிக்காது. அடடா! என்ன சாகஸம்! நடிப்பில் பெண்களைவிட ஆண்கள்தான் திறமைசாலிகள்.

தௌ : இருந்தாலும் அந்தக் கண்வெட்டும் கழுத்து வெட்டும் ஆண்களுக்குச் சுட்டுப் போட்டாலும் வராது.

மார் : நீ சும்மா இரு. வெளிப்படையா எனக்கு கல்யாணம் ஆயிடுச்சுன்னு சொன்ன நான் வெட்டியா தின்னுடுவேன்? ஏன் பிரம்மச்சாரி வேஷம் போடணும்?

தௌ : அவருக்கு கல்யாணம் ஆனு என்ன. ஆகாட்டி உனக்கென்ன? ஆணையும் படைச்சு, ஒரு பெண்ணையும் படைச்சி, அங்கே மொஹபத்தையும் படைச்சிட்டியே, அல்லா ! இது உனக்கு கல்லா இருக்கா?

மார் ; இல்லே......

ஷேர்கான் ஆட்களோடு வருவதை தௌலத் பார்த்து விடுகிருன்.

தௌ: மார்ஜியானு! ஆபத்துவருது! ஷேர்கான் வர்ரான். ஷேர்கான் !

மார் : வரட்டும். இனி எந்த ஆபத்துக்கும் நான் அஞ்சப்போவதில்லே.

கத்தி பிடித்த கை கோடரி பிடிக்கிறது.

தௌ : அஞ்சாம இருந்தா உடம்பு பஞ்சாப்போகும் வா. சீக்கிரம். அலி பாபா வீட்டுக்குப் போகலாம்.

மார் : விடு என்னை! அந்தப் பகல் வேஷக்காரன் வீட்டுக்கு நான் வர மாட்டேன்.

தௌ : அரே! பழத்தைக்கண்ட குரங்கு மாதிரி பாஞ்சிடுவாங்களே. வா மார்ஜியானா!

கரண்டி பிடிக்கும் கையும் கோடரி பிடிக்கிறது.

மார்: விடு என்னை. தௌலத்! நான் அங்கே வரமாட்டேன். தௌலத் விடு.

இழுத்துக் கொண்டு போகிறான். ஷேர்கானும் மற்றவர்களும் ஓடி வருகிறார்கள். தௌலத் மார்ஜியானாவின் கையை பிடித்தவாறு அலிபாபாவின் வீட்டு வாசலுக்கு வந்து கதவைத் தட்டுகிறான்.

தௌ : அலிபாபாஜி! அலி பாபாஜி! தர்வாஜா கோலோ! கதவைத் திறங்க!

மார் : தௌலத்! விடு என்னை...நான் வரமாட்டேன்.

தௌ : நான் விடமாட்டேன். அலிபாபாஜி! அலி பாபாஜி!!

அலிபாபா கதவைத் திறக்கிறான். தௌலத் மார்ஜியானாவை உள்ளே இழுத்து வந்து விடுகிறான்.

தௌ : அலிபாபாஜி! ஷேர் கான்...அப்துல்லா ... எல்லாம் ஆதாஹை.. வராங்க...

ஷேர்கானும் ஆட்களும் காரியம் நடக்காதென்று திரும்பிப் போய் விடுகிறார்கள்.

மார் : தௌலத்! வேணும்னே நீ என்னை அவமானப் படுத்தறே. உம் ... வழி விடு. நான் போறேன்.

தௌ : தேகோ பாபாஜி! இந்த சொக்ரியோட போக்கே எனக்குப் புரியலே. கோபம் ஒரு சமயம் குஷி ஒரு சமயம்

மார் : தௌலத்!

அலி : (சிரித்துக் கொண்டே) பச்சோந்திக்கு அடிக்கடி நிறம் மாறும். இந்த பெண்களுக்கு அடிக்கடி மனநிலை மாறும்.

மார் : (கோபமாக) ஆனாலும் வார்த்தையிலே ஒன்றும் எண்ணத்தில் ஒன்றுமாக வைத்திருக்கப் பெண்களுக்குத் தெரியாது.

அலி : மார்ஜியானா! நீ எதைச் சொல்கிறாய்?

மார் : பெண்களென்றால் எனக்குப் பிடிக்காது; இனிக்காது என்று அடுக்கிக் கொண்டே போனீர்களே அந்தப் புரட்டுப் பேச்சை. உதட்டில் தேனும் உள்ளத்தில் விஷமும் வைத்துப் பேசும் உத்தமரே! சலாம்! நான் வர்றேன்.

உண்மையைச் சொல், ஏது மோஹராக்கள்?

தௌ : மார்ஜியானா! மார்ஜியானா!

மார் : விடு என்னை. ஒரு வினாடி கூட இருக்கமாட்டேன்.

ஆயே : (வெளியிலிருந்து) என்னண்ணா இது?

மார் : அண்ணா?

ஆயே : (வந்து)யாரண்ணா இவள்?

அலி : ஆடலரசி மார்ஜியானா! அரேபியாவின் அழகுராணி.

ஆயே : அழகை இந்த நாட்டில் சிறைப்படுத்தி விடுவார்களே! இவங்க எப்படியண்ணா தப்பித்தார்கள்?

அலி : ஆயேஷா! மாளிகையின் பல்லிளிப்புக்கு இந்த மாணிக்கம் இசையவில்லை. அமீர் காசிம்கானின் ஆட்கள் நிறைய மோஹராக்கள் கொடுத்தனர் இவளை மயக்க. மறுத்தாள். பணத்துக்குப்பின் காசிம்கானுக்கு பலாத்காரம் தானே ஆயுதம்? அதையும் பிரயோகித்தான் ஷேர்கான். அப்போது...

ஆயே : ஏழைகளின் துணைவன் அலிபாபா வந்தான். எடுத்தான் வாளை...

தௌ : வீசினான். அவ்வளவு பேரும் காபரா ஆயி சலேகா! நாங்க இங்கே ஆகயா.

ஆயே : அண்ணா! இனிமேல் இவங்களை இங்கேயே இருக்கச் சொல்வோம். வெளியிலே போனா விபத்து ஏற்படும். என்னண்ணா?

அலி : தங்கையின் வார்த்தையை இதுவரை தட்டி நடந்ததுண்டா அலிபாபா...? ஆனால் மார்ஜியானா?

தௌ : நாங்க இங்கேயே இருக்கோம். என்ன மார்ஜியானா?

மார் : சரி, ஆயேஷா! இதைப் போன்ற அன்பை, அரும் பண்பை நான் எங்குமே கண்டதில்லை, ஆயேஷா!

ஆயே: அக்கா! இனிமேல் உங்களுக்கு எந்தவிதமான ஆபத்தும் வராது. இந்த வீடு உங்கள் சொந்த வீட்டைப்போல் நினைத்துக் கொள்ளுங்கள் அக்கா!... புல்புல்!புல்புல்!

மார்: கூண்டிலே அடைச்சிருக்கிங்களா?

தௌ: ஜோடியர் இருக்கா?

ஆயே: இது பறவையில்லே... பொம்பளெ.

தௌ: பொம்பளெ...

சிரிக்கிறுன்.புல்புல் விறகுக்கட்டைத் தூக்கிக் கொண்டு வருகிருள்.

தௌ: (வந்து) புல்புல்! பேருக் கேத்த பொண்ணு. பொண்ணுக் கேத்த உடம்பு. உடம்புக்கேத்த குணமும் கொண்டா கொண்டா நான் விறகுக் கட்டைவாங்கிக்கிறேன்.

திரும்பிப்பார்த்த புல்புல் விறகுக் கட்டை தடாலெனப் போடுகிருள். தௌலத் காலைப் பிடித்துக்கொண்டே கத்துகிருன்.

தௌ: அரே அல்லா! கால் போச்சு...தொடாதே!

புல்: ஐயையோ! (அவன் காலைப்பிடித்து) ஆமா – அடிபட்ட இடத்திலே ரத்தமே காணமே.

தௌ: ரத்தமா! 'கானு' இருந்தாத்தானே உடம்புலே மானுவாரியா ரத்தம் ஓடும்?

புல்: (கையைப் பிடித்து) இப்ப எப்படியிருக்கு?

தௌ: ஜில்லுன்னு இருக்கு!

புல்: இருக்கும் ஜில்லுன்னு!

ஆயே: புல்புல்! போய் சாயா போடு!

புல்: சரிம்மா.

தௌ: எனக்குச் சர்க்கரையில்லாத சாயாதான் பிடிக்கும். நானே போய் போட்டுக்கறேன்.

ஆயே: ஏன் அக்கா...யாரிவரு? உங்க அண்ணனு?

மார்: இல்லை ஆயேஷா, ஆனால் ஒரு அண்ணனுக்கு இருக்கவேண்டிய ரத்தபாசம், அக்கறை, கவனிப்பு எல்லாம் இவரிடம் உண்டு. உலகத்தில் அனுதையாக விடப்பட்ட...

ஆயே: அனுதையா?

மார்: ஆம், ஆயேஷா! பெர்ஸிய நாட்டின் பெரும் செல்வந்தராக இருந்த நாங்கள் சுல்தானின் கொடுமைக்கு ஆளாகி, அந்த ஊர்விட்டு ஓடி வந்தோம். வரும் வழியில்—

ஆயே: சொல்லுங்களக்கா.

மார்: கொள்ளைக் கூட்டத்தார் என் தாயையும் தந்தையையும் கொன்று போட்டார்கள். அவர்களிடமிருந்து தப்பித்த நானும் தௌலத்தும் எப்படியோ பாக்தாத் ஓடிவந்தோம். அதுமுதல் வயிற்றுப் பிழைப்புக்காக நாடோடியாக நாட்டியமாடி வருகிறேன்.

ஆயே: அவரவர் வாழ்க்கையில் ஒரு சோகக் கதை இருக்கிறது அக்கா!

மார்: உனக்கென்ன கவலை ஆயேஷா?

ஆயே: பெரிய பணக்காரர் வீட்டில்தான் நாங்களும் பிறந்தோம். ஆனுல் அண்ணன் காசிம்கான் எங்கள் சொத்தைப் பறித்துக் கொண்டு விறகு வெட்டிப் பிழைக்கச் செய்து விட்டான்.

## காட்சி 2

### பணப்பேய் காசிம்கான்

பணம் நிறையக் கொட்டிக் கிடக்கிறது காசிம்கானின் அறையிலே. ஆசையோடு எண்ணி எண்ணிப் பார்த்துக் கொண்டிருக்கிருன் அவன்.

காசிம்: ஆகா! அறுபது கைகளால் அள்ளி எடுத்தாலும் ஆசை தீராது. உயிலைரவிட உயர்ந்தது பணம். கடலை மேடாக்கும் அளவுக்கு கஜானுவில் நிறையவேண்டும். என்னை தவிர இந்த உலகில் எல்லோருமே ஏழைகளாக இருக்க வேண்டும்.

ஷேர்கானும் காசீமின் மனைவி சலீமாவும் வந்து அலிபாபாவை பற்றித் திரித்துக் கூறுகிருர்கள்,

காசி: ஷேர்கான்! நீ எதற்காக அந்த வீட்டிற்கு போயிருந்தாய்?

ஷேர்: ஹுஜூர்! தங்களுக்கு... (மாற்றி) பேகம் சாஹிபாவின் அடிமையாக்க ஒரு அழகான நாடோடிப் பெண்ணைப் பிடிக்கச் சென்றேன். அலிபாபா அவளுக்கு அடைக்கலம் தந்து விட்டான்.

காசி: (சிரித்து) அழகான பெண் தானே! சரிதான். கலகம் காரணத்தோடுதான் நடந்திருக்கிறது!

சலீ: காரணத்தைப்பற்றி இனிப் பிரச்னையில்லை. அந்த பரதேசிப்பயலுக்குச் சரியான பாடம் புகட்ட வேண்டும்.

காசி: இரு, அந்த பணத்தை எண்ணிவைத்து விட்டு வந்து விடுகிறேன்.

சலீ: பணம்...பணம்.. பணம்! சே! உங்களுக்கு மானத்தை விட பணம் தான் பெரிது.

காசி: உண்மைதானே சலீமா! பணமில்லா விட்டால் மானமேது?

சலீ: அப்பொழுது நடுத்தெருவில் நிறுத்தி வைத்து அவர்கள் நம்மை அவமானப் படுத்தினாலும் நீங்கள் சும்மாயிருப்பீர்கள். இது தானா உங்கள் ஆண்மை ..?

காசி: ஆண்மையா? என்ன செய்யவேண்டும் சொல்? ஷேர்கான்!

சலீ: எங்களையும் உன்னையும் கேவலப்படுத்தியவர்களை தண்டிக்க உனக்குப் பூரண உரிமை கொடுத்தேன் போ! என் கௌரவத்தைக் காப்பாற்று.

ஷேர்: ஹுகும்...சாஹிபா!
காசி: ஷேர்கான்!

சலீ: ம்... நான் கட்டளை இட்டிருக்கிறேன்.

காசி: போ ஷேர்கான் போ! காரியத்தைக் கவனி.

## ஆயேஷாவின் கிண்டல்

அலிபாபா சாப்பிட உட்கார்ந்திருக்கிறான். ஆயேஷா அருகிலிருக்க மார்ஜியானா பரிமாறுகிறாள்.

அலி: என் வாழ்க்கையிலேயே கண்டதில்லை இப்படி ருசியான சமையல். ஆயேஷா! நான் மட்டும் பணக்காரனாயிருந்தால் இந்தச் சமையல் செய்த கைகளுக்கு வைர வளையல்கள் போட்டிருப்பேன்!

ஆயே: (கிண்டலாக) அந்தக கைகளுக்கு சொந்தமானவங்கதான் உங்க மனசுக்கே வளையம் போட்டுட்டாங்களேண்ணா!

மார்: ஆயேஷா! குறும்பாப் பேசினா நாளைக்கு சாப்பாட்லே உப்பு அள்ளிப் போட்டுடுவேன்.

ஆயே: உப்பை அள்ளிப் போட்டாலென்ன, உரைப்பை அள்ளிப் போட்டாலென்ன? உன் சமையல்ல தப்பு சொல்லமாட்டார் எங்க அண்ணா.!

மார்: ஏன், உங்க அண்ணாவுக்கு நாக்கு மரத்துப்போச்சா...?

ஆயே: மோக்கம் பூரா வேரிடத்திலே இருக்கும்போது நாக்கு ருசியா தெரியப் போகுது?

மார்: ஆயேஷா! அப்ப நான் பரிமாறமாட்டேன்.

ஆயே: சரி. சரி. நான் பேசலே பரிமாறு. (போகிறாள்)

அலி: மார்ஜியானா! (கையைப் பிடித்து உட்கார வைக்கிறான்.)

மார்: ஐயையோ எச்சிக்கை. விடுங்க.

அலி: மார்ஜியானா! ஒன்ன பாத்ததுமே பசி போயிடுதே, ஏன்?

மார்: அதுவா .. அது வயித்துக் கோளாறு. இல்லாட்டி மூளைக் கோளாறு.

அலி: இல்லே இல்லே, என் மனசுக்கோளாறுதான். மார்ஜியானா! என்னைப் பார்த்தா உனக்கு என்ன தோணுது?

மார்: சொல்லட்டுமா? ம்... தாடி ஒண்ணு இருந்தா முகம் இன்னும் கொஞ்சம் அழகா இருக்கும்னு தெரியுது.

அலி: குறும்புக்காரி!

இருவரும் சிரிக்கின்றனர்.

## அல்லா! இது உனக்கு நல்லா இருக்கா?

தௌலத் புல்புலுடன் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருக்கிறான்.

தௌ: அல்லா! இது உனக்கு நல்லாயிருக்கா? புல்புல்! இனிமே என்னாலே பொறுக்க முடியாது!

ஒன்னப்பார்க்கும்போது கண்ணு ஜில்ஜில்ங்குது. மனசுகுறுங்குறுங்குது. உன் பதில்லே இருக்குது நான் மூச்சு விட்றது.

புல்; இந்த ஆம்பளேங்க பேச்சு நாவப்பழம் மாதிரி நாக்கிலே இனிக்கும். நம்பினு நெஞ்சைப் பிடிக்கும். மிட்டாயாப் பேசி மயக்க வேண்டாம். என்னே விட்டாலே போதும்.

கோடரிக் காம்புடன் வருகிருள் மார்ஜியானு.

தெள : அரே பாப்ரே பாப்! இது என்னு கையிலே? நாங்க சாதாரண மாத்தான் பேசிக்கிட்டு இருந்தோம். ஏன் புல்புல்.?

மார் : தெரியும். இந்தா பிடி. அவரு விறகு வெட்டப்போருரு.

தெள : நான் துணேக்குப் போகணுமா? அத்தானே. ஆமா எனக்குத் துணே யாரு ?

புல்; உனக்குத் துணேயா அந்த கழுதை வரும்.

தெள : உம்! மெத்தையிலே பத்திரமா இருக்கவேண்டிய இந்தக் கை கோடாலி பிடிக்கச் சொல்றியே மார்ஜியானு...?

மார் : அய்யோ! இதோபாரு! வாளேப் பிடிச்ச கையி...கோடாலியைப் பிடிச்சிருக்கு,

தெள : அடே! வாளு ஆளே வெட்டும். கோடாலி மரத்தை வெட்டும். இப்பதான் மரத்துக்கும் மனுஷனுக்கும் வித்யாசம் இல்லேயே. பசி வந்தா பழசு புதுசுன்னு பாக்கவா தோணும்.

அலி : சரி சரி வா! மார்ஜியானு வரட்டுமா.. ?

போகிருர்கள். தௌலத்தும் அலியும் மரங்களே வெட்டி விறகுகளேச் சேர்க்கின்றனர் கழுதைகள் அங்கு நிற்கின்றன. அலி விறகு வெட்டுவதைப் பார்க்கிருன் தௌலத்.

தெள : அடடா! இந்த வயித்துக்காக இந்தக் காட்டு மரத்தை வெட்ட வேண்டியிருக்குது. ஒருத்தன் சிரமப்பட்டு விறகை வெட்டருன். இன்னுெருத்தன் சந்தோஷமா சாப்பாட்டை வெட்டருன். அல்லா உனக்கு இது நல்லா இருக்கா...?

அலி : ஏய்! "அல்லா நல்லாயிருக்கா"ன்னு ஆண்டவனே அபிப்பிராயம் கேட்டா வேலே எப்படி நடக்கும்? வேலேயை கவனி,

தெள : கோச்சிக்காதே! டோலக் வாசிக்கிற கை கோடாலியை பிடிச்சா தாளம் போடச் சொல்லுது.

அலி : உம் சொல்லும் சொல்லும்.

கழுதையின்மேல் தௌலத் விழ அது ஓட ஆரம்பிக்கிறது.

அலி : தௌலத் கழுதை...! தௌலத் கழுதை...!! தௌலத் கழுதை.. !!!

தெள : என்ன? தௌலத் கழுதையா? அலிபாபாஜி! என்ன மரியாதை மாறுது?

அலி : ஏய்! கழுதை ஓடுது அப்படீன்னு....!

தெள : நம்ம கழுதையா...? அதுக்கு ஓடறதுக்குக்கூட சக்தியிருக்கா ?

அலி : பார்த்துப்பேசு.

தெள : அட கழுதே! என்ன! வேகமா ஓடுது!

அலி : ஏய்! கழுதை ஓடுதுன்னு ரசிச்சுகிட்டு இருக்கியே! போய் பிடிச்சுகிட்டுவா,

தெள : அது துரித காலத்திலே ஓடுது. நான் விளம்ப காலத்திலே டோலக் வாசிக்கிறவன். அதுக்கும நமக்கும் ஒத்துக்காது.

அலி : சுத்த சோம்பேறி. ஹே சம்பா...சம்பா...

கழுதையைத்தேடி ஓடுகிருன். தௌலத் மற்ருெரு கழுதையான ரம்பாவிடம் கொஞ்சுகிருன்.

தெள : ஏ! ரம்பா! ரம்பா! இங்க வா. நீ பெரிய மனுஷன் வீட்டு கழுதை! அந்த கழுதைமாதிரி ஓடிடாதே, புரிஞ்சிக்க. கௌரவமா இருக்கணும், கண்ணியமா நடக்கணும். (அதை இழுத்து) வா! வரமாட்டியா? இந்த பொம்பளேங்களே இப்படி பிடிவாதம். இதொபாரு 1001 இரவு சொன்ன அரபிக் கதையெ உனக்கு ஒரே நாள்ளே சொல்றேன். வா.

(114-ம் பக்கம் பார்க்க)

# வட இந்திய வெள்ளித்திரை

ஹிந்திப் படவுலகைப் பொருத்த வரை, பிரதி வருஷம் போலவே, சென்ற வருஷமும் தென்னிந்தியாவுக்கு அமோகமான வெற்றி கிடைத்திருக்கிறது.

சென்ற வருஷம் தயாரான மொத்த ஹிந்திப் படங்களில், பனிரெண்டு படங்களே மகத்தான வெற்றியை அடைந்திருக்கின்றன. அந்தப் பனிரெண்டு படங்களில் தென்னிந்தியாவில் தயாரான ஆசாத்தும், இன்ஸானியத்தும் இரண்டாகும்.

எனவே தென்னிந்தியாவைப் பொருத்தவரை, மகத்தான வெற்றி கிட்டியிருக்கிறது என்பதில் தவறில்லையல்லவா?

வட இந்தியாவில் நமது தென்னிந்தியப் படங்களுக்கு கிடைத்து வரும் அமோகமான ஆதரவும், வரவேற்பும் பல புதிய தமிழ்ப் படாதிபதிகளையும் ஹிந்திப் படவுலகில் அடியெடுத்து வைக்கச் செய்திருக்கிறது.

இந்த வகையில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியவர்கள் நாராயணன் கம்பெனியாரும், நரசு ஸ்டூடியோவினருமாகும்.

நாராயணன் கம்பெனியார் 'தேவதா' என்ற பெயரில் தங்களது வெற்றிப்படமான 'கணவனே கண்கண்ட தெய்வ'த்தை ஹிந்தியில் தயாரித்து வருகிறார்கள்.

ரேவதியிலும் ஜெமினியிலும் சுடப்பட்டு வரும் இப்படத்தில் தமிழ்ப் படத்தில் நடித்த அதே வேஷத்தில் ஜெமினி கணேசனும், அஞ்சலிதேவியும் நடித்து வருகிறார்கள். எம். என். ராஜம், முத்துலக்ஷ்மி ஆகியோருக்குப் பதிலாக கிருஷ்ண குமாரி, இந்திரா என்ற இரு வட இந்திய நடிகைகள் தோன்றுகிறார்கள்.

இப்படத்திற்காக குமாரி கமலா ஆடும் நடனமொன்று சென்ற மாதம் ஜெமினியில் படமாக்கப்பட்டது. ஹீராலாலின் உதவியுடன் கமலா இந்த நடனத்தை அமைத்திருக்கிறார்.

இந்தப் படத்திற்கு லலிதா ஏற்று நடித்த பாத்திரத்தில் இன்னும் யாரும் ஒப்பந்தம் செய்யப்படவில்லை. தமிழ்ப்

ஏவி. எம். 'சோரி சோரி'யில் நர்கீஸ் ராஜகபூர் தோன்றும் இக்காட்சி ரஸிகர்களைக் கவர்ந்து விடும்.

பதிப்பிலும் நீண்ட நாட்கள் வரை இப்பாகத்தில் நடிப்பது யார் என்பதே ஒரு புதிராக இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

யாரைக் கண்டு நிம்மியும் கிஷோர் குமாரும் இப்படி ஆச்சரியப்படுகிறார்கள்? 'பாய்-பாய்' படத்தில்தான் பதில் காணமுடியும்.

நரசு ஸ்டுடியோவினர் கிஸ்மத் படத்தை தமிழில் தயாரித்து வருகிறார்களல்லவா? அந்தப் படத்தை 'ஹிந்தி'யில் தயாரித்த கியான் முகர்ஜிதான், இவர்களது முதல் ஹிந்திப் படத்தை டைரக்ட் செய்யப் போகிறார். அவரே இப்படத்திற்கான கதையையும் எழுதியிருக்கிறார். வைஜயந்திமாலா—அசோக்குமார் இருவரும் இதில் பிரதம பாகத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஜெமினியின் அடுத்த ஹிந்திப் படம் கிராமாந்திரச் சூழ்நிலையைப் பின்னணியில் கொண்ட, ஒரு ஏழைக் குடும்பத்தைப் பற்றியதாகும். இதற்கான ஆக்க வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. ஹிந்திப் படத்தை எஸ். எஸ். வாஸன் டைரக்ட் செய்யப் போகிறார்.

ஏவி. எம். ஸ்டுடியோவில், அவர்களது சொந்தப் படமான "பாய் பாய்" முடிவடையும் தறுவாயிலிருக்கிறது.

தமிழ் ரத்தபாசத்தைத் தழுவி எடுக்கப்படும் இப்படத்தை எம். வி. ராமன் டைரக்ட் செய்து வருகிறார்.

இதில் அஞ்சலிதேவி ஏற்று நடித்த பாத்திரத்தில் நிம்மியும் திரௌபதியின் பாத்திரத்தில் நிருபாராயும் நடிக்கிறார்கள்.

நிஜ வாழ்க்கையிலும் சகோதரர்களான அசோக்குமார், கிஷோர்குமார் இருவரும் இதில் சகோதரர்களாகவே தோன்றுகிறார்கள்.

ஏவி. எம். அடுத்து வெளியிடப் போகும் ஹிந்திப்படம் இதுதான்.

இதே ஸ்டுடியோவில் அவர்களது கூட்டுடன் தயாராகும், 'சோரி சோரி' ஹிந்திப்படமும் வேகமாக வளர்ந்து வருகிறது.

ராஜ்கபூர் - நர்கீஸ் நடிக்கும் இதன் சங்கீத டைரக்ஷனை சங்கர் - ஜெய்கிஷன் ஜோடி ஏற்றிருக்கிறது. ஆனந்த் தாகூர் படத்தை டைரக்ட் செய்து வருகிறார்.

வைஜயந்திமாலா தோன்றும் இரண்டு ஹிந்திப் படங்கள் வட இந்தியாவில் திரையிடப்பட்டிருக்கின்றன.

பிமல்ராய் தயாரிப்பான 'தேவதாஸ்' படத்தில் சந்திரமுகியாக

'நயா ஆத்மி'யில் ஜமுனா, ராமாராவ்.

அவர். நடித்திருக்கிறார். இப்படத்தில் அவருடன் திலீப்குமார், மோதிலால், சுசித்ரசென் முதலியோரும் நடித்திருக்கிறார்கள்.

வைஜயந்தி நடித்து இரண்டாவதாக திரையிடப்பட்டிருப்பது 'கிஸ்மத் கா கேல்' என்பதாகும். கிஷோர் சாஹூ தயாரிப்பான இதில்சுனில் தத்துடன் அவர் பிரதம பாகத்தில் தோன்றுகிறார்.

ரஞ்சன் 'இன்குலாப்' என்ற புதிய படத்திற்கு ஒப்பந்தம் செய்யப் பட்டிருக்கிறார். இப்படத்தில் அவரது பிரதான நடிகை ஷ்யாமா ஆகும்.

வஹீதா ரெஹ்மான் தோனறும் குருதத் பில்ம்ஸாரின் 'பயாஸா' வுக்கான சில வெளிப்புறக் காட்சிகள் கல்கத்தாவில் படமாக்கப்பட்டன.

இதில் மாலா சின்ஹாவுடன், டைரக்டர் குருதத்தும் வஹீதாவுடன் நடிக்கிறார்.

வஹீதா நடித்துவரும் இதே கம்பெனியாரின் 'ஸி, ஐ. டி.' படம் முடிவடையும் தறுவாயிலிருக்கிறது. இதில் தேவ் ஆனந்த் அவருடன் கதாநாயகனாக நடித்து வரு கிறார்.

'இவ்விருப் படங்களுக்குப் பின்னர் வட இந்தியப் படங்களுக்கே போகப் போவதில்லை. தமிழ் நாட்டில் தயாராகும் படங்களில் நடிக்கவே அதிக கவனும் செலுத்துவேன்' என்று வஹீதா சொல்லியிருக்கிறார்.

கோவையிலிருக்கும் 'பக்ஷிராஜா' வை சென்னைக்கு மாற்றும் முயற்சியில் டைரக்டர் ஸ்ரீராமுலு நாயுடு ஈடுபட்டிருக்கிறார்.

இது முடிந்ததும் அவரது அடுத்த ஹிந்தித் தயாரிப்பும் உடன் ஆரம்பிக்கப்படும் என்று எதிர் பார்க்கப் படுகிறது.

திரைப்பட உலகில்
புதுமை! புரட்சி!

MR புரொடக்ஷன்ஸ் அளிக்கும்...

# நடிகன்

(தமிழ்)

நடிகவேள் எம்.ஆர்.ராதா, ஜி.வரலக்ஷ்மி,
என்.எஸ். கிருஷ்ணன், டி.ஏ. மதுரம்,
பி.எஸ்.ஞானம், வி.சுசீலா மற்றும் பலர்

கதை, வசனம் : பி.ஏ.குமார்

காமிரா & டைரக்ஷன் : வி.கிருஷ்ணன்

**M.R. புரொடக்ஷன்ஸ்**
25. போக்ரோடு. தி.நகர். சென்னை.17.

ARASU

## சிறந்த பொழுது போக்குப் புத்தகங்கள்

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| வான வீதி (பாலு) | 1 | 8 | 0 |
| நக்ஷத்திரமாலே (குண்டூசி) | 1 | 0 | 0 |
| ராஜா சாண்டோ (ராமநாத்) | 2 | 0 | 0 |
| மனோரதம் (கே. ஸ்ரீ.) | 1 | 4 | 0 |
| ரேஷன் காலம் ( ,, ) | 1 | 4 | 0 |
| நினைவு (நாகர்கோவில் மஹாதேவன்) | 2 | 0 | 0 |
| மீனுவின் பூனைகள் (எஸ். ஓய். சுப்ரமணியம்) | 1 | 4 | 0 |
| புதுமணத் தம்பதிகள் (இளவேனில்) | 2 | 4 | 0 |
| நான் டைரக்டரானேன் (கொத்தமங்கலம் சுப்பு) | 0 | 8 | 0 |

## சிரஞ்சீவி எழுதிய பயங்கர நாவல்கள்

| | | | |
|---|---|---|---|
| மர்மம் நிறைந்த மாயவில்லா | 1 | 0 | 0 |
| சூனியக்காரி | 1 | 0 | 0 |
| மின்மினி | 1 | 0 | 0 |
| சூறைக்காற்று | 1 | 8 | 0 |
| மரணயாத்திரை | 1 | 8 | 0 |
| நீதி மயக்கம் | 1 | 0 | 0 |
| காதலன் கொலை வழக்கு | 1 | 4 | 0 |
| மர்மத்தீவு | 1 | 4 | 0 |
| இரட்டைக் கொலை | 1 | 4 | 0 |
| மர்மக்கொலை | 1 | 0 | 0 |
| ரத்தப் பசி | 1 | 4 | 0 |
| பயங்கர மனிதன் | 2 | 0 | 0 |

வியாபாரிகளுக்குக் கமிஷன் உண்டு. தேவையான பிரதிகளுக்கு முன் பணம் அனுப்ப வேண்டும். வி. பி. பி. யில் அனுப்ப இயலாது.

ராமநாத் பப்ளிகேஷன்ஸ்
17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2

கஸ்தூரி பிலிம்ஸ்...
சதாரம்
காட்சிகள்

கஸ்தூரி பிலிம்ஸார் நிறைய பொருட் செலவில் இந்தப் படத்தைத் தயாரித்து வருகிருர்கள். தயாரிப்பாளரான வீ. ஸி. சுப்பராமனே டைரக்ட் செய்யும் இப் படம். விரைவில் வெள்ளித் திரைக்கு வருகிறது.



கே. ஆர். ராமசாமி,
ஜெமினி கணேசன்,
பாலய்யா, சாரங்கபாணி,
வி. கே. ராமசாமி,
பானுமதி, எம். எஸ்.
எஸ். பாக்கியம் முதலிய
பிரபல நடிகர்கள்
நடித்து வருகிறார்கள்.
நிறைய நடனங்கள்
இருக்கின்றன.



ரசமான சம்பவங்கள் பல கொண்டது இந்தப் படக் கதை. பிரபல நடிகர்களும் நல்ல கதையும் இருப்பதால் ரசிகர்களைக் கவரத்தான் செய்யும். ரசிகர்களின் அபிமான நடிகர்கள் நூதன வேஷங்களில் தோன்றுகிறார்களல்லவா!

# கேள்வி - பதில்

பதில்களைப்படித்து விட்டு நீங்கள் சிரிப்பதுடன் விஷயங்களையும் தெரிந்து கொண்டால் மெத்தசந்தோஷம்
— ஆசிரியர்.

**வி. சாரநாதன், துக்காச்சி**

மனிதனுக்கு எப்போது தடுமாற்றம் ஏற்படுகிறது?

*அரசியல் வாதிகளானால் தேர்தலில் வெற்றிகண்ட பிறகு; நடிகர்களானால் திரைவானில் நக்ஷத்திரங்களான பிறகு; உல்லாச வாலிபர்களானால் பெண்களைக்கண்ட பிறகு; ஏழைகளானால் வாங்கிய கடனை வசூலிக்க வருபவர்களைக் கண்டு.*

குற்றத்தை மறைக்கும் குணம் படைத்தவர்கள் ஆண்களா பெண்களா?

*எனக்குக் கல்யாணமாகி விட்டதே! உண்மையை எப்படிச் சொல்ல முடியும்?*

பகல் போய் இரவு எதற்கு வருகிறது?

*நக்ஷத்திரங்களை நேரடி தோற்றத்தில் காண!*

ஒரு பெண்ணின் காதலுக்கும் விசுவாசத்திற்கும் என்ன வித்தியாசம்?

*பொங்கிவரும் புது வெள்ளம் பின்னர் சொன்னது; ஊறிவரும் சுனை—காதல்.*

**எஸ். சீனு, கீழையூர்**

நேர்மையான ஒரு வாலிபனும், கண்ணியமான பெண்ணும் நெருங்கிப் பழகும்போது எப்படி நடந்து கொள்வார்கள்?

*வீட்டில் பழகும் சகோதர — சகோதரியாக.*

ஒரு பெண்ணின் தற்பெருமைக்கு எப்போது பங்கம் ஏற்படுகிறது?

*அவளைவிட அழகானப் பெண் அங்கு முளைக்கும்போது.*

**ஸ்ரீநிவாஸன், சென்னை**

பிரமாதச் சிவப்பாக உள்ள ஒரு நடிகையிடம் ஏற்படாத கவர்ச்சி, சில சமயங்களில் கருப்பாக உள்ள நடிகையிடம் ஏற்படுவது ஏன்?

*அழகு நிறத்தை மட்டும் பொருத்ததல்ல.*

'கள்வனின் காதலி' படத்தில் காலமெல்லாம் வளர்த்து வந்த காதல் சோலை கல்யாணியின் அவசரத்தால் படுநாசமடைகிறது. விதி என்று சொல்லும் உலகம். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

*அந்த உலகத்தில் நீங்களும் நானும் உண்டல்லவா?*

**கே. கே. ராஜா, கமுதி**

ராமாயணத்தைப் போல மகாபாரதத்தையும் எந்தப் படாதிபதியாவது படமாக்க முன் வருவார்களா?

*வரலாம்.*

உலகத்தை உண்டாக்கியவர் என்ன செய்கிறார்?

*சமீபத்தில் வெள்ளத்துடன் வந்து தமிழ்நாட்டில் விளையாடினார்!*

**வெ. சேது, கம்பளை**

'பேசும்-படம்' அக்டோபர்-55 இதழில் சிவாஜி கணேசன், தனது செல்வி சாந்தியுடன் வீட்டிலிருக்கும் புகைப்படமொன்று வந்திருக்கிறது. அதில் சாந்தி தன் கையில் வைத்திருக்கும் இரண்டு ஆப்பிள் பழங்களில் ஒன்று என் தங்கைக்கு வேண்டுமாம். இதை சாந்தியிடம் சொல்லி வாங்கித் தருவீர்களா?

*காலம் கடந்த கோரிக்கையாகி விட்டது நண்பரே! சாந்தி இன்னமும் அந்த ஆப்பிள்களை சும்மாவிட்டு வைத்திருப்பாள் என்று நினைக்கிறீர்களா?*

கணேஷ், நாமக்கல்

உங்கள் வீட்டில் சினிமா நக்ஷத்திரங்களின் புகைப்படங்களை வைத்திருக்கிறீர்களா?

*எனது வீடு வேறு; காரியாலயம் வேறு!*

ஒரு நடிகைக்கு வாசனை சோப் எப்படிப்பட்டது?

*விளம்பரத்துடன் வரும் வட்டி!*

நீங்கள் எப்போது வெட்கப்படுவீர்கள்?

*'உங்கள் அழகுக்கு என்ன குறைச்சல்?' என்று என்னை ஒரு பெண் மனப்பூர்வமாக வர்ணிக்கும்போது!*

விசுவம், பெங்களூர்

காதலின் அடிப்படைத் தத்துவம் எது?

*புரிந்து கொள்ளும் சக்தி!*

எழுத்தாளர்களுக்கு 'காதல்' எப்படிப்பட்டது?

*ஒரு அழகற்ற சொல்!*

தன் காதலியைக் கரம் பிடித்து விட்டதாக ஒருவன் இரவு நேரத்தில் கனவு காண்கிறான். இதுபற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

*அவனது பகற்கனவின் வெறும் பிரதிபலிப்புதான்!*

தற்கால புதுமைப் பெண்களை எந்த இலக்கணத்தைக் கொண்டு கண்டுபிடிக்கலாம்?

*ஆண்களோ என்று நாம் சந்தேகப்படும் அளவில் அவர்கள் இருப்பதைக் கண்டு!*

நாராயணன், மட்டகளப்பு

சினிமா மக்களுக்கு தீமை விளைவிக்கிறதா?

*இல்லை!*

உங்களின் மாத வருமானம் எவ்வளவு என்று சொல்ல முடியுமா?

*ஒரு ஆணின் வருமானத்தையும், பெண்ணின் வயதையும் கேட்பது ரொம்பவும் தவறு! ரகசியங்கள் ஆயிற்றே இவை!*

அழகின் ரகசியம் எங்கே இருக்கிறது?

*அதைப் பாதுகாக்கும் பாணியில்!*

நாமகிரி, மதுரை

நமது சினிமா நக்ஷத்திரங்கள் எதில் அதிகம் வாழ்கிறார்கள்?

*ரஸிகர்களின் எண்ணத்தில்!*

அரசியல்வாதிகளுக்குப் புகழ் எப்படிப்பட்டது?

*தேர்தல் முனையை அடைய உதவும் ஏணி!*

கடவுள் ஒருவர்தான் என்பதை எப்படி நம்புவது?

*இல்லாவிடில் அவர்களுக்குள் போட்டி இருந்திருக்குமே!*

அயோக்கியன் யோக்கியன் வேஷம் போடும்போது என்ன ஏற்படும்?

*சூழ்ச்சிக்கு மெருகு தரப்படும்!*

கோவிந்தன், தல்லண்ணி

நல்ல தமிழ்க் கதைகள் எழுதக் கூடிய அறிவாளிகள் தமிழகத்தில் இருக்கும்போது, வேற்று மொழிக் கதைகளை மொழிபெயர்த்து, தமிழ்ப் படமாக உருவாக்கும் படமுதலாளிகளை என்னவென்று அழைப்பது?

*அயல் வீட்டுக் குழந்தையை கொஞ்சும் நேரத்தில், சொந்தக் குழந்தைகளை மறந்துவிடும் தாய்மார்களென்று!*

சிவாஜி கணேசன் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்?

*'எல்லோருக்கும் நண்பனாக இருக்க வேண்டும்' என்ற கட்சியைச் சேர்ந்தவர்.*

பரீதா எஸ். உஸ்மான்,
மருதானை

கண்ணைக் கவரும் அழகிய பெண்களைக் கண்டால் நீங்கள் என்ன நினைப்பீர்கள்?

*"புதுமுகம் இல்லையே" என்று சொல்லும் படமுதலாளிகளை நினைப்பேன்!*

ம. ப. சுப்ரமண்யம், கருவூர்

நடிகை.......... . க்கு குல்லாப் போட்டு நான் சினிமாவில் சேர்ந்து நடிக்க முடியுமா?

*சினிமாவில் நடிப்பது இருக்கட்டும்! முதலில் குல்லாயைப் போட முடிகிறதா என்று பாருங்கள்!*

கே. கே. ராஜா, கமுதி

நமது அரசாங்கம் திடீரென்று திரைப்படங்கள் எல்லாவற்றையும் தடை செய்தால் என்ன நடைபெறும்?

*தேஷ்முக் புது வரிகளைப் போடுவார், அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்க!*

அஞ்சலிதேவியை சாவித்திரியாகவும், ஜெமினி கணேசனை சத்யவனாகவும் பாகவதரை நாரதராகவும் ஆர். பாலசுப்ரமண்யத்தை எமனாகவும் நடிக்க வைத்து ஒரு படம் உருவானால் எப்படியிருக்கும்?

*கஸ்தூரி பிலிம்ஸார் சாவித்திரிசத்யவானைத் தயாரிக்கப் போகிறார்கள் என்றுமட்டும் கூற விரும்புகிறேன்.*

காதல் எங்கே, ஏன் உண்டாகிறது?

*சந்திப்பில் — இளமனதில் வானவில்லை எழுப்ப!*

என். வரதன், என்னூர்

நடிகை அஞ்சலிதேவி இது வரை எத்தனை ஹிந்திப் படங்களில் நடித்திருக்கிறார்? அவருக்கு குழந்தைகள் இருக்கின்றனவா?

*ஏக்-தா-ராஜா, ஷுக் ரம்பா, லட்சுமி ஆகிய ஹிந்திப் படங்களில் நடித்திருக்கும் அஞ்சலிதேவிக்கு குழந்தைகள் இருக்கின்றன.*

ஏ. இப்ராஹீம், கொழும்பு

'காவேரி' படத்தில் லலிதாவுக்கு தோழியாக வருபவர் யார்? எந்தப் படங்களில் நடித்திருக்கிறார்?

*எம். சரோஜா. மாப்பிள்ளை, கல்யாணி மற்றும் பல படங்களில் அவர் நடித்திருக்கிறார்.*

பாலு, உரத்தநாடு

எல்லோரும் பணம் படைத்தவர்களாகி விட்டால்?

*ஏழை காட்சிப் பொருளாகி விடுவான்!*

இந்த நாட்டிலிருந்து வறுமைக்கு வழியனுப்பு விழா நடத்தும் நாள் என்று வரும்?

*சுரண்டல் மனோபாவம் ஒழியும் போது!*

சாரதா தேவதாஸ், நீலகிரி

'கண்ணு' என்ற சொல் ஆண் பெண் இருபாலருக்கும் பொருந்தும் என்று நான் கூறுகிறேன. ஆணுக்கு மட்டும்தான் பொருந்தும் என்று என் நண்பன் கூறுகிறான். யார் சொல்வது சரி?

*சாரதா தேவதாஸ் என்று பெண்ணுருவில் வரும் நீரே இதைக் கேட்கலாமா?*

கே. வீரையன், அத்தாணி

புயல் நிவாரண நிதிக்காக அதிக பணம் கொடுத்த நடிகர் யார்?

*எம். ஜி. ஆர்.*

சுந்தரமூர்த்தி, சென்னை

'ஜனக்ஜனக்பாயல் பாஜே' படத்தைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

*திரை வர்ணக் காவியம்!*

'பேசும் பட'ப் பிரியன், நெல்லிக்குப்பம்

'உலக சமாதானம்' என்று கதை எழுதி, அதில் அரசாங்கப் பெரியார்கள் அனைவரையும் நடிக்க வைத்தால் எப்படியிருக்கும்?

*இப்போது நேரிடையாகத்தான் பார்த்து வருகிறோமே? திரைப் படம் எதற்கு?*

'பேசும் பட'த்திற்கு வேண்டியது நேயர்களின் அன்பா, நக்ஷத்திரங்களின் அன்பா?

*தயாரிப்பாளர்கள், டெக்னீஷியன்கள் அன்பையும் சேர்த்துக் கொள்ளுங்கள்!*

பி. ஜி. சீதாராமன், சென்னை

ஒருவர் 'சினிமாவில் சேர்ந்து நடிக்க விரும்புகிறார். ஆனால் அவர் குடுமி வைத்திருப்பதால் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார் என்று நினைக்கிறேன். நீங்கள் என்ன அபிப்பிராயப்படுகிறீர்கள்?

அந்த ஒரே காரணத்திற்காக அவர் சேர்த்துக் கொள்ளப்பட்டாலும் ஆச்சர்யமில்லை!

ஏ. எம். இனிபுண, இலங்கை

ஆருயிர் அண்ணுவே, உங்களுக்குப் பாடத் தெரியுமா?

*கேட்பவர்களை நீங்கள் அழைத்து வர உத்திரவாதம் கொடுத்தால் பாடுகிறேன்!*

எம்.எஸ்.எம். சிவாஜி, கொழும்பு

ஆண்களை பெண்கள் அதிகமாக விரும்புகிருர்களா, அல்லது பெண்களை ஆண்கள் அதிகமாக விரும்புகிருர்களா?

*.........*

பத்மினிதாசன், திருப்பத்தூர்

பத்மினிக்கு பத்மினி என்று பெயரிட்டவர்களுக்கு என்ன பரிசளிக்கலாம்?

*பத்மினி 'பத்மினி'யாகக் காட்சி தருவதே அவருக்கு ஒரு பெரும் பரிசாயிற்றே!*

நான் சினிமா ஆல்பம் ஒன்று தயாரிக்கிறேன். அதற்கு நீங்கள் நட்சத்திரங்களின் புகைப்படங்களைத் தந்து உதவுகிறீர்களா?

*நான் பத்திரிகைக்காகத்தான் புகைப்படங்களை வாங்குகிறேன்! விநியோகிப்பதற்கு அல்ல.*

கே. தியாகராசா,
மட்டகளப்பு

நெருப்பில் சூடு எவ்விதம் உண்டாகியது?

*கடலில் நீர் உண்டாகியது போல!*

பேசாத "பேசும் படம்" உண்டா?

*ஏன் இல்லை! 'பேசும் படம்' இருக்கிறதே!*

ரமணன், திருவண்ணுமலை

படவுலகின் அதிசயம் என்ன?

*இதில் யார் வேண்டுமானுலும் நுழையலாம். தகுதியைப்பற்றி கவலையேயில்லை!*

பி. எஸ். ஆர். பிள்ளை,
பாளையங்கோட்டை

தற்போது வெளிவரும் படங்களின் தோல்விக்கு முக்கிய காரணம் என்ன?

*படமுதலாளிகளின் அசிரத்தை.*

தற்கால படமுதலாளிகளின் முக்கிய குறிக்கோள் யாது?

*எந்தக் காலத்திலும் இருப்பதுதான்.*

எம். அப்துல்கரீம்,
அதிராமபட்டணம்

மரணத்துக்குப்பின் மனிதன் எந்த விதமாகத் தோற்றமளிக்கிருன்?

*நல்ல காரியங்களைச் செய்தவனுனல் புகழுடம்பில்!*

"நாமிருக்கும் நிலைக்கும் புத்த தேவன் சிலைக்கும் என்ன சம்பந்தம்?" என்று யோசிக்கிருளா இந்த மங்கை! 'குங்குமம்' படத்தில் மாதுரிதேவி.

ஏ. ஆர். அண்ணு தாசன், உதகை

கலைஞர் என்ருல் அவருக்கு தேவையான அம்சங்கள் எவை?

*தற்போது அவை யெல்லாம் தேவையில்லை! யார் வேண்டுமானுலும் கலைஞர் ஆகிவிடலாம்.*

வி. துரைராசன், ஒரிஸ்ஸா

நம்முடைய கண்களுக்கு அழகாகக் காட்சியளிக்கும் புஷ்பத்தை எதற்கு ஒப்பிடலாம்?

*மன்னை அலங்கரிக்கும் மங்கைக்கு!*

கலைவாணர் என். எஸ். கே.வும் மதுரமும் தற்போது எந்தப் படஙகளில் நடிக்கிருர்கள்?

*குடும்ப விளக்கு, கண்ணின் மணிகள், ஆசை, அம்பிகாபதி மற்றும் பல படங்களில் நடித்து வருகிருர்கள்.*

கண்ணன், தேவகிரி

நீங்கள் ஒரு நடிகையை மணந்திருந்தால்...?

*உங்களுக்குப் பதில் சொல்லும் உரிமை எனக்கு கிடைத்திருக்காது!*

எஸ். கிருஷ்ணன், இலங்கை

பின்னணிப் பாடகி ஆர். பால சரஸ்வதியும் நடிகை சுரபி பால சரஸ்வதியும் ஒருவரா?

*இல்லை!*

குமாரி கமலா திருமணம் செயது கொண்ட பிறகு எந்தப் படத்திலாவது நடித்திருக்கிருரா?

*இன்று வரை நடிக்கவில்லை.*

வி. மகேந்திரன், மல்லாகம்

உங்களுக்கு கடவுளிடத்தில் நம்பிக்கை உண்டா?

*நம்பிக்கையின் பிறப்பிடமே அது தானே!*

புஷ்பராஜன், கில்லார்னி

மனிதனுடைய வாழ்க்கையில் தென்றல் எப்போது வீசும்?

"பள்ளிக்கூடம் போகாட்டி போறே! சோத்தை திண்ணு தொலை" என்று நிச்சயமாக டி. ஏ. மதுரம் விஜயகுமாரிடம் சொல்லமாட்டார். 'குடும்ப விளக்கு' படத்தில்.

---

*மாதம் ஒரு முறை — சம்பளத் தேதியன்று!*

எம். ராதாகிருஷ்ணன், பம்பாய்

'ஔவையா'ரில் வெள்ளத்தில் குழந்தை கூடையில் மிதந்து செல்லும் காட்சி எப்படி எடுக்கப் பட்டது?

*காமிராவைக் கொண்டு!*

மாஜி நடிகர், நடிகைகளைப்பற்றி 'பேசும் படத்'தில் ஒரு பகுதி வெளியிட்டாலென்ன?

*படவுலகில் புகுந்திருக்கும் புழமை மோகத்தை 'பேசும்-படத்தில் ஏன் புகுத்தப் பார்க்கிறீர்?*

திருநாவுக்கரசு, ஆனைமலை

'பேசும்-படம்' ஸ்டுடியோ விஜயம் பகுதியில் 'கோடீஸவர'னுக்கு வேலவன் வசன மெழுதுவதாக பிரசுரித்திருக்கிறீர்கள். படத்தில் 'காஙகேய'னும், ராமய்யதாசும் எழுதியதாக அல்லவோ காட்டப் படுகிறது?

*'பேசும்-படம்' குறிப்பிட்டது முற்றிலும் சரியானதே. 'காங்கேயன்', 'வேலவன்' இருவரும் ஒரே நபர் தான். திரையுலகில் ஏற்கனவே ஒரு வேலன் இருப்பதால், குழப்பமடையாதிருக்க வேண்டி, இப்புதிய புனைப்பெயரை வைத்துக் கொண்டிருக்கிருர் வேலவன்.*

எம். எம். ஏ. ரெஜாக்,
காரைக்கால்

பின்னணிப் பாடகி லதா மங்கேஷ்கர் இதுவரை எத்தனை படங்களில் பின்னணியில் பாடியிருக்கிறார்?

*அவருக்கே தெரியாது என்று சொல்கிறார்!*

கே. பத்மநாபன், குண்டூர்

'ஜனக் ஜனக் பாயல் பாஜே' படத்தில் சந்தியா ஆடும் நடனம் எந்த வகையைச் சேர்ந்தது?

*பெரும்பாலானவை 'கதக்' வகையைச் சேர்ந்தன.*

டி. மலைசாமி, பெரியகுளம்

பெண்களைப் பற்றி இழிவாகக் கதை எழுதும் ஆசிரியர்கள், பின் ஏன் பெண்களிடமே போய் சரணடைகிறார்கள்?

*இயற்கை விதிக்கும் தண்டனை!*

நீங்கள் பெண்ணாகப் பிறந்திருந்தால்?

*என் மனைவி இப்போது என்னை ஆட்டிவைப்பதற்குப் பதில், நான் அந்த வேலையைச் செய்திருப்பேன்!*

ஜூபிடர் பிரியன், மதுரை.

நடிகர்கள் பெண் வேடமும், நடிகைகள் ஆண் வேடமும் போடாத காட்சியையும், கதாநாயகர்கள் பாடிக்கொண்டு ஆட்டம் போடாத காட்சியையும் கொண்ட தமிழ்ப்படம் ஏதேனும் தயாராகிறதா?

*இந்தப் 'புதுமைகள்' படத்தில் புகுத்தப்படாது என்பதற்கு நான் எப்படி உத்திரவாதம் தரமுடியும்?*

சிரிக்காதே, காளமேகம், சோகாமேளா, கருட கர்வபங்கம், காரைக்கால் அம்மையார் போன்ற கதைகளைத் தயாரிக்க எந்தப்பட முதலாளிகளுக்காவது சிபாரிசு செய்யமாட்டீர்களா?

*தேவையில்லை! அவர்களேதான் பழைய பட்டியல்களைத் துருவித்தேடி வருகிறார்களே!*

தமிழ்ப் பட உலகம் ரொம்ப முன்னேறிச்சு, இல்லீங்களா?

*உங்கள் கேள்வியின் 'இலக்கண'ப் படி!*

பிறருடைய கதையை வைத்துக்கொண்டு அக்கதையை தங்கள் 'கதை இலாகா'தான் எழுதியதென்றும், 'நான்தான் தீட்டினேன்' என்றும் பலர் தம்பட்ட மடிக்கிறார்களே, ஏன்?

*தம்பட்ட மடிப்பதையாவது சொந்தத்தில் செய்வதுபற்றி சந்தோஷப் படுங்கள்!*

ராம், சென்னை.

குமாரி வனஜா, ஜெமினி தவிர, வெளிப்படங்களிலும் நடிக்கிறாராமே, உண்மையா?

*ஆமாம்.*

எம். கிருஷ்ணன், மொரட்டுவ.

'கல்கி' எழுதிய கதைகளில் எத்தனை படமாகியிருக்கின்றன?

*தியாக பூமி, பொய்மான் கரடு, கள்வனின் காதலி ஆகிய மூன்று கதைகள் இதுவரை படமாக்கப்பட்டிருக்கின்றன.*

ஆர். கிருஷ்ணமூர்த்தி

1955-ம் வருஷத்திய 'பேசும் படம்' டைரியில் உள்ள சில படங்கள் இன்னும் வெளிவராத காரணம் என்ன?

*1942-ல் குறிப்பிட்டவைகளே வரவில்லையே, இதற்கு என்ன சொல்கிறீர்? சில படங்கள் இப்படித்தான் 'சிரஞ்சிவித் தயாரிப்'புகளாக மாறி விடும்!*

ரா. ருக்மிணி, தர்மாம்பாள்,
திருவையாறு.

என் சகோதரி ஜி. வரலக்ஷ்மி கிறிஸ்துவர் என்கிறார். நான் இல்லை என்கிறேன். பந்தயம் ஐம்பது ரூபாய் வைத்திருக்கிறோம். அவர் எந்த மதத்தை சேர்ந்தவர் என்று சொல்ல முடியுமா?

*ஆந்திர ஹிந்து வகுப்பைச் சேர்ந்தவர் அவர்!*

"சினிமா ரஸிகர்களுக்கு எது பிடிக்கும்? எதை ரஸிக்கிறார்கள்?" என்று தெரிந்து கொள்வதற்கு உதவுகிறது இப்பகுதி.

—ஆசிரியர்.

## அனார்கலி

அனார்கலி ஒரு அடிமைப்பெண். சலீம் ஒரு இளவரசன் அவனை எப்படி அவள் மணக்க முடியும்? அவள் அவனை சாதாரண சிப்பாய் என்று நினைத்துக் காதலித்தாள். ஆனால் அது எட்டாக்கனி என்பதறிந்த போது அவனுக்காக எந்த விதமான தியாகத்தைச் செய்யவும் துணிகிறாள். பெண்கள் ஒருவனை மனமார நேசித்து விட்டால் எந்தவித தியாகத்துக்கும் துணிந்து விடுவார்கள் என்பதை விளக்குகிறது இக்காட்சி.

அ. சுந்தரலிங்கம்,
குளப்பிட்டி–சிலோன்.

## குணசுந்தரி

நம் நாட்டுப் பெண்களுக்கே கற்புதான் அணிகலன். மணமானதும் ஒரு பெண் தன் கணவனையே சகலமாகவும் கருதுகிறாள். அவனுக்குப் பணி செய்வதிலும் அவனுடன் இன்ப துன்பங்களை அனுபவிப்பதிலுமே இன்பம் காண்கிறாள். 'குணசுந்தரி' மணமானபின் பெற்றவனை விட கணவனே ஒரு பெண்ணுக்கு மேலானவன் என்று துணிந்து கூறுகிறாள். இந்தக் காட்சியில் மனம் லயிக்காதவர் இருக்க முடியுமா? பெண்களின் மதிப்பை உயர்த்தும் இந்தக் காட்சி படத்திலேயே மிகச் சிறந்ததாகும்.

ஸி. சுகுணசரஸா,
தியாகராயநகர்.

வீரசேனன் உருவிலே வந்து குணசுந்தரியை சோதிக்கிறான் தெய்வாதீனம். அப்போது அவள் அவனை மண்டையிலடித்து விட்டு ஓடுகிறாள். வீட்டிற்குத் திரும்பும் அவள் தன் கணவன் தெய்வாதீனம் மண்டையில் காயத்துடனிருப்பது கண்டு திகைக்கிறாள். அவள் அப்போதுதான் தன் கணவன் உண்மையில் குரூபி அல்ல என்பதைப் புரிந்து கொள்ளுகிறாள். கணவனிடம் பக்தி கொண்ட உத்தமி வருவதை ஊகித்து உணரும் சக்தி பெற்றவளாக இருப்பாள் என்பதை எடுத்துச் சொல்லும் இக்காட்சி மிகவும் ரஸிக்கக்கூடியதாகும்.

"பாலகன்".
ஆத்தூர்.

தகப்பனைவிட மணமான பெண்ணுக்குக் கணவனே மேலானவன் என்று கூறிய குணசுந்தரி, நொண்டியும் குரூபியுமான தெய்வாதீனம் என்பவனை மணக்க நேரிடுகிறது. கணவனைத் தெய்வமாக வழிபடும் குணசுந்தரி, அவனது உண்மை பெயர், ரூபம் இவைகளை அறிந்து மகிழுகிறாள். படுத்த படுக்கையில் விழும் அவள் தந்தைக்காக கணவன் மகேந்திரமணி கொண்டு வரச் சென்ற போது பேதை உண்மையைக் கூறவே வீரசேனன் கரடியாகிறான். கதறும் குணசுந்தரிக்கு ஆதரவளித்து உண்மையை விளக்கித் தரிசனம் தருகிறார் கடவுள். கற்பு, கடவுள் பக்தி, நேர்மை, அன்பு இவற்றால் உத்தமிகள் உலக க்ஷேமத்திற்கு உதவியாக இருந்தார்கள் என்பதை கடைசிக் காட்சி விளக்குகிறது. இதை எல்லோரும் மிகவும் விரும்பி ரஸிக்கவே செய்வார்கள்.

அ. வ. ராமானுஜாசாரி,
வாரணவாசி.

ராஜா உக்கிரசேனர் தன் புத் எம். கள் மூவரையும் அரச சபையிலே சறுத்தி, தன்னை அவர்கள் நேசிப்பதை எடுத்துக் கூறும்படிச் சொல்லுகிறார். ஆனால் குணசுந்தரி 'மணமாகும் வரை தந்தைதான் சகலமும்; மணமானபின் கணவன் தான் மேலானவர்' என்கிறாள். பரிசு அவள் அங்கஹீனனை மணக்க நேரிடுவதுதான். ஆனால் கடவுளின் பிரதிநிதியான அரசன் தவறு செய்யும் போது கடவுள் அவனை அடித்துத் துன்புறுத்தியாவது கடமையையும் உண்மையையும் உணர்த்துகிறார். உக்கிரசேன மகாராஜா கடைசியில் தவறுணரும் கட்டம், தன் கீழுள்ளோரை அனாவசியமாக அடக்கியாள முயலும் யாவருக்கும் எச்சரிக்கை செய்கிறது. சிறந்த போதனை தரும் காட்சி இது.

இரா. வெள்ளியங்கிரி,
கஸ்தூரிபாளையம்.

குணசுந்தரி பதிபக்தி மிக்கவள். அதே சமயம் அவள் அம்பிகையிடம் பரமபக்தி கொண்டிருந்தாள். தன் கணவன் கரடியாகி விட்டதும் அவள் அன்னையைப் பார்த்துக் கதறுகிறாள். தகப்பனைவிட தாய் தான் உடனடியாகக் குழந்தைகளின் தேவைகளைக் கேட்டு பூர்த்தி செய்யக்கூடியவள் என்பதை இக்காட்சி நன்கு விளக்குகிறது.

எஸ். வி. ராகவன்,
பம்பாய்.

பி. கே. சரஸ்வதியின் இந்த மகுடி நாதத்தில் நாகம் மட்டுமல்ல, நாமும் மயங்கத்தான் போகிறோம்!
—ஜய ஸ்ரீலக்ஷ்மி பிக்சர்ஸின் "மூன்று பெண்கள்" படத்தில்.

கேடு நினைக்கிறான் ஒருவன் என்பதை நாம் அவன் நடவடிக்கைகளிலிருந்தே அறிய முடிகிறது. உக்ரசேனன், கணவனைவிட தன் மகளுக்குத் தானே உயர்ந்தவன் என்று கூறும்படி குணசுந்தரியை வற்புறுத்தினான். முடியாமற் போகவே முடவனை அவளுக்கு மணமுடித்து விடுவதுடன் அவனை அடிக்கவும் போகிறான். அவனே முடவனாகிறான். பிணி துன்புறுத்துகிறது. கடைசியில் அதே தெய்வாதீனம் அவனைக் காப்பாற்றுகிறான். அகந்தை ஒழிந்து தன் தவறை அரசன் உணரும் போது அவனுக்கு கடவுளின் அருள் கிட்டுகிறது. குணம் பெற்றெழுகிறான். தவறு செய்பவன் தண்டிக்கப் படுவது போல்

தவறுணர்ந்தால் மன்னிக்கவும் பெறுவான் என்பதை விளக்குகிறது இக் காட்சி.

பி. வி. சுந்தரி,
காஞ்சீபுரம்.



''ரெண்டு பெண்டாட்டிக்காரன் எவன் தானே கெட்டிக்காரன்'' என்று பாடத் தோன்றுகிறதா! பிலிம் சென்டரின் 'நன்னம்பிக்கை'யில் மைனாவதி, சகாதேவன், வேறொருவர்.

டாக்டர் சாவித்திரி

முனியன் ஒருநாள் தன் வீட்டுக்குள் ஓடிவந்து பரண்மேல் ஏறிக்கொள்ளுகிறான். அவனைத் தொடர்ந்து போலீஸ்காரரும் கிராமவாசியும் வருகின்றனர். ''முன்சீப்பை வெட்டிவிட்டு இங்கு வந்து ஒளிந்து கொண்டான்'' என்று அவன்மேல் குற்றம் சாட்டுகிறான் கிராமவாசி. முனியன் இறங்கி வந்து பிஞ்சு வாழையைத் தருகிறான். முன் பக்கத்து சீப்பை வெட்டிய விஷயம் வெளியாகிறது. சிரிப்பால் கொட்டகை அதிருகிறது. ஜனரஞ்சகமான காட்சி இது.

எஸ். பி. சுப்பய்யா.
மதுரை.

சாவித்திரியின் கணவன் மரணதண்டனை விதிக்கப்படுகிறான். சாவித்திரி அவனுக்காக எந்தவித தியாகத்துக்கும் சித்தமாகிருள். இருந்தாலும் அவள் அவனிடம் உத்திரவு பெற்றுச் செல்வது மனதை உருக்கி விடுகிறது. அவளது பதிபக்தியின் சிறப்பை வெளிப்படுத்துவதோடு அவள் அவனிடமே உத்திரவும் ஆசியும் பெற்றுச் செல்வது, பெரியோர்களின் ஆசிபெற்று எந்தக் காரியத்தைச் செய்வதும் நல்லது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

வி. பார்த்தசாரதி.
கும்பகோணம்.

கள்வனின் காதலி

கிழவனை மணக்க விரும்பாத கல்யாணி ஏராளமான நகைகளுடன் கிளம்பிப்போய், முத்தய்யனை சந்தித்து எங்காவது ஓடிவிடலாம் என்று கூறுகிருள். முரடன் என்று பெயரெடுத்த முத்தய்யன் திருடன் என்ற பெயரெடுக்க முடியாது என்று தன்மானத்துடன் பேசுகிறான். கள்ளங்கபடமற்ற முத்தய்யன் திருடனாக மதிக்கப்படும்போது நம் மனம் வருந்தவே செய்கிறது. உண்மைக்கு இந்தச் சமூகத்தில் இடமில்லை என்பதை இந்தக் காட்சி விளக்குகிறது.

பிரேமா கிருஷ்ணமூர்த்தி,
புதுப்பாளையம், கடலூர்.

தன்னை கேவலம் ஒரு பெண் போலீஸில் காட்டிக் கொடுப்பதாக அறிந்த முத்தய்யன் அவள் வீட்டைக் கொள்ளையிடப் போகிறான். அங்கே அவன் கல்யாணியைச் சந்திக்கிறான். அவள் அவனைக் கண்டு மகிழுகிருள்.

பிரித்து வைத்த சந்தர்ப்பமே அவர்களைச் சேர்த்துவைக்கிறது. புலிப்பட்டி ஒன்று நினைக்க தெய்வம் வேறொன்று நினைக்கிறது. அந்தக் காட்சி ரஸிக்கத் தக்கதாகும்.

சரோஜினி ராமன்,
கடலூர்.

கமலபதி நல்லெண்ணத்துடன் முத்தய்யனுக்கு உதவி செய்ய வருகிறான். தன்னால் முத்தய்யன் காட்டிக் கொடுக்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காகப் பெண் வேஷத்தோடு செல்கிறான் அவன். ஆனால் கல்யாணி அவன் முத்தய்யனோடு விளையாடுவதை வினையாக்கிக் கொண்டாள். விளையாட்டு வினையாவதுடன் பெண்ணின் அவசர புத்தியும் வெளிப்படுகிறது இக்காட்சியில். நீதி புகட்டும் இக்காட்சி மிகவும் ரஸிக்கக் கூடியதாகும்.

எம். என். ராஜரத்னம்,
ஸ்ரீவைகுண்டம்.

தன் மகள் கல்யாணி முத்தய்யனை காதலிப்பது தெரிந்திருந்தும், அவள் தகப்பனார் அவளை பணக்காரரான கிழ பண்ணையாருக்கு மணமுடிக்கிறார். அவள் விதவையாவதையும் அவர் தன் கண்களால் பார்க்க நேரிடுகிறது. வருந்துகிறார். பிரயோஜனம்? கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்ய முடியுமா? பண ஆசை, மனிதனின் மூளையை எப்படிக் கெடுத்து விடுகிறது என்பதற்கு நல்ல உதாரணமான இந்தக் காட்சியை நான் ரொம்பவும் ரஸித்தேன்.

பி. ராமதுரை,
சென்னை.

## கோமதியின் காதலன்

கோமதி ஒரே சிக்கலான பிரச்னைகளில் தவித்துக் கொண்டிருக்கும்போது, ராமுதான் சின்ன வேலி ஜமீன்தாரின் மகன் ராஜன் என்பது தெரியவருகிறது. நிரபராதியான அவன் தன்னை எவ்வளவு அன்புடன் நேசித்து வந்திருக்கிறான் என்பதை அறிந்து கண்களில் நீர் துளிர்க்க அதிகம் பேசாமல் அவன் பாதங்களை கைகளால் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்ளுகிறாள். மனதை உருக்கும் அருமையான காட்சி இது.

வரதராஜன்,
திண்டுக்கல்.

காதல் அகராதியில் இவர்கள் எந்த அத்தியாயம் பற்றி பேசுகிறார்களோ?—'மூன்று பெண்க'ளில் பாலய்யா, எம். என். ராஜம்

பையன் பாலு கத்தியை வைத்துக் கொண்டு சீவிக்கொண்டிருக்கிறான். ஆத்திரத்தில் அதைப்பற்றியெல்லாம் கவனிக்காத பக்கிரியும் எள்ளு முதலியாரின் பிள்ளையும் அவனைக் கோணியில் கட்டிப் போட்டு விடுகிறார்கள். அவன் புத்திசாலிப் பையன். அவர்கள் சண்டை போட்டுக்

கொண்டிருக்கும்போது ஜாடையாக கோணியை கிழித்துக்கொண்டு தப்பிப்போய் போலீசுடன் வருகிறான். சிறுவனின் சமயோசித புத்தியை ரஸிக்கிறோம். அவசரக்காரனுக்கு புத்தி மட்டு என்பதையும் நன்கு அறிகிறோம்.

வி. சுந்தரேசன்,
பாலக்காடு.

## மஹேஸ்வரி

மஹேஸ்வரி கொள்ளைக்கூட்ட தலைவனிடம் சென்ற பிறகு கொள்ளையடிக்கும் தொழிலை மேற்கொள்ளுகிறாள். ஒருநாள் தன் வீட்டை அடைந்து, தன் உயிரினும் மேலாக மதித்து வரும் கணவனின் பாதரட்சைகளை எடுத்துக்கொண்டு திரும்புகிறாள். புகழும் பதவியும் பொருளும் பெற்றாலும நம் நாட்டுப் பெண்களுக்கு கணவன்தான் சகலமும் என்பதை இந்தக்காட்சியின் மூலம் அறிகிறோம். எனக்குப் பிடித்த காட்சி இதுவே.

வ. தே. திலகவதி.
சென்னை.

மாணிக்கம் கைதாகி ராணி ரங்கம்மாளின் விசாரணை மண்டபத்திற்கு கொண்டுவரப் படுகிறான். ரங்கம்மா அவன் முதல் மனைவியைப்பற்றி விசாரிக்கிறாள். "அவள் என் இதயத்திலேயே இருக்கிறாள். அவளே என் இதயராணி. இதயக்கோயிலில் வீற்றிருக்கும் தெய்வமும் அவளே. அவளுக்காக என் இதயம் எப்போதும் திறந்திருக்கும். ஆனால் இப்போது அவள் இவ்வுலகில் இல்லை" என்று கூறிக் கண்ணீர் விடுகிறான். ரங்கம்மா மேலே பேச முடியாமல் அழுது கொண்டே ஓடி விடுகிறாள். தவறுணர்ந்தவனின் நிலைகண்டு நாமும் வருந்துகிறோம். உள்ளமுருக்கும் காட்சி இது.

டி. எஸ் சிகாமணி,
யானைப்பாளையம்.

## ஏழையின் ஆஸ்தி

நிரபராதியான ஆனந்தை தவறாகப் புரிந்து கொண்டு விடுகிறாள் லக்ஷ்மி. அவனும் எவ்வளவோ நயமாக உண்மையை எடுத்துக் கூறுகிறான். ஆனால் அதுவும் லக்ஷ்மீயின் செவியில் ஏறவில்லை. உண்மை சந்தர்ப்ப சூழ்நிலைகளால் பொய்யாக மதிக்கப் படுகிறது என்பதைஇந்தக்காட்சிநிரூபிக்கிறது.

கல்யாண் குமார்,
சிதம்பரம்.

## மாமன் மகள்

மாலதிக்கு பாடம் சொல்லிக் கொடுக்க வருகிறார் டியூஷன் வாத்தியார். 'வேல் விழியாள் என்றால் என்ன ஸார்?' என்கிறாள் மாலதி. அவர் பெண்களைக் கண்டாலே சங்கோஜப்படும் ஒரு அப்பாவி வாத்தியார். அப்படியிருக்கையில் கேள்வி இப்படி இருந்து விட்டால் என்ன செய்வார்? 'வேல் விழியாள் என்றால்...' என்று இழுத்துவிட்டு "வேல் விழியாள்தான்' என்று கூறுகிறார். அவுட்டுச் சிரிப்பைக் கிளப்பும் ரசமான காட்சி இது.

பி. ஸி. சுப்ரமணியம்,
கோயம்புத்தூர்.

## கோடீஸ்வரன்

சந்தர் டாக்டர் பசுபதியை கூப்பிட வருகிறான். அப்போது அவர் பட்டாணி சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். அவர் தயாளு! சந்தருக்கும் கொடுக்கிறார். அவன், 'பொரி கடலை, பட்டாணி, வாழைப்பழம் இதெல்லாம்தான் உனக்கு ஆகாரம் போலும்' என்கிறான். அருமையான இயற்கையான ஹாஸ்யம் மிளிரும் காட்சி அது.

பி. எஸ். ஆர். நாதன்.
சென்னை.

சந்தர் நல்ல எண்ணம் கொண்டவன்தான். அவனது இளம் ரத்த வேகம் காரணமாக ஒரு அசட்டுக் காரியம் செய்கிறான்; அதுவும் நல்ல எண்ணத்தோடுதான்! ஆனால் காரியம் நல்லபடியாக முடிந்ததும் விபரீதம் நிகழுகிறது. ராவ்பகதூர் கண்ணனையும் கமலாவையும் வீட்டை விட்டு விரட்டி விடுகிறார். அத்துடனின்றி திகம்பரின் தலையில் கால் வைத்து உதைத்துத் தள்ளுகிறார். அதன் பிறகும் பொறுமையுடன் பேசிய திகம்பரின் காலில் விழுந்து, "என்னை மன்னித்து விடுங்கள் சித்தப்பா" என்று கதறுகிறான். நல்லது செய்யப் போவதும் ஆபத்தைத் தேடித் தருகிறது என்பதை நிரூபிக்கிறது இக்காட்சி.

வி. வி. கிரிதரன்.
விஜயவாடா.

# தபால் பெட்டி

இக்கடிதங்களின் கருத்துக்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல.
— ஆசிரியர்.

## *நக்ஷத்திர மதிப்பு

தற்போது வெளிவரும் படங்களில் மிகச்சிறிய கதாபாத்திரத்திற்குக்கூட 'நக்ஷத்திர மதிப்பை' உத்தேசித்து பிரபல நடிகர்களை ஏற்பாடு செய்வது வழக்கமாகிவிட்டது. 'குணசுந்தரி'யில் ஹாஸ்ய நடிகர் மாதவனுக்கு சந்தர்ப்பமளித்ததைப் பாராட்டும்போதே, கணேசனை வீரசேனனாக நடிக்கச் செய்திருக்கிறார்கள். இந்தப் பாத்திரத்திலே ஒரு புதுமுகத்தை நடிக்கச்செய்து ஊக்குவித்திருக்கலாம். ஆனால் ஒருசில காட்சிகளில் ஜெமினி கணேசனை வீணடித்திருக்கிறார்கள். இதைவிட கோமாளி வேஷத்திலும் (தெய்வாதீனனாகவும்) கணேசனை நடிக்கச் செய்திருந்தால், அவர் திறமையாவது நன்கு வெளிப்பட்டிருக்குமே! இதைப்போலவே 'கோடீஸ்வரன்' படத்தில் பத்மினியை நடிக்கச் செய்திருக்கிறார்கள். அவருக்காக காட்சிகளை சிருஷ்டித்து வளர்த்தியிருக்கிறார்கள். கதைக்கு முக்கியத்துவம் கொடுத்து 'வள்ளியின் செல்வ'னில் சுப்பய்யாவைப் போலவும் 'ஜெயகோபி'யில் ஜமுனாவை போலவும் தேர்ந்தெடுத்துப் போடவேண்டும். மேனாடுகளில் பாத்திரத்திற்கு ஏற்ற நடிகர்களைத் தேடிப்பிடிக்க இரண்டு மூன்று வருஷங்கள்கூட ஆகின்றன என்பது இங்கே குறிப்பிடத் தக்கது.

எஸ். வி. சுப்பிரமணியன்,
சேலம்.

## தமாஷா வரி

கலையுலகின் - முக்கியமாகத் திரைப்படத்தின் மூலம் சர்க்கார் தமாஷா வரி என்ற பெயரில் ஏராளமான வருமானம் பெற்றிருக்கிறார்கள். கல்விக்காக மாணவரிடம் பெறும் சம்பளத் தொகையுடன் அரசாங்க 'கிராண்ட்'டும் சேர்ந்து கலாசாலைகள் தோன்ற ஏதுவாயிருப்பதுபோல், கலைத்தொழிலிலிருந்து அரசாங்கம் பெறும் வரிப்பணத்தைக்கொண்டு, கலைகள் பயிற்சிச் சாலைகளை ஏன் ஏற்படுத்தக்கூடாது? லளித கலைகளுக்கான கலாசாலைகள் நாடெங்கும் நிறுவப்பட்டால் கலையின் தரம் உயரும்; வேலையில்லாத் திண்டாட்டமும் ஒழியும்.

பி. வி. ராமமூர்த்தி,
மதுரை.

## வரவேற்கிறோம்

தமிழ் நாட்டிலே புயலாலும் மழையாலும் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ, அரசாங்கம் செய்ததோடன்றி பொது மக்களும் பணிபுரிந்தார்கள். இதிலே தென்னிந்திய கலைஉலகம் சம்பந்தப்பட்டு சந்தர்ப்பத்தில் செய்த உதவியைப் பாராட்டுகிறோம். நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் சினிமாக் கலைஞர்கள் மகத்தான தொண்டு புரிந்திருக்கிறார்கள். 'புயல் நிவாரண நிதி'க்காக என். எஸ். கிருஷ்ணன் தலைமையில் கமிட்டியை அமைத்து நிகழ்ச்சிகள் அமைத்து, ஒரே மேடையில் அனேகமாக எல்லா நடிகர்களும் தோன்றி நடித்துப் பணவசூல் செய்திருக்கிறார்கள். இதைக்கண்டு ரஸிக உலகம் பூரிக்கிறது.

வே. கிருஷ்ணமூர்த்தி,
பம்பாய்.

## நல்ல கற்பனை!

'மாமன் மகள்' படத்தைப் பார்த்தேன். படத்தின் இறுதிக் கட்டத்தில் சந்திரனை தேடுகிறார்கள். தாடியில் மறைந்திருக்கும் சந்திரனை நாம் அறிந்துகொண்டு விடுகிறோம். அத்துடன் அது மலைக்கள்ளன் தாடிக்

* இக்குறியிடப்பட்ட இரண்டு கடிதங்களுக்கும் தலா ஐந்து ரூபாய் பரிசளிக்கப்பட்டிருக்கிறது.

காட்சியை நமக்கு நினைவூட்டுகிறது! 'மஹேஸ்வரி' படத்தில் வரும் முதல் காட்சி 'பிளாக் ஷீல்டு ஆப் போல்ஸ் வொர்த்' என்ற ஆங்கில சினிமாஸ்கோப் படத்தில் வரும் முதல் காட்சியின் பிரதிபலிப்பே! இவைகளையெல்லாம் நாம் எப்படி ரசிக்க முடியும்? சொந்தக் கற்பனைகளை உபயோகப்படுத்திப் படமெடுக்க டைரக்டர்கள் முன்வரவேண்டும்.

ஏ. வி. ராஜன்.
மதுரை.

## கலைஞர்கள் கடமை

சமீபத்தில் தமிழ்நாடு புயலால் பாதிக்கப்பட்டது. அநேக குடும்பங்கள் வீடிழந்து உற்றார் உறவினரைப் பிரிந்து தவித்தன. பலர் பிணமாயினர். கால்நடைகள் பல்லாயிரம் அழிந்தொழிந்தன. பாதிக்கப்பட்ட இந்தப் பிரதேசங்களுக்கு உதவி உடனடியாகப் பல உருவில் பாய்ந்தது. கலைஞர்கள் சிரத்தைகொண்டுசொந்தமாகப் பணம்போட்டும், நேரில் சென்று வசூலித்தும், கலா நிகழ்ச்சிகள் நடத்தியும் பணம் சேர்த்து நிதிக்கு உதவினார்கள். மக்களை மலைக்க வைத்தது கலைஞர்களின் உதவி. பத்திரிகைகளில் படித்த செய்திகளிலிருந்து, கலைஞர்களின் உழைப்பு நாட்டுக்கு எப்படிப்பட்ட மகத்தான வகையில் பயன் பட்டிருக்கிறது என்பதை அறிய முடிகிறது. கலைஞர்கள் நாட்டின் பெருமையை உயர்த்துகிறவர்கள் என்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

எஸ். ஸ்ரீநிவாஸன்,
சென்னை.

## * நடிகர் சங்கம் கவனிக்குமா?

ஆபாசக் காட்சிகளில் நடிக்க வஹிதா ரெஹ்மான் என்ற தென்னாட்டு நடிகை மறுத்து விட்டதாகவும் அதை படாதிபதி ஏற்றுக் கொண்டதாகவும் பத்திரிகைச் செய்தி யொன்று கூறியது. நடிகையின் பண்பைப் பாராட்டுகிறேன், தென்னாட்டில் இப்படி ஒரு நடிகை சொன்னதே போதும். ஆபாச கட்டங்களில் நடிக்க மனமில்லை என்று சொல்லுகிறவர்கள் தங்கள் தயாரிப்புகளில் ஆபாசத்தின் எல்லைக்கே போய் விடுகிறார்கள். பெண்மைக் கவர்ச்சிக்கு முக்கியத்

நரம்புகள் ஓய்ந்துவிட்டால்
சகலமும் ஓய்ந்துவிடுகிறது

துரதிருஷ்டம்
கவலை
அதிக வேலை
நாள்பட்ட அஜீர்ணம்

இவைகள் நரம்புத் தளர்ச்சியின் சில சாதாரண காரணங்கள்

ஞாபக மறதி
பயந்த ஸ்வபாவம்
பிரமை
விரக்தி எண்ணம்
மயக்கம்

89685

இவைகள் இதன் சங்கடமான விளைவுகள்

கவிராஜ் பண்டிட்
துர்கா டட் ஷர்மா
வைத்திய வாஸஸ்பதி அவர்களால் கண்டுபிடிக்கப்பெற்ற

உலகப் பிரசித்திபெற்ற மருந்தான

நவரத்ன கல்பம்

(ஒன்பது உயர்ந்த கற்களின் கலவை: வைரம், கெம்பு, நீலம், மரகதம், புஷ்பராகம், பவளம், முத்து, கோமேதகம், வைடூரியம்)

சாப்பிட்டு
நரம்புத் தளர்ச்சியினின்றும்
விடுபடுங்கள்

இலவச பிரசுரத்திற்கு எழுதவும்:

THE MANAGER:
NAVRATNA KALPA PHARMACY
JULLUNDUR CITY (India)
Grams: 'NAVRATNA' Phone: 401

வலது கையில் அகப்பையையும் இடது கையில் தட்டையும் கொண்டு மைனுவதி மணி அடிக்கிறார் என்றால் சாப்பாட்டுக்காகத்தானே இருக்க வேண்டும்! 'நன்னம்பிக்கை'யில்.

---

துவம் கொடுக்கப் படுகிறது. இளமையின் பூரிப்பை - போலி இளமையை பத்திரிகைகளிலும் சுவரொட்டி விளம்பரங்களிலும் காணும்போது இளம் உள்ளங்கள் நிச்சயம் மாசுபெறும். ஒழுக்கத்தை வலியுறுத்திய வள்ளுவன் வழிவந்த மக்கள், இனக்கவர்ச்சியையும் இளமைப் பூரிப்பையும் வெளிக்காட்டும் இந்தக் கலைஞர்களைப் பற்றி மிகவும் கேவலமான கருத்து கொள்வதில் தவறென்ன இருக்கிறது? கலைஞர்களுக்கு ஆதரவாக நிற்கும் நடிகர் சங்கம் இவ்விஷயமாக ஒரு நல்ல ஏற்பாட்டைச் செய்து நடிகைகளின் ஆபாசத்தை ஒழிக்க பட முதலாளிகளுடன் போராட வேண்டும்.

எம். எம். பொன்னுசாமி,
கரூர்.

### மராட்டியர் கதை

தமிழ் நாட்டுப் பழக்க வழக்கங்களுக்கு மராத்திய பழக்கவழக்கங்களுக்கும் ஏராளமான வித்தியாசம் உண்டு. அவைகளைத் தமிழில் தயாரிப்பதற்கு என்ன அவசியம்? நம் நாட்டுக் கதைகளைவிட அன்னிய மொழிக் கதைகளில் படாதிபதிகளுக்கு ஏன் இவ்வளவு மோகம்?

கே. கே. ராஜா,
கமுதி.

### பாராட்டுகிறேன்

காமெடியன் மாதவனின் வாழ்க்கைச் சித்திரம் வெளியிட்ட 'பேசும் பட'த்தைப் பாராட்டுகிறேன். திறமை மிக்க நடிகர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற எண்ணம் கலையுலகினருக்கு ஏற்படும்போது ராமய்யா தாஸ் போன்ற தொழிலாளிகள், தங்களுக்குள்ள செல்வாக்கை நல்ல காரியத்திற்குப் பயன்படுத்தியதைப் பாராட்டுகிறேன். அத்துடன் விஜயாவின் குணசுந்தரி திரைக்கு வரும் சமயமாகப் பார்த்து அவரது வாழ்க்கைக் குறிப்புகளை வெளியிட்டதன் மூலம் அவருக்குள்ள திறமையையும் எடுத்துக் கூறிய 'பேசும் பட'த்தைப் பாராட்டுகிறேன்.

ஸி. சீனிவாசன்,
கும்பகோணம்.

[திறமையை அடிப்படையாகக் கொண்டுள்ள நடிகர்களைப்பற்றி தகுந்த சந்தர்ப்பத்தில் எழுதி படஉலகிற்குத் தகுந்த முறையில் அறிமுகம் செய்வதையே 'பேசும் படம்' பல வருஷங்களாகத் தன் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது—ஆ-ர்]

# வெட்டுங்கள் வெட்டுங்கள்

> சினிமா ரஸிகர்களின் உண்மையான அபிப்பிராயங்களைத் தயாரிப்பாளர்களுக்குத் தெரியப்படுத்துவதுதான் இப்பகுதியின் நோக்கம்; யாரையும் புண்படுத்துவது அல்ல. —ஆசிரியர்.

## டாக்டர் சாவித்திரி

மாரியம்மன் கூத்தே நமக்குப் பிடிக்கவில்லை. தெய்வ வழிபாட்டின் ஒரு பகுதியைக் கேலி செய்கிறது அந்தக் காட்சி. அதிலே 'ஆத்தா... சாமி..." என்று கூத்தடிப்பதை ஹாஸ்யம் என்று எண்ணுகிறார்கள் தயாரிப்பாளர்கள். மக்கள் உள்ளங்களிலே புண்படுகிறது இக்காட்சியைக் காணும்போது. தேவையற்றது என மக்கள் கொள்ளும் இந்தக் காட்சியை வெட்டிவிட வேண்டும்.

கு. நித்தியானந்தம்,
சென்னை.

## குலேபகாவலி

"மதியை இழக்கிறார்...மனப் பால் குடிக்கிறார்... தனியே வாடுகிறார்" என்று பாடிக் கொண்டு தரையில் தன் தோழிகளுடன் படுக்கிறாள் லக்பேஷ்வா. நடனத்தில் இது ஒரு போஸ்! நடன மாதர்கள் யாவரும் மல்லாந்து படுப்பது போல் காட்சி தரும் பாகங்கள் மலிந்தது இக்காட்சி. இந்தப் புதிய நடன முறையால் நடனக்கலை மீதே யாவருக்கும் அருவருப்பு ஏற்படும். இதை மக்கள் பார்க்க அனுமதிக்கப்பட்டதே தவறு.

வே. பா. சீனிவாசன்,
சென்னை.

## கள்வனின் காதலி

குறவன் சொக்கன் ஒரு முதல்தர கேடி. அவன் அகப்படுவது மகா கஷ்டம். அவன் சிறை தப்பி மீண்டும் பல நாள் கழித்து அகப்படுகின்றான். அவனை போலீஸ்காரர்கள் எவ்வளவு பந்தோபஸ்துடன் கவனிப்பார்கள்? ஆனால் படத்திலே என்ன பார்க்கிறோம்? அவன் தானே தன் அறைக்குள் போய்க் கதவைத் தாளிடுகிறான். இதை ஹாஸ்யம் என்று யார் நினைத்தார்களோ தெரியாது; ஆனால் போலீஸ் இலாக்காவை கேலி செய்கிறது என்பது நிச்சயம்.

பழந. வே. புதியப்பன்,
ஏழூர், மயிலேறிபாளையம்.

## மஹேஸ்வரி

மாணிக்கத்தை சிப்பாய்கள் துரத்திச் சண்டையிடுகிறார்கள். அவன் தப்பி ஓடி மஹேஸ்வரியின் வீட்டில் நுழைகிறான். அவர்களும் அங்கே வந்து சண்டையிடுகிறார்கள். அவர்களிடம் துப்பாக்கியும் இருக்கிறது ஆனால் அதைக் காட்டி அவனைக் கைதாக்காமல் ஏமாறுகிறார்கள். இதை யாரால் ரசிக்க முடியும்? கூசாமல் வெட்டி விடலாம்.

டி. எஸ். சிகாமணி,
யானைபாளையம்.

## தூக்கு தூக்கி

ராஜகுமாரிக்கும் மந்திரிகுமாரிக்கும் பாடம் கற்றுக்கொடுக்கவரும் புது ஆசிரியர் கட்டழகன், காதல் கடமையைப்பற்றி விளக்கிக் கூறுகிறார். இக்காட்சி வயது வந்தவர்கள் மனதை நிச்சயம் கெடுத்துவிடும். இதை வெட்டி விடுதல் நலம்.

வி. சிவலமுத்து.
தலையார்.

## அனார்கலி

அனார்கலி அக்பரின் கொலுமண்டபத்திலே மயக்க மருந்து உண்டதால் கோணல் மாணலாகச் சுழன்றாடுகிறாள். அப்போது அவள் நடனமாடுகிறாளா, ஆபாசமாக உடலழகை வெளிப்படுத்துகிறாளா என்று புரியவில்லை. இந்தக் காட்சி படம் பார்ப்பவர்களுக்கு எரிச்சலை உண்டாக்குகிறது. இந்த ஆபாசக் காட்சியை வெட்டி விடுவதால் நஷ்டமேதும் இல்லையே!

எஸ். பி. சுப்பய்யா,
மதுரை.

## கள்வனின் காதலி

முத்தய்யன் சதாரம் கூத்தில் கலந்து கொண்டு கள்ளபார்ட்டில் ஜமாய்க்கிறான். முத்தய்யன் முரடன்; ஆனாலும் தன்மானமுள்ளவன்; திருடனாக விரும்பாதவன். பைத்தியக்காரச் சமூகம் தன்னை கள்வனாகக் கருதுகிறதே என்று உள்ளம் வருந்துகிறவன். அப்படிப்பட்டவன் கள்ளபார்ட்டிலே கூத்தடிப்பதை நம்பவோ ரசிக்கவோ முடியவில்லை. இதை வெட்டி விடலாம்.

அட்சயன்,
உசிலம்பட்டி.

## மாமன்மகள்

சந்திரன் பெண்களைக்கண்டு சங்கோஜப்படுவதை மிகைப்படுத்திக் காட்டியிருக்கிறார்கள். அவன் காரியாலயத்தைவிட்டு வெளியே சென்றிருக்கும் சமயம், அங்குள்ள பெண்கள் அவன் மேஜைமீது உட்கார்ந்து கொண்டு கூத்தடிப்பதும் சிரிப்பதும் அவனுடன் பழகினவர்கள் போலப் பேசுவதும் ரொம்பவும் மட்டமாக இருக்கின்றன. அவர்கள் அவனிடம், "ஸார்! நாங்கள் எல்லோரும் உங்களை ரொம்ப 'லைக்' பண்றோம் ஸார்" என்று கூறுவது அருவருப்பாக இருக்கிறது. பெண்மைக்கு இழுக்குதரும் இக்காட்சியை வெட்டி விடலாம்.

இங் சாலமன்,
தஞ்சை.

## நாட்டியதாரா

தாரா நடுத்தெருவிலே நாட்டியமாடிப் பிழைக்கும் நாடோடி. இருந்தாலும் தைரியமும் தன்மானமும் உள்ளவள். அவள் ஒருநாள் தெருவிலே பாட்டுப்பாடி நடனமாடிக் கொண்டிருக்கிறாள். அப்போது சிரஞ்சீவி அங்கே குதிரைமேல் வந்து அதை ரசிக்கிறான். அங்கே வேறொரு வாலிபன் வந்து தாறுமாறாக நடந்து கொள்ளுகிறான். தெருவிலே ஒரு பெண், அதுவும் நாடோடிப் பெண் பிழைப்புக்காக ஆடிப்பாடும் போது இளைஞர்கள் இப்படித் தவறாக நடந்து கொள்வார்கள் என்று காட்டுவது தவறு. 'விருந்தாளி நடிகர் நாகேஸ்வரராவுக்கு சந்தர்ப்பமளிக்க வேண்டுமானால் வேறு காட்சிகளில் புகுத்தியிருக்கலாம். ஆகவே இந்தக் காட்சியை வெட்டிவிடலாம்.

எஸ்வியெஸ்,
சென்னை,

அரசகுமாரி தன் தோழிகளுடன் பாடிக்கொண்டிருக்கிறாள். அப்போது காமிரா அவளை நோக்கி நகருகிறது. பல கோணங்களில் படமெடுக்கப்பட்டாலும் பொம்மையைப் போல் நிற்கிறார் அவர். பாட்டின் சுவையே தெரியாமல் போய்விடுகிறது இக்காட்யில். முகபாவ நடிப்பே இல்லாத இந்த நடிகைக்கு 'குளோஸப்' காட்சிகளை வெட்டி விடலாம்.

பி. ராமனுதன்,
சிதம்பரம்.

ராஜ முத்திரையுடன் சிரஞ்சீவியை அனுப்பி விடுகிறாள் தாரா. அவன் கோட்டை மதில் மேல் ஏறி அங்கிருக்கும் காவலனை உதைத்து அவன் உடைகளை அணிந்து ஓடிவிடுகிறான். அப்போது அவள் எதிரே அவன் மதில்மேல் நின்று உத்திரவு பெற்றுச் செல்கிறான். அது அவசியமில்லை. அவளை அவனே காட்டிக் கொடுத்து விடுவது போன்ற அந்தக் காட்சியை வெட்டி விடலாம். அதனால் தவறெதுவும் நேர்ந்து விடாது.

பி. எஸ். ஆர்.,
சென்னை.



## கண்ணின் மணிகள்

மஹேஸ்வரி பிக்சர்ஸுக்காக டி. ஜானகிராம் தயாரித்து டைரக்ட் செய்து வரும் இப்படம் நூதனமான கதையமைப்பு கொண்டதாகும். புதுமுகம் சுந்தர் நன்கு சிரமப்பட்டு நடித்திருக்கிறார். எம், கே. ராதா, பத்மினி. எம். வி. ராஜம்மா, முத்துலக்ஷ்மி. கருணாநிதி முதலியோர் நடித்து வரும் இப்படம் விரைவில் திரைக்கு வரும்.

## நானே ராஜா

பிரபல நக்ஷத்திரங்கள் பலரைக் கொண்ட இந்தப் படம் சென்ற வாரம் வெளியாகி ஓடிக்கொண்டிருக்கிறது. அப்பா ராவ், நாராயணன் இருவரும் இப்படத்தை டைரக்ட் செய்திருக்கிறார்கள்



## சந்திப்பு

எம். ஆர். எஸ். பிக்
சர்ஸார் சோலைமலை
எழுதிய இக்கதையை
சியாமளா ஸ்டுடியோ
வில் தயாரித்து வருகி
றார்கள். கே. ஆர்.
சுந்தரேசனின் டைரக்
ஷனில் தயாராகி வரு
கிறது இப்படம்.



எம். கே. ராதா, வி. கே. ராமசாமி, தம்பியார். சாய்ராம், முத்து கிருஷ்ணன், எம்.என். கிருஷ்ணன், பி. எஸ். சரோஜா, ஜமுனா, எம். என். ராஜம், முத்துலக்ஷ்மி முதலியோர் நடித்து வருகிறார்கள். அடுத்து வரும் பக்கங்களிலும் இதன் காட்சிகளைக் காணலாம்.





## கோகிலவாணி

பார்வர்ட் ஆர்ட் பிலிம்ஸின் இப்படத்தில் எஸ். வீ. சுப்பய்யா, சாரங்கபாணி, ரகுவீர், தாம்பரம் லலிதா, பி. சுசீலா, ஏ. சகுந்தலா ஆகியோருடன் எஸ். ஏ. நடராஜன் நடித்து வருகிருர்.





வட, தென் ஆற்காடு, திருச்சி, சேலம், கோயமுத்தூர், மைசூர், கேரளம், சென்னை உள்பட.

உரிமையாளர் :

கோல்டன் பிலிம்ஸ், சென்னை–17

F. M. S. & சிங்கப்பூர்: பாஜாஜ் பிரதர்ஸ்–பம்பாய்.

## அலிபாபா

(தொடர்ச்சி)

### அண்டாகா கசம்...அபுகா ஹுகும்...திறந்திடு சீசேம்

அலிபாபா கழுதையை ஓடி வந்து பிடிக்கும்போது, "அண்டாகா கசம்... அபுகா ஹுகும்...திறந்திடு சீசேம்" என்ற குரலோசை கேட்டு மரத்தின் மறைவில் நிற்கிருன். அங்கே ஒரு குகை காணப்படுகிறது. அந்தக் குரல் ஒலித்தவுடன் குகையின் கதவு திறக்கிறது. நாற்பது பேர் வெளியே வருகிருர்கள். அலிபாபா அந்த வாசகங்களை நினைவில் பதியவைத்துக்கொள்கிருன். திருடர்கள் வெளியே போகிருர்கள். அப்போது தௌலத் அங்கே வருகிருன்.

தௌ : அட சம்பா! எங்கே அலிபாபா? ஏதாவது வம்பா நடந்துடிச்சா? அட! மரத்துக்குப் பின்ஞலே ஒளிஞ்சுகிட்டு கழுதைகூட கண்ணுமூச்சி விளையாட்றியா?

அலி திருடர்களைக் காட்டுகிருன்.

தௌ : திருடங்க கூட்டமா?

அலி : பேசாமல் என்னுடன் வா.

குகை வாயிலுக்குப் போகிருர்கள்.

தௌ : போகாத இடந்தனிலே போகவேண்டாம்.

அலி : ஸ்! 'அண்டாகா கசம்; அபுகா ஹுகும்; திறந்திடு சீசேம்,'

கதவு திறக்கிறது. உள்ளே சென்று மந்திரத்தால் கதவை மூடச் செய்கிருன். பிறகு அலி வெந்நீர்ப் பாலத்தைப் பார்த்துப் பயப்பட்டுத் திரும்பிப் போகிருன். அங்கே இருக்கும் சக்கரத்தைச் சுற்றுகிருன். பாலம் இறங்குகிறது.

தௌ : பாபாஜி! பயமாயிருக்கே! வாங்க திரும்பிப் போகலாம்.

அலி : ஏய்! சத்தம் போடாதே. பேசாமெ வா.

தௌ : நான் வரமாட்டேன்.

அலி : பேசமெ வா வா.

தௌ : அலிபாபாஜி! நாம திரும்பிப் போயிடலாம்! ஆண்டவன் கொடுத்த ஆயுசை நாம்பளா ஏன் குறைச்சுக்கணும்?

அலி : பேசாம வர்றியா? புடிச்சி தள்ளட்டுமா?

தௌ : ஹா..ஹா...நானே வர்றேன். ரம்பா! என கண்ணே வா.

பாலத்தைவிட்டு இறங்கிப் போகிருர்கள். கடைசியில் பொன்னும் பொருளும் இருக்குமிடம் வருகிருர்கள்.

தௌ : ஹா! தங்கம்—வெள்ளி—வைரம்—வெள்ளி—தங்கம்—வைரம் வைரம—வெள்ளி—தங்கம். இதெல்லாம் என்ன பாபாஜி!

அலி : இதுதான் கஜானு!!

தௌ : ஓகோ! அப்படியா? உலகத்தில் உள்ள கருமிகள் எல்லாம் இங்கதான் கஜானு வச்சிருக்காங்களா?

அலி: ம்...சீக்கிரம் மூட்டைகட்டு!

கழுதைமேல் மூட்டை கட்டப்பட்டிருக்கிறது. பையிலிருந்து ஒரு யோஹராவை எடுத்துக் கழுதையிடம் காட்டுகிருன் தௌலத்.

தௌ : ரம்பா! ரம்பா!! கண்ணு ரம்பா! இந்தா சாப்பிடு.. ம்..ம் மாட்டியா? ஓ கழுதை! கழுதை அறியுமா கற்பூர வாடை? ம்...அவனவன் இதை பஸ்பமா பண்ணிசாப்பிட்ருன்! நீ காகிதத்தை திங்கிறவதானே!

அலி : தௌலத்! இந்த சங்கதி நமக்குள்ளேயே இருக்கணும்.

தௌ : ஆமாமா; அனுமத்தா அரக்காசு கிடந்தாலே ஆயிரம் கொலை நடக்குது. இவ்வளவையும் பார்த்தா.

அலி : அதுக்கில்லே. இது திருடங்க சமாச்சாரம், தெரிந்தது நமக்கு ஆபத்து. யாருகிட்டேயும் சொல்லக் கூடாது.

தௌ : புல்புல் கிட்டே கூடவா?

அலி : ஹாங்.. பேசாமெ வா.

தௌ : அல்லா! இது உனக்கு நல்லா இருக்கா?

### காட்சி 3

### படேகான் தௌலத்கான்!

மார்ஜியாஞ புருக்களுக்குத் தீனி போடுகிருள். புல் புல் துணிகளைக்

ாய வைக்கிருள்; அலிபாபா தௌலத் இருவரையும் பற்றிக் கேட்கிருள் மார்ஜியாஞ.

மார் : புல்புல்! விறகு வெட்டப் போனவர்களை இன்னும் காணுமே?

புல் : உம், நானும் அதே யோசனையிலேதான் மூச்சுவிடாமே வேலை செய்யறேன்.

மார் : வேண்டாம்மா, வேண் டாம். மூச்சை விட்டுக்கிட்டே வேலை செய். இல்லேன்னு அவருக்கு யார் பதில் சொல்றது?

புல் : (கோபமாக) என்னது?

மார் : ம்...ஒண்ணுமில்லே, ஒண் ணுமில்லே.

தௌலத்தும் அலியும் கழுதை களின்மேல் மூட்டையுடன் வருகிருர் கள். கழுதையோடு தன்னையும் கட்டிக் கொண்டு வருகிருன் தௌலத்.

புல் : இது என்னய்யா, கழு தைக்கும் உமக்கும் போன ஜென்ம தொடர்பா? அதுசரி, ஏனய்யா இவ் வளவு நேரம்?

தௌ : யாரைப் பார்த்து இந்தக் கேள்விகேட்டே? நீயார் இந்தக் கேள் வியைக் கேட்க? நான் யார் பதில் சொல்ல? ஏன் கேட்டே? எதுக்குக் கேட்டே? என்னத்துக்கு கேட்டே? வேலைக்குப்போன ஆண் பிள்ளைகள் வீட்டுக்குள்ளே வர்ரதுக்குமுன்னே கேள்வி?

மார் : தௌலத்!

தௌ : பேசாதே!

மார் : ஹாங்!

தௌ : ம் ஹூம்.மார்ஜியாஞவா? நீ பேசு.

மார் : சரி இந்த மூட்டையிலே என்ன இருக்க?

தௌ : நில்லு. என்கிட்டேபேசு. மூட்டைகிட்டே போகாதே.

அலி : அமைதி அமைதி.

தௌ : விடு என்னை. மார்ஜி யாஞ! டோலக் அடிச்ச தௌலத் துன்னு நினைச்சியா? இப்பொ...கான் படேகான்–பகதூர்கான் தௌலத் கான்.

ஆயேஷா வருகிருள்.

ஆயே : என்னண்ணு இதெல் லாம்?

தௌ : சாக்குக்குள்ளே இருக் கிறதை பார்த்தா மூக்குமேலே கையை வைப்பீங்க.

## ஆண்டவன் தந்த பரிசு!

அலியும் தௌலத்தும் மூட்டைகளை அவிழ்க்கின்றனர். அதிலிருந்து நகைகள் விழுகின்றன. எல்லோரும் திகைக்கிருர்கள்.

ஆயே : இவையெல்லாம் எப்படி யண்ணு கிடைத்தது?

அலி : ஆண்டவன் தந்த பரிசு.

ஆயே : இருக்காது. ஆண்டவ னின் கருணை இவ்வளவு தாராளமாக இருந்ததில்லை.

அலி : இல்லை. ஆயேஷா! என் அதிர்ஷ்டத்தின் வெகுமானம்.

ஆயே : நம்பமாட்டேன். உடலில் வலிமையும் வாளில் கூர்மையும்இருக் கும்போது, உனக்குப் பணம் வந்த வழி எனக்குப் புரிகிறது. நீ மாறிவிட் டாய்! குணம் கெட்டுவிட்டாய் அண்ணு!

அலி : ஆயேஷா!

ஆயே : வேண்டாம்! வஞ்சனைக் கும் குரோதத்துக்கும் காரணமான இந்தப் பணம் நமக்கு வேண்டாம். குடிசை வீட்டு அமைதிபோய்விடும். அன்பு போய்விடும்; பாசம் போய் விடும்; காதல் போய்விடும்.

மார்ஜியாஞ மனம்நொந்து போகிருள்.

ஆயே : கொண்டு போ அண்ணு.

அலி : ஆயேஷா! ஆண்டவனின் சாட்சியாகச் சொல்கிறேன். இது அபகரித்த பொருளல்ல. யாருக்கும் சொந்தமானதல்ல. கத்தியைக் காட்டி காசைப் பறிக்கும் புத்தி கெட்டவஞக இந்த அலிபாபா வாழ்ந் ததில்லை. இது வரையில் என் கத்தி நியாயத்துககுப் போராடியிருக்கிறதே தவிர, துரோகத்துக்குத் துணை செய்த தில்லை. ஆயேஷா! இவ்வளவு நாட் கள் என்னுடன் பழகியும் என் மனம் தெரியவில்லையே ஆயேஷா!

ஆயே : என்னை மன்னித்து விடுங் கள் அண்ணு!

அலி : பரவாயில்லே ஆயேஷா. (தலையை தடவுகிருன். சுற்றுமுற்றும் பார்த்து) மார்ஜியா.. எங்கே பார்ஜி யானு? மார்ஜியானு... மார்ஜியானு!

ஆயே : புல் புல்! தௌலத்! இதெல்லாம் பத்திரமா எடுத்து வையுங்க.

புல் : (தௌலத்திடம்) இது நிஜ வைரமா?

தௌ : இல்லே! கண்ணுடி! அதுலே உன் லட்சணத்தைப் பார்க் கலாம். ஆளப்பாரு! பப்பளப்பள பளான்னு டால் அடிச்சு கண்ணைப் பறிக்குது. நிஜ வைரமான்னு கேக் கறியே!

புல் : (மோஹராவை எடுத்து) உம்...இது பித்தளையா?

தௌ : ஆமாம், அடுக்கு பாத்த ரம், அண்டாவெல்லாம் பண்ணலாம். கொஞ்சம் புளி யெடுத்துத் தேச்சிப் பாரேன்.

## காதல் காவியம்

மார்ஜியானு வருத்தத்தோடு நிற்கி ருள். அப்போது அலிபாபா கூப் பிட்டுக் கொண்டே வருகிருன்.

அலி : மார்ஜியானு! உன் கால் பட்ட வேளை கணக்கில்லாத பொருள் கிடைத்து விட்டது. நம் வீட்டை அதிர்ஷ்டம் தேடி வந்திருக்கும் போது உன் கண்களிலே ஏன் இந்தக் கவலை? ஏன் இப்படித் தனியாக வந்து விட்டாய்?

மார் : ஒளி வந்தபின் இருளுக் கென்ன வேலை?

அலி : அமைதியைத் தருவது இருள்தானே?

மார் : உங்கள் அதிர்ஷ்டச் சக்க ரம் உருளும் வேகத்தில் என்னைப் போன்ற அனுதைச் செடிகள் அதில் சிக்கி அழிய வேண்டியதுதானே?

அலி : இல்லை, மங்காது தழைத் திடும்.

மார் : அதிர்ஷ்டம் ஒரு போதை.

அலி : நான் நிதானத்தை இழக்க மாட்டேன். மார்ஜியானு! நம் எதிர் கால வாழ்க்கையைச் சிறந்த காவிய மாக எழுதி முடித்து விட்டேன்.

மார் : உங்களுக்கு அளவில்லா செல்வம் கிடைத்து விட்டது. இனி வாழ்த்துக்களும் வரவேற்புட ஆமாம் சாமிகளும் வந்து குவியும் உலகத்து அழகிகளும் செல்விகளும் உங்களை அறிமுகம் செய்து கொள்ளக் காத்திருப்பார்கள். இப்போது நீங் கள் என்னிடம் படிக்கும் காதற் காவி யம் அப்போது ஏடு ஏடாக காற்றில் பறக்கும்.

## காட்சி 4

## வஞ்சகவலை

அலிபாபா பெரும் பணக்காரனுகி விட்டதறிந்து காசீம்கான் மனம் குமுறுருன். அலிபாபாவுக்கு பொருள் கிடைதத விதத்தை அறிய நயவஞ்சக மானதொரு திட்டம் தீட்டுகிருன் சலீமா.

சலீ : புதிய மாளிகையாம் தான மாம், தர்மமாம். ஊரே அமர்க்களப் படுகிறது. அலிபாபாவின் பெயர் எங்கும் கொடி கட்டிப் பறக்கிறது.

காசீ : என் வயிறு பற்றி எரிகிறது. அந்தப் பணம் ஒரு விபச்சாரி. என்னி டமும் வாழ்கிருள், அதே சமயம் அநத அன்னக்காவடியிடமும் போய்ச் சேருகிருள். இந்த பணத்துக்கு பத்தினியாகவே இருக்கத் தெரியாது போல இருக்கிறது.

சலீ : மனம் குமுறிப் பயனில்லை. அவன் பணம் கரைய வழிதேட வேண்டும்.

காசீ : அவனுக்கு இவ்வளவு செல்வம் எங்கிருந்து கிடைத்தது? அதை முதலில் ஆராய வேண்டும்.

சலீ : உங்கள் ஆராய்ச்சி முடி வதற்குள் அலிபாபா அமீராகி சுல்தா னுகவும் ஆகி விடுவான்.

காசீ : எனக்கு ஒன்றுமே புரிய வில்லை சலீமா! உனக்கு என்ன தோன்றுகிறது?

சலீ : வயிற்றிலடித்துக்கொண்டு அழத் தோன்றுகிறது. சீக்கிரத்தில் ஒரு தந்திரத்தை யோசித்து அந்த ரகசியத்தைத தெரிந்து கொள்வதற்கு உங்களுக்கு மூளையில்லையே என்று வருந்தத்தோன்றுகிறது.

காசீ : சலீமா! நீதான் வழி சொல்ல வேண்டும்.

சலீ : சாதுர்யமாக இந்த ஈத் பண்டிகைக்கு அலிபாபாவை நம் வீட்டுக்கு விருந்துக்கு அழையுங்கள்.

காசி : விருந்துக்கா? சலீமா! நாம் அழைத்தால் அலி வருவானு?

சலீ : உங்களைவிட நான் அலி யின் மனதைநன்ருகப் புரிந்துகொண் டிருக்கிறேன், பாசத்தை மறக்கும் குணம் அலிபாபாவிடம் கிடையாது. விருந்துக்கு வந்தவுடன் நீங்கள் அவ னிடம் தந்திரமாகப் பேசி...

காதில் ஏதோ சொல்கிருள் சலீமா.

## பக்ஷி பறந்தது!

அலிபாபாவை விருந்துக்கு அழைத்து பாசம் கொண்டவன்போல் நடித்த பாவி காசீம், மந்திரத்தை அறிந்து கொண்டபின், அவனைக் கைது செய்கிருன். ஆயேஷா முதலி யோர் ஓடி வருகின்றனர்.

ஆயே : என்னண்ணு இது? ஏன் பாபாவை கைதாக்கினீர்கள்?

காசி ; ம்...அண்ணனை விட்டு தூரப்போ! அன்போடு பேச அழைத் தேன். அறையிலிருந்து கத்தியை எடுத்தான். பழைய வஞ்சகத்தை மனதில் வைத்துக கொண்டு படு கொலைக்குத் துணிந்தான். ஷேர்கான் வராவிட்டால் இந்நேரம் நான் பிண மாயிருப்பேன்.

ஷேர் . ஆம், மிகவும் உண்மை.

அலி : கட்டுக்கதை; கேள் ஆயேஷா! நான் பொன் சேர்த்த வழியைச் சூதாகப் புரிந்துகொண்டது இந்த வஞ்சக நரி. அலிபாபாவைக் கொன்று விட்டால் அத்தனைப் பொன் னும் பொருளும் தனக்கு கிடைக்கும் என்ற பேராசையால் நாகப் பாம்பாக மாறி விட்டான்.

ஆயே : வேண்டாம் அண்ணு! பணத்தின் ஆசையால் பாசத்தை இழந்தான் காசிம் என்ற அவச்சொல் லுக்கு ஆளாக வேண்டாம் அண்ணு! விட்டுவிடுங்கள் அவரை. எங்கள் செல்வம் எல்லாம் உங்கள் முன் கொட்டி விடுகிரேம். பழையபடி விறகுவெட்டிப் பிழைக்கிரேம். விட்டு விடுங்கள் அண்ணு!

காசி : ஆயேஷா! இந்த விஷயத் தில் நீ தலையிடாதே! என் உயிருக்கு உலைவைத்தவன் சாகத்தான் வேண் டும்.

ஆயே : அண்ணி! நீங்களாவது சொல்லுங்கள் அண்ணி!......

சலீ : என் கணவரைக் கொல்ல வந்தவனுக்கு எப்படியடி விடுதலை கொடுக்க முடியும்? போ...அப்பால்.

அலி : ஹா! ஆயேஷா!

ஆயே : சே! எங்கிருந்தோ வந்து எங்கள் குடும்பத்தில் குடியேறிய வளே, இது எங்கள் தாய்வீடு. என்னை உதைக்கவும் என் அண்ண னைக் கைது செய்யவும் நீ யார்? (காசி மிடம்) அண்ணு, தம்பி, தங்கை என்ற பாசத்தை இவளின் அதிகாரச்சுவர் மறைத்து விட்டதா? நாங்கள் யார் என்பதை சிறிது எண்ணிப்பாரண்ணு!

சலீ : என்னதான் தொழுதாலும் உன் அண்ணுவின் அதிகாரம் இங்கே செல்லாதம்மா, செல்லாது. என் கண் ணெளி பட்டால் அவர் கருகிச் சாம்ப லாகி விடுவார். உம் இழுத்துக் கொண்டு போங்கள்.

ஆயே : (அலிபாபாவிடம்) அண்ணு!

அலி : (சலீமாவிடம்) பெண்ணுரு வத்தி லைநரபலி வாங்கும் பைசாசமே! உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன். என் அண்ணனுக்கும் இந்த முடிவைக் கொடுத்து விடாதே! ஆயேஷா! பாப நாடகத்தை பக்குவமாய் முடித்து விட் டார்கள். அதில பங்கு கொண்டது நம்முடைய குற்றந்தான். நாம்தான் குற்றவாளிகள்.

மார்ஜியானு சமயோசிதமாக நடந்து அலிபாபாவைக் காப்பாற்ற வரு கிருள்.

மார் : சபாஷ்! நல்ல முடிவு. ஆமோதிக்கிறேன். சாகும் நேரத்தில் தான் சில மனிதர்களுக்கு ஞானம் பிறப்பது வழக்கம். அது உன் விஷ யத்தில் சரியாய் இருக்கிறது. (அலி யிடம் நெருங்கி) அலிபாபா! உனக்கு ஏற்பட்ட இந்த பரிதாப நிலையைக் கண்டு நான் ஆனந்தப் படுகிறேன்.

அலி : மார்ஜியானு! என்ன சொல் கிருய்?

ஆயே : நீயா இப்படிப் பேசுவது?

மார் : நானேதான். அடிமை மார் ஜியானுதான். உன் அண்ணன்

அலிபாபாவினால் வஞ்சிக்கப்பட்ட அனாதை மார்ஜியானாதான்.

சலி : என்ன! உன்னையும் வஞ்சித்தானா?

மார் : ஆமாம் சர்தார்! அன்றே ஷேர்கான் என்னை அழைத்தபோது வந்திருந்தால் நான் உங்கள் மாளிகையில் சுகபோகமாக வாழ்ந்திருப்பேன். என்னை மன்னியுங்கள். இவனை நம்பினேன். அற்பனுக்கு வாழ்வு வந்தவுடன் அன்பு போய்விட்டது. பண்பு போய்விட்டது. என்னை அடிமை போல் நடத்த ஆரம்பித்தான்.

அலி : மார்ஜியானா! நீயுமா மாறிவிட்டாய்? ம்..காற்றுவீசும் பக்கம் தானே அலைபுரளும். அழகான பெண்கள் ஆபத்தானவர்கள் என்பதில் சந்தேகமில்லை.

மார் : நிறுத்து! கள்ளமில்லா மனத்தோடு உன்னை காதலித்ததற்கு நீ அளித்த கைமாறு எனக்குத் தெரியும். துல்லியமான அன்பால் நேசித்த எனக்கு துரோகம் செய்தாய். உன்னை பழிக்குப் பழிவாங்காமல் எனக்கு நிம்மதி கிடையாது. பேகம்சாஹிபா! என் கையால் இவன் செத்தால்தான் நீதிக்குப் பெருமை உண்டு.

ஷேர் : பேகம் சாஹிபா! இவள் நடிக்கிறாள். அவ்வளவும் பசப்பு!

சலி : கிடையாது. வெறுப்பு. ஷேர்கான்! பெண்மனம் இன்னொரு பெண்ணுக்குத்தான் தெரியும். ஏமாந்த பெண்களின் மனது எரிமலை போல் குமுறும். அவள் வஞ்சத்தை அவளே தீர்த்துக் கொள்ளட்டும்.

மார் : பேகம்! நீங்கள் ஆயிரம் வருஷம் வாழவேண்டும். பெண்ணை ஏமாற்றும் இவனைப்போன்ற புல்லர்களைச் சாதாரணமாகக் கொல்லக் கூடாது. சித்ரவதை செய்து கொல்ல வேண்டும். (அலியிடம்) எந்த நாட்டியக் கலையைத் தடுத்து நான் ஆடக் கூடாது எனக்கட்டளையிட்டாயோ அதே நாட்டியம் உனக்கு யமனாக மாறுவதைப்பார்.

**பிச்சுவாவை எடுக்கிறாள். நடனமாடிக்கொண்டே யாருமறியாமல் அலிபாபாவின் கையில் கட்டப்பட்டிருக்கும் கயிற்றை அறுத்து விடுகிறாள். அவன் தப்பி விடுகிறான்.**

## காட்சி 5

## தன்வினை

**காசீம்கான் குதிரையில் குகைக்குப் பறந்து வருகிறான். மந்திரத்தைச் சொல்லி உள்ளே புகுந்தும் விடுகிறான். ஏராளமான நகைகளையும் வாரி வாரி எடுத்துக் கொள்ளுகிறான். அதே சமயம் அலிபாபாவின் காயங்களுக்குக் கட்டு போடுகிறாள் மார்ஜியானா. நன்றி தெரிவிக்கிறான் அலிபாபா.**

அலி : மார்ஜியானா! நீ மட்டும் வராதிருந்தால் நான் செத்துதான் போயிருப்பேன்.

மார் : ஓ! சாவதற்குப் பயப்படுகிறீர்களா!

அலி : முன்பெல்லாம் பயப்பட மாட்டேன். என் முத்தாரச் சிரிப்பழகி நீ வந்த பிறகு உன்னை விட்டுப் பிரிவதென்றால் மனங் கேட்கிறதா மார்ஜியானா?

மார் : பாபா!

அலி : மார்ஜியானா!

ஆயே : மார்ஜியானா...மார்ஜியானா!...அட! நீ இங்கா இருக்கிறாய்? அண்ணா! உன்னிடம் சொல்லி மார்ஜியானாவுக்கு சரியான பரிசு கொடுக்க...

அலி : ஆம் ஆயேஷா! நான்கூட மறந்து விட்டேன். மார்ஜியானா! என் உயிரைக் காப்பாற்றியதற்கு உனக்கு என்ன பரிசு வேண்டும் கேள்? உம், கேள் மார்ஜியானா?

மார் : எனக்குத் தேவையானதைக் கேட்டால் மறுக்காமல் தருவீர்களா?

அலி : சந்தேகமென்ன? சத்தியமாகத் தருகிறேன்.

மார் : சரி, அவசியம் வரும்போது கேட்கிறேன். அப்பொழுது கொடுங்கள் போதும்.

ஆயே : அந்த அவசியம் எப்போது வரும் என்று எனக்குத் தெரியும் அண்ணா! கல்யாணமான பிறகு அந்த பரிசைக் கேட்கப் போகிறாள் மார்ஜியானா. அது என்ன தெரியுமா? (குழந்தை போல் நடித்து) குவா...குவா...குவா...

மார் : வவ்வே..வவ்வே..வவ்வே.

ஆயே : அண்ணு! சண்டை நடக்கும் போது அண்ணன் காசிம்கான் எங்கோ பொனுரே?

அலி : ஆம் ஆயேஷா! மறந்தே போய் விட்டேன். அவர் அந்த குகைக்குத்தான் போயிருக்க வேண டும். ஆயேஷா! நான் போய் பார்த்து வருகிறேன்.

அண்ணனின் பேராசையை அலி பாபா அறியாதவனு என்ன? குகையை நோக்கிக் குதிரையில் பறக்கிருன். அதே சமயம் திருடர்களும் குகைக்குத் திரும்புகிருர்கள். பண ஆசையால் மந்திரத்தை மறந்துவிட்ட காசிம்கான் வெளியே வர முடியாமல் உள்ளே கூவிக் கதறித் துடிக்கிருன். திருடர்கள் வந்து விடுகிருர்கள். இதைக் கண்ட அலிபாபா மறைந்து கொள்ளுகிருன். திருடர்கள் உள்ளே நுழைந்து எல்லாம் தாறுமாருகக் கிடப்பது கண்டு திடுக்கிடுகிருர்கள். காசிம் பிடிபட்டு விடுகிருன். அவனை தலை வேறு முண்டம் வேருக்கிச் சாகடித்துப் பிணத்தைத் தலைகீழாகத் தொங்க விட்டுவிட்டுப் போய்விடுகிருர்கள் திருடர்கள். அவர்கள் சென்று மறைந்ததும் அலிபாபா உள்ளே நுழைந்து, அண்ணனின் உடலோடு வீட்டுக்குத் திரும்புகிருன். வரும் வழியில் காசீம் கால்களிலிருந்த பாதரக்ஷைகளில் ஒன்று கீழே விழுந்து விட்டதை அவன் கவனிக்கவில்லை. காசிம்கானை அபு ஹுசேன் கொலை செய்ததையறிந்து மார்ஜியாணு மனம் குமுறுகிருள்.

மார் : அபுஹுசேன்! அபுஹுசேன்! கொள்ளையும் கொலையும் பிள்ளை விளையாட்டாக இருக்கிறது அவனுக்கு! இன்று காசிம்கானின் தலை! நாளை அபுஹுசேன் தலை. இது போல உருளாது என்பது என்ன நிச்சயம்?

ஆயே : யார் தலை உருண்டால் என்ன...உருளாவிட்டால் என்ன... இதோ, என் தமையன் பிரேதமாக உருண்டு விட்டார்.

அலி : அழாதே ஆயேஷா! இந்தப் பிரேதம் பேராசையின் விளைவு. ஆறுதலாக இரு. நமக்கு ஒரு பொருமைக்கார அண்ணன் பிறக்கவில்லை என்று எண்ணிக் கொள்வோம். மார்ஜியாணு! இனி நாம் நடக்க வேண்டியதை கவனிக்க வேண்டும்.

மார் : நடப்பதென்ன ?

அலி : மத சம்பிரதாயம் உனக்குத் தெரியாதா? தலை வேறு முண்டம் வேருக சவ அடக்கம் செய்யக் கூடாதே. மறைத்து வைக்கலாமென ருலும் துக்கம் விசாரிக்க வருகிறவர்கள், முகதரிசனம் வேண்டுமென்று துடித்துப் போவார்களே!

ஆயே : ம்...இப்ப...இதற்கு என்ன செய்வது...?

மார் : சரி! கவலைப்படேல்! எல்லாம் நான் கவனித்துக் கொள்கிறேன்!

அலி : இதற்கெல்லாம் உன் நாட்டியம பயன்படாது.

மார் : இப்ப என்ன, காசிம் கானுக்கு கல்யாணமா நடக்கப் போகிறது, நான் நாட்டியமாட? பாபா! பாருங்களேன் நான் செய்கிற வேலையை...

அலி : மிகவும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். கள்வர்கள் வேறு இந்தப் பிரேதத்தைத் தேடிக்கொண்டிருப்பார்கள், கழுகுகள் போல...!!

மார் : சரி இருங்கள், இதோ வருகிறேன்.

அலி : எங்கே போகிருய்...?

மார் : தலையும் முண்டமும் ஒட்டுவது என்ருல், தைரியம் மாத்திரம் போதாது பாபா! அதுக்கு தலையிலே கொஞ்சம் மூளை வேணும்!

வேகமாகப் போகிருள்.

## காட்சி 6

### கண்கட்டு வித்தை

குலாம் ஒரு வயதான சக்கிலியன்; மாலைக்கண்ணன். ஆனுலும் கொஞ்சம் புத்திசாலி. தலை வேறு முண்டம் வேருகி விட்ட காசீமகானின் உடலை ஒன்று சேர்க்க குலாமை ரகசியமாக அழைக்க வருகிருள் மார்ஜியாணு. அப்போது அவன் பாதரக்ஷை ஒன்றை தைத்துக் கொண்டிருக்கிருன். நூல் அறுந்து விடுகிறது.

குலா : நூல் பழசாப் போச்சா, இல்லே என் கை பழசாப் போச்சா?

அடிக்கடி இப்படி அறுந்தறுந்து போகுதே. ஓஹோ! விளக்கு வச்சுப் போச்சுதில்லே. கண்ணு தெரியல்லே.

மார் : குலாம் தாத்தா!

குலா : எவண்டா அது?

மார் : நான்தான் சலாம் மாலேகும்!

குலா : ஆலேகும் சலாம்! ஆலேகும் சலாம்!! உக்காரு! பாய் போடவா?

மார் : ம்ஹும்!

குலா : பலகையிலே உக்காரியா?

மார் : ஹூம் ஹூம்.

குலா : சாயா போடவா?

மார் : ஹூம்!

குலா : காலுக்கு செருப்பா? கைக்கு உரையா? தலைக்குத் தொப்பியா?

மார் : என்னய்யா இது, ஒரே அவசரப்பட்றியே? வேலையா ஆள் வந்தா, உடனே வெளியிலே துரத்திடுவே போலிருக்கே.

குலா : சே! சே!! அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே. ஆம்பளைங்க வந்தா வாசலோட பேசி அனுப்பிச்சிடுவேன். பொம்பளைங்க வந்தா அவங்களே வாசலோட போயிடுவாங்க. இப்போ நீ...

மார் : ரொம்ப அவசரமான வேலையாதான் வந்தேன்.

குலா : அவசரமான வேலையா..? கால் செருப்பு கடிக்குதா..? வாரு கழண்டு போச்சா...? புதுத்தோலு போடணுமா...?

மார் : சே! சே!! சே! சே!! இந்த வயசான கிழவங்க வாயே இப்படித்தான் பல்லி மாதிரி தொண தொணன்னு. என்னை பேச விட மாட்டேங்கிறியே.

குலா : கோவிச்சுக்கப்படாது! பொம்பளைங்களப் பார்த்தா எனக்கு புதுசுபுதுசா கற்பனை மூளைக்கு உதயமாகும்.

மார் : ஓஹோ! எனக்கு கிழவங்களைக் கண்டா ரொம்ப பிடிக்கும்.

குலா : ஹூாங்...!

மார் : ஹூம்!

குலா : இருக்கும்! இருக்கும்!! இருக்கும்! இருக்கும்!! ஏன்னு அழுகின பழத்தை அணில் திங்கல்லியா? அது...

மார் : அதுமாதிரி நான் உன்னை திங்க முடியாது. ஊசியும் நூலும் எடுத்துக்க தாத்தா...! போவோம்.

குலா : இரு இரு இடமென்ன? வேலை என்ன? கூலி என்ன? நாள் கூலியா..? மாதக்கூலியா...? தவணை வேலையா? அவசரவேலையா?

மார் : அடேடே! இது அவசர வேலைதான். மேலும் ரகசியமாக உன் மனசுக்குள்ளேயே வச்சுக்கணும். வேலை முடிஞ்சவுடனே பரிசு ...பெரிசு.

குலா : பரிசு.. பெரிசு. ப்ஷ்...! எனக்கு ஒண்ணுமே புரியலியே.

மார் : புரியாதுதான். போகப் போகத்தான் தெரியும். ஆனா ஒண்ணு; போகும் போது கண்ணைக கட்டித்தான் கூட்டிக்கிட்டு போவேன்.

குலா : இதென்னடா ... கண் கட்டி வித்தையாயிருக்குது ..? ஏம்மா, நான் முழுசா போயி முழுசா வருவேனு...?

மார் : இல்லே! பாதியா வருவே! பணம் வேணும்னு புறப்படு.

குலா : இரும்மா! இரும்மா!! நான் சோனுகிட்ட அனுமதி வாங்கிட்டு வர்ரேன்.

கையில் பச்சை குத்திய பெண் உருவத்திடம் பேசுகிறான்.

மார் : சோனு...!

குலா : சோனு! நான் இந்த வேலைக்குப்போறு ... ஹூாங் .. அனுமதியாயிடுச்சி.

மார் : ஹேங்!

குலா : இரு இரு! பையும் ஊசியும் எடுத்துக்கிட்டு வர்ரேன்.

குலாம் பையும் ஊசியும் எடுத்துக் கொள்கிறான். மார்ஜியானு அவன் கண்ணைத் துணியால் கட்டுகிறாள்.

குலா : (சிரித்தபடி) முப்பது வருஷமாச்சி.

மார் : யாருக்கு ..?

குலா: என் பீபீ சோஞ செத்து. நீ தொட்டவுனே எனக்கு அவ ஞாபகம் வந்துடுச்சி.

மார்: அது ஞாபகமாகவே இருக்கட்டும். என்னே உன் "பீபீ"ன்னு நெனச்சிடாதே.

போகிருர்கள். வேலை முடிந்தபின் குலாமுக்கு பை நிறைய மோஹராக்கள் தருகிருள் மார்ஜியாஞ. அங்கிருந்து மீண்டும் கண்ணைக் கட்டியபடி வரும்போது, வாசல் கதவிலே ஒரு பெருக்கல் குறியை அடையாளத்துக்குப் போட்டுவிடுகிருன் குலாம்.

## காட்சி 7

### சிங்கம் கர்ஜிக்கிறது!

தோழர்களுடன் குகைக்குத் திரும்பிய அபுஹுசேன் பிணம் மறைந்த மாயம் கண்டு கோபத்தோடு கர்ஜிக்கிருன்.

அபு: சிறுத்தையின் வாயிலிருந்து செம்மறியாடு தப்பியிருக்கிறது. சிலந்தியின் வலையிலிருந்து சிற்றெறும்பு ஓடியிருக்கிறது. பாம்பின் வாய் புகுந்த தேரை, பொல்லாத புலியின் வாய் சிக்கிய புள்ளிமான் தப்பி ஓடியதாக இப்போதுதான் கேள்விப்படுகிறேன் ஹமீத், இப்போதுதான் கேள்விப்படுகிறேன். காற்று புகமுடியாத குகையிலே கயவன் ஒருவன் புகுந்திருக்கிருன்! நம்மையெலலாம் சோற்ருலடித்த பிண்டங்களாக்கி விட்டு, சவத்தையும் தூக்கிச் சென்றிருக்கிருன்! ஹஹ்ஹஹ்ஹா! திருடர்கள் கூடாரத்திலே திருடன்! சூதர்கள் வட்டாரத்திலேயே ஒரு சூழ்ச்சிக்காரன்! இதை எப்படி நம்புவேன் ஹமீத், நான் எப்படி நம்புவேன்? நம் நாற்பது பேரைத் தவிர, நாற்பத்தி இரண்டாவது ஆசாமியும் அதை உணர்ந்தவஞக இருக்கிருனென்ருல் அது எப்படி நடந்திருக்க முடியும்?

ஹமீ: மன்னிக்க வேண்டும் ஹுசூர். உடன் பிறந்த சகோதரர்களைவிட, உற்ருர் உறவினரைவிட ஒற்றுமையாய் இருந்து வரும் உங்கள் கூட்டாளிகளைச் சந்தேகிப்பது சரியல்ல.


# உல்லாஸ தம்பதிகள்

தமிழ்நாடு ஏஜெண்டுகள்:
சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், மேல கோபுர வாசல், மதுரை.

ஒருவன்: சொல்லம்பு பாய்ச்சா தீர்கள். சந்தேகப்பட்டால் எங்களைச் சிரச்சேதம் செய்து விடுங்கள் தலைவரே.

அபு: உங்களைக் குறை சொல்ல வில்லை. நம் குடி கெடுக்கும் அந்தக் கொடியவனின் குரல் வளையை நெறிக்க வேண்டுமென்பதற்காகவே எப்படியிருக்கிறதென்று உங்கள் இருதயத்தைத் தொட்டுப் பார்த்தேன். தவருக நினைக்காதீர்கள். காணமல் போன சவத்தையும் அதைத் தூக்கிச் சென்ற கயவனையும் நாம் எப்படிக் கண்டு பிடிப்பது?

"கண்டு பிடித்து விட்டேன், கண்டு பிடித்து விட்டேன்" என்று கத்திக் கொண்டே ஒருவன் ஒற்றைச் செருப்புடன் அங்கே ஓடி வருகிருன்.

வந்தவன்: இதோ, பிணத்தின் காலிலிருந்த செருப்பிலே ஒன்று. இதன் ஜோடியைக் கண்டு பிடித்து விட்டால் திருடனைப் பிடித்து விடலாம் பிரபூ!

அபு: சபாஷ்! சஞ்சலமே உருவாகிக் கிடந்த உங்கள் தலைவனை சந்தோஷக் கடலிலே தள்ளி விட்டீர்கள். என் உடலிலே ஒட்டிக் கொண்டிருக்கும் எண்பது கரங்களே! எண்பது விழிகளே! என்பால் கட்டுண்ட காற்பது மெய்யன்பர்களே! நமக்குத் தொல்லை கொடுத்தவனைப் பிடிப்பதற்கு இதோ துப்பு கிடைத்து விட்டது.

## காட்சி 8

## ரகசியம் வெளியாகிறது

அபுஹுசேன் மாறுவேஷத்தில் ஆட்களுடன் ஊருக்குள்ளே வருகிருன். அப்போது ஒரு நாடோடிப் பெண் நடனமாடிக்கொண்டிருக்கிருள். நடனத்தை ரசிக்கும் குலாம் அது முடிந்ததும் ஒரு மோஹராவை எடுத்துப் போடுகிருன் அபு ஹுசேன் அதைக் கண்டு திடுக்கிடுகிருன் எடுத்து உன்னிப்பாகக் கவனிக்கிருன் அவன்.

குலா: யோவ், என்னய்யா இது? நான் குட்டிக்குக் கொடுத்தா நீ தட்டிக்கப் பாக்கறே. கொண்டாய்யா

அபு: ஏய்! இந்தா ரெண்டு மோஹரா!

குலா: அத்திரி பச்சான்னன். ரெண்டு கொடுக்கறியா? இந்தா பொண்ணு, மூணு வச்சுக்க.

அபு: இந்தா அஞ்சு!

குலா: எங்கிட்டயா போட்டி யிடறே? (பையைக் கொடுத்து) இதை வச்சுக்க, (அபுவைப் பார்த்து) ஓஹோன்னுை! இந்த குலாம் சாயபு கிட்டேயா மோதிககிறே?

அபு: மன்னிச்சுக்கணும்..... மன்னிச்சுக்கணும். குலாம் சாயபு பிரபுவோட போட்டிககு வந்த இந்த மடையனை மன்னிக்கணும்.

குலா: பரவாயில்லே...... பரவாயில்லே.

அபு: பிரபு யாரோ? எங்கேயோ முகத்தைப் பார்த்தது போல் இருக்கிறது.

குலா: பான சட்டியா பஜார்லே கிடைக்க.

அபுஹுசேன் சிரிக்கிருன்.

குலா: என்னய்யா அப்படி சிரிக்கிறே? சிரிச்சேன்னு வாயை தச்சுப் புடுவேன் தச்சு...

அபு: அப்ப நீங்க.

குலா: ஆமய்யா! அதில் ஒண்ணும் கேவலமில்லே.

அபு: இல்லை, எங்கள் நாட்டில் சக்கிலியர்கள் சிலந்தி வலையை நூலாகக் கொண்டு பஞ்சு பாதங்களுடைய பாவையர்களுக்கு புருவின் இறகினல் செருபபை தைததுக் கொடுப்பாங்க. அந்த மாதிரி இங்கே...

குலா: ஹுக்கும், இதுதானு பிரமாதம்? இவரு கசாபபுக்கடையிலே கொத்திப் போட்ட ஆட்டுக் கறியை ஒணணு சேர்த்து முழு ஆடா தைச்சுக் காட்டுவாராக்கும்.

அபு: எங்க தேசததிலேகூட மாடுகளை அப்படி தெப்பாங்க.

குலா: மாட்டெதாணு தெப்பாங்க? இங்கே மனுஷனையே தைப்பேன் னேன்.

அபு: மனுஷனைக்கூட அப்படி தைக்கிறுங்களா?

குலா: கிருங்க...கிருங்க.

அபு : அப்ப உங்களுக்கு கலை மன்னன்னு பட்டம் குடுககலாமே.

குலா : பட்டம் என்ன குடுக்கறது? ஆயிரம் மோஹராவே குடுத்தாங்க ஒரு ஊட்டுலெ மனுஷனை தெச்சத்துக்காக. ஆமாம், சரி சரி. நான் ஏதோ ஒளர்றேன் போல இருக்கு. ஏம்பா! நீ போப்பா. நீ வேற என் வாயைப் பிடுங்கி வயித்தெரிச்சலை கொட்டிக்காதே.

அபு : இல்லை சாஹேப்! ம் ம் பிரபு...எனக்கும் அப்படி ஒரு காரியம் ஆகவேண்டியிருக்கிறது.

குலா : உனக்கா? உனக்கு தலையும் முண்டமும் ஒண்ணுத்தானே இருக்குது.

அபு : எனக்கில்லை, என் வீட்டில்.

குலா : ஓ, பெண்டாட்டிக்கு வாய் நீளமாக்கும். அதை தைக்கணுமா?

அபு : இல்லே, தலை தைக்கற வேலைதான். ரெண்டாயிரம் மோஹரா தர்ரேன.

குலா : ரெண்டாயிரம்!

அபு : இல்லே, ஐயாயிரம் தர்ரேன்.

குலா : ஐயாயிரம். தலை தைக்கறதுக்கு முன்னடி ஒரு பை தைக்கணும் போல இருக்கு, சம்பாதிக்கிற பொருள் வைக்கிறதுக்கு.

அபு : உங்களுக்கு ஒரு பெட்டியே செஞ்சிட்ரேன். வாங்க வீட்டுக்குப் போகலாம். காரியத்தைப் பேசி பணத்தையும் கொடுத்திட்ரேன்.

குலா : வாங்க, செய்யடா! செய்யடா...ஜல்ஸா...

குலாமும் கள்வர் தலைவனும் மற்றவர்களும் குலாம் வீட்டின் உள்ளே வருகின்றனர்.

குலா : வாங்க...வாங்க...உக்காருங்க. பாய் போடட்டுமா? இல்லே பலகையிலே உக்கார்றீங்களா? ஹா ஹா...பானி சாப்பிடுங்க.

கத்தியைக் காட்டுகிறார்கள் அவர்கள்.

குலா : இது என்ன இது? இந்த கத்திக்கு உரை கைவசம் கிடையாது. வேணும்னா அப்பறம் தைச்சித் தர்ரேன். பானி சாப்பிடுங்க.

அபு : ஏய் குலாம்! நாங்க உரை வாங்க வரலே! உன் உயிரை வாங்க வந்தோம். உண்மையைச் சொல். எங்கே அந்த பொணத்தை தைச்சே?

குலா : செத்த வீட்டிலே!

அபு : கேலியா பண்றே! ஹமீத்!

ஹமீ : ம்... (கத்தியைக் காட்டு கிருன்)

குலா : ஐயா சாயபு! கத்தியை கொஞ்சம் சாய் அப்படி!

அபு : (செருப்பை எடுத்துக் காட்டி) ஏய் குலாம்! இது தெரியுதா?

குலா : தெரியுது. செருப்பு.

அபு : இதைப்போல் இன்னெண்ணு உங்கிட்ட வந்துச்சா? இல்லே நீ பாத்தியா?

ஹமீ : உம்.

குலா : பார்த்தேன்..பார்த்தேன்.

அபு : எங்கே?

குலா : பொணத்தோட காலிலே. ஐயோ! அதிர்ஷ்டம் வந்தா கூட ஆபத்து வருமுன்னு சொல்லுவாங் களே! சரியாத்தானே போச்சுது.

அபு : அப்பொ இடத்தை சொல்லு.

குலா : ஐயோ! கத்தியை மறையுங் களேன். இடத்தை சொல்றேன். பொணம் தைச்ச இடம் எனக்குத் தெரியாது!

அபு : ஏய்!

குலா: சொல்றேன், சொல்றேன்! ஒரு பொண்ணு வந்திச்சு என் கண் ணைக்கட்டி கூட்டிக்கிட்டுப் போச்சு. பொணத்தைப் பார்த்தேன் – தைச் சேன், ஆயிரம் மோஹரா கொடுத் துச்சி. மறுபடியும் கண்ணை கட்டிச்சி! கூட்டி வந்துடுச்சி!

அபு : அடசே! ஹமீத்! இந்த கிழட்டுப்பசங்க எப்போதுமே நெஞ் சழுத்தக்காரங்க. நிஜத்தை உதைக் காமல் சொல்ல மாட்டாங்க . உம்...

மீண்டும் ஹமீத் கத்தியை நீட்டு கிருன்.

குலா : கத்தி எடுங்க! கத்தி எடுங்க! கத்தி எடுங்க! சந்தர்ப்பத் துக்கு உதவும்னு சொல்லி அந்த வீட் டுக் கதவிலே இப்படி..

ஹமீ : ஹா..ங்!

குலா : இப்படி.. இப்படி X ஒரு அடையாளம் போட்டு வச்சேன்.

அபு : உம் ஹமீத்! குலாம் சாஹேப் பெரிய ஆளு!...அந்த வீட் டுக்குப்போன வழி ஞாபகமிருக்கா?

குலா : ஞாபகமில்லியே!

அபு : ஏய்!

செருப்பை அவன்முன் வீசுகிருன்.

குலா: இருக்கு, இருக்கு, இருக்கு! பாலத்தை தாண்டி அந்த வீட்டுக்குப் போனதாக ஞாபகம் இருக்கு.

அபு : சரி! புறப்படு.

குலா : புறப்பட்றேன்! புறப்பட் றேன்! புறப்பட்றேன்!

அபு : ஏய் சீக்கிரம் வா!

குலா : வர்ரேன், வர்ரேன்.

போகிருர்கள்.

குலா : அதோ தெரியுதுங்களா?

அலிபாபா வீட்டைக் காட்டு கிருன். மறைவிலிருந்து மார்ஜியாஞ இவர்களைக் கவனிக்கிருள்.

அபு: ம்...பகலில் போனுல் குழப் பம் ஏற்படும். இரவில் அவனைக் கவனிப்போம். ஏய்! நாங்கள் வந்து போன விஷயத்தை வெளி யிட்டாயோ உன் உயிர் போய் விடும்.

குலா : சொல்லுவேனு? சொல்லு வேனு? எல்லோரும் வாயாலே மிரட்டுவாங்க. நீங்க கத்தியாலே மிரட்டுறீங்க. அதுக்கு மரியாதை கொடுகக வேண்டாமா?

அபு : சரி, வாங்க.

யாவரும் போக, மார்ஜியானு ஆலோசனையுடன் போகிருள். அபுஹுசேன் இரவு ஆட்களோடு வரும்போது எல்லா வீட்டின் கதவு களிலும் பெருக்கல் குறிகள் போடப் பட்டிருப்பது கண்டு ஏமாந்து திரும்பு கிருன். அந்த வேலையைச் செய்த வள் மார்ஜியானு; அந்த ஏமாற்றத் தால் கோபமடைந்த அபுஹுசேன் குலாமை இழுத்துப் போய் உண் மையைத் தெரிந்துகொண்டு அவனைக் கொன்று விடுகிருன்.

## காட்சி 9

## வேண்டாத விருந்தாளிகள்

**காசீம் மரணமடைந்ததால் அலிபாபா அமீராக நியமிக்கப்படுகிறான். அவன்தான் திடீர்ப் பணக்காரன் என்பதை குலாம் கூறியிருக்கவே அபுஹோஸேன் ஆட்களோடு வருகிறான். அவர்களை எண்ணெய்ப் பீப்பாய்களுக்குள் ஒளித்துவிட்டு எண்ணெய் வியாபாரிபோல் வருகிறான் அபுஹுஸேன். அப்போதுதான் அலிபாபாவும் மார்ஜியானாவும் வெளியே கிளம்புகிறார்கள்.**

தௌ : பாபாஜி! குதிரைகளெல்லாம்தயார்..உம்..உம்..புறப்படுங்க! போய் உங்கப்பா கல்லறைக்கு கை நிறைய பூவைப் போட்டு வணங்கிட்டு வாங்க.

அபு : சலாம் அலேகும்!

அலி : அலேகும் சலாம்!

அபு : நான் ஒரு எண்ணெ வியாபாரி. ஈராக்கிலிருந்து வருகிறேன்.

தௌ : அதான் தெரியுதே. ஏய்யா, உன் எண்ணெயிலே 'கலப்பு கிலப்பு' உண்டா? வாடைங்கிறதே கொஞ்சங்கூட இல்லையே?

அபு : சுத்தமான எண்ணெயில் மணமிருக்காது; ஆனால்...குணமிருக்கும்.

தௌ : நல்லவேளை, ருசி இருக்காது, ஜீரணமாகும்னு சொல்லாமபோனீங்களே.

அலி : ஐயாவே...நீங்கள் என்னை நாடி வந்த காரணம்?

அபு : (சிரித்து) தங்களுடைய குணநிசயங்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஊரார்கள் கூறிய வார்த்தைகளை எல்லாம் கேட்டபிறகு சதா உங்களைப் பற்றிய நினைவுதான் போங்கள்.

தௌ : எண்ணெ வியாபாரிங்கிறது சரியா இருக்கு... சும்மா 'வளவள'ன்னு பேசிகிட்டே இருக்கீங்களே. வந்த விஷயத்தை சொல்லுங்க.

அபு : நான் நாளை பெர்ஷியாவுக்குப் போக வேண்டும். இந்த இடத்தில் இரவு தங்கிப் போகலாமென்று......

தௌ : தங்கறதுக்கு இடம் இங்கே இல்லே. பக்கத்திலே ஒரு சத்திரம் இருக்கு...அங்கே போங்க... சுகமா...தங்கலாம்.

அபு : ம்..என் கூட்டம் அதிகம் அங்கு வசதியாக...

அலி : பரவாயில்லே! நீங்கள் இங்கேயே தங்கலாம் தௌலத்! வீடு தேடி வந்தவர்களை உபசரிப்பது நம் கடமை. இந்தப் பீப்பாய்களை வைக்கச் சொல்...! வாருங்கள்.

தௌ : ஏ..இந்தாப்பா ..எல்லாத்தையும் இறக்கி வைங்க...!

### தௌலத்தின் வேலை

**அருவிகள் சரிந்து விழும் மலை முகட்டின்மேல் அழகான மாளிகை அமைந்திருக்கிறது. மாளிகையின் முகப்பில் அலிபாபாவும் அபுஹுஸேனும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.**

அபு: ஆகா.. அற்புதம்...அற்புதம்! எட்டாத உயரத்தில் இந்த நீர்வீழ்ச்சிக்குமேல் அழகான மாளிகையைக் கட்டி முடித்த உங்களை, என்னால் பாராட்டாமலிருக்க முடியாது.

அலி : இதைக் கட்டி முடித்த பெருமை என் முன்னோர்களைச் சேர்ந்தது.

அபு : அப்படியா? வாழக் கொடுத்து வைத்தவர் நீங்கள்.

அலி : எல்லாம் அல்லாவின் கருணை.

அபு : அந்தக் கருணையால்தான் இன்று நாம் ஒன்று சேர்ந்திருக்கிறோம்.

**தௌலத் வருகிறான்.**

தௌ : நல்லா சேந்தீங்க...நல்லா சேந்தீங்க.

அபு : எல்லா பீப்பாய்களையும் ஒழுங்காகக் கொண்டுவந்து சேர்த்து விட்டார்களா...?

தௌ : ஆ.. ஆ...சேந்துட்டுது. முப்பத்தி ஒம்பது உங்களையுமசேத்தா நாப்பதாச்சு. நல்ல பசங்களைக் கூட்டியாந்தீங்க. பீப்பாய்களைத் தூக்கி வைங்கடான்னு ஒவ்வொருத்தனும் என்னையும் ஒரு 'கைபுடிய்யா'ங்கறான்.

அலி : வாருங்கள்...உள்ளே போகலாம்.

அபு : நீங்கள் போங்கள். கூலியைக் கொடுத்துவிட்டு நொடியில் வந்து விடுகிறேன். தௌலத்! இந்தா இந்தக் கூலியை எல்லாருக்கும் பிரித்துக் கொடுத்துவிடு.

பொன்முடிச்சை தூக்கி வீச, அதை தௌலத் பிடித்துக் கொள்கிறான்.

தௌ : மீதியிருந்தால்...?

அபு : உனக்குத்தான்.

தௌ : மீதி என்ன? பாதியே எனக்குத்தான்!

தௌ : இன்னிக்கு எல்லோரும்நரி முகத்துல முழிச்சிருக்கீங்க. இந்தாங்க ஆளுக்கு அஞ்சி மோஹரா! கொண்டு வந்தது குதிரை; கூலி வாங்கறதுநீங்க. சரி, குதிரையெல்லாம் புடிச்சிக்கிட்டு போங்க.

## மார்ஜியானாவின் திட்டம்

அபுஹுசேன் யார் என்பதை மார்ஜியானா புரிந்து கொண்டு விடுகிறாள். பீப்பாய்களுள் என்ன இருக்கும் என்பதையும் புரிந்துகொண்டு விடுகிறாள். தௌலத்தை அழைத்துக் கூறி ரகசியமாகத் திட்டமும் தீட்டுகிறாள். மகிழ்ச்சியோடு போகிறான் அவன்.

## காட்சி 10

## பாபாவின் தவறு

மார்ஜியானா எண்ணெய் வியாபாரியின் முன் நடனமாட அலிபாபாவிடம் அனுமதி கேட்கிறாள். அவன் கோபமாகப் பேசுகிறான்.

அலி : அந்த எண்ணெ வியாபாரியின் முன் ஆடுவதாவது, பாடுவதாவது? கூடவே கூடாது! உன் அழகும் பார்வையும், ஆடலும் பாடலும் என் ஒருவனுக்கே சொந்தம்.

மார் : அவர் பெரிய வணிக வேந்தராம். அவர் வருகிறார் என்றால் சக்ரவர்த்தியே சபா மண்டபத்தை விட்டு எழுந்து வந்து சலாம் போடுவாராம். அவருக்கு நாம் தக்க மரியாதை செய்து அனுப்பவேண்டாமா?

அலி : இப்போது புரிகிறது. மார்ஜியானா, உன் பொருள் பொதிந்த போக்கு. அந்த எண்ணெ வியாபாரி என்னைவிடப் பெருந்தனக்காரன்; கொஞ்சம் கண்ணைக் காட்டினால் பொன்னும் மணியும் மலைமலையாகக் குவியுமென்று மனக்கோட்டை கட்டுகிறாய். அவ்வளவுதானே மார்ஜியானா...? அதற்காகத்தானே நீ மானத்தைத் துறந்து மரியாதை இழந்து அன்னிய மனிதருக்கெதிரில் ஆடிக்காட்ட விரும்புகிறாய்?

மார் : பாபா! நீங்கள் நினைப்பது முற்றிலும் தவறு!

அலி : ஆமாம், தவறுதான்! கூத்தாடும் கூட்டத்தைச் சேர்ந்த உன்னைக் குளிப்பாட்டி கூடத்தில நிறுத்தினேனே! நீ மறுபடியும் குப்பை மேட்டிற்கே ஓடிப்போவாய் என்று முனபே தெரிந்து கொள்ளாமல் போனது நான் செய்த தவறுதான். மார்ஜியானா! நான் செய்தது தவறுதான்.

மார் : பாபா! ஆத்திரத்தில் வார்த்தைகளைக் கொட்டி விடாதீர்கள்; பின்பு அள்ள முடியாது. மார்ஜியானா பண்பாடு உணாராத மிருக மலல, மனம் போன போக்கிலே வாழ்வதற்கு. பாபா! உங்கள் கால்களில் விழுந்து கேட்டுக்கொள்கிறேன்; இன்றுமட்டும் ஆடுவதற்கு அனுமதி கொடுங்கள்! பின ஆயுளில என்றுமே ஆடமாட்டேன்! கால்கள் முடமானதாக நினைத்து, உங்கள் நிழலோடு ஒன்றிவிடுகிறேன், பாபா! ஒரே ஒரு முறைதான் பாபா!

அலி : முடியாது மார்ஜியானா, முடியாது. இதற்குமேலும் உன் கோரிக்கைகளால் என் இதயத்தைக் காயப்படுத்தாதே, மார்ஜியானா! போய்விடு...!!

மார் : போகிறேன்; ஆனாலும் கடைசி முறையாக எனககு உரியதைக் கேட்டு வாங்கிக்கொண்டுதான் போகப்போகிறேன். முன்னம் ஒருமுறை நான் கேட்கும் பரிசைக் கொடுப்பதாக வாக்குக் கொடுத்தீர்கள்.

அலிபாபாவிடம் பலவந்தமாக அனுமதி பெற்றுப் போகிறாள்.

## காட்சி 11

### யார் விருந்தாளி?

விருந்தினர்கள் முன்னால் நடனமாடும் மார்ஜியானா, கத்தியால் அபுஹுசேனை குத்தப் போகிறாள். அலிபாபா அவளிடம் கோபமாகப் பேசுகிறான்.

அலி: மார்ஜியானா! இது மங்கையருக்கு ஆகாத வஞ்சகச் செயல். இப்படி நெஞ்சம் துணிந்து செய்த நீயும் ஒரு பெண்ணா?...மன்னிக்க வேண்டும்! மார்ஜியானா செய்த காரியம் என் மனதைப் புண்படுத்தி விட்டது....நீலி! நீ ஆடுவேனென்று சாகசம் செய்தபோதே கேடு வருமென்று எனக்கு தெரியும்.

மார்: பாபா!

அலி: சீ! பேசாதே! விருந்துண்ண வந்தவருக்கு விபத்து ஏற்பட்டிருந்தால் அலிபாபாவின் பெயர் பறிபோயிருக்குமே. ஆகாக வியாபாரியைக் கூட்டி வந்து தீதான காரியத்தில் இறங்கினானென்று களங்கம் ஏற்பட்டிருக்கும். எழுந்திரு! நச்சுப் பாம்பே! உனக்கு சரியான தண்டனை கொடுக்கப் போகிறேன்.

ஆயே: என்னண்ணா இது...? எதையும் தீர ஆலோசித்துச் செய்யுங்களண்ணா...!

அலி: மண்டைக் கர்வம் பிடித்தவளே! ஆடலழகி என்ற அகங்காரத்தால் அறிவு குழம்பியவளே! என் தண்டனையிலிருந்து நீ தப்ப வேண்டுமானால் இந்த விருந்தாளியிடம் மன்னிப்புக்கேள்! போ.!

மார்: விருந்தாளி! யார் விருந்தாளி...? ஏழை மக்களை இரக்கமின்றி கொலைபுரிந்து இன்னல் விளைவிக்கும் இந்தக் கயவனா நம் விருந்தாளி? வந்திருக்கும் வணிகனின் வேஷம் கலைந்தால் தெரியும், இந்த நயவஞ்சகன் யாரென்று! புலி வாழும் காட்டிலே புகுந்து புலியைப் பிடிக்க வலை வீசி இருக்கிறான். பாபா! இவன் வணிகன் அல்ல; எங்கள் வைரி! உறவாடி உங்கள் உயிரை வாங்க வந்திருக்கும் கொள்ளைக்கார அபுஹுசேன்.

அலி: அபுஹுசேன்!

ஆயே: அபுஹுசேன்!

அபு: அடடா! என்ன ஆராய்ச்சி! என்ன கற்பனை! இதுவரையில் உன் நாட்டியத்தைக் கண்டேன் மார்ஜியானா! இப்போது உன் நடிப்பையும் காண்கிறேன்....அன்பரே! பாவம் அவள் உலகம் தெரியாதவள். ..ம் அப்படி நான் ஒரு கொள்ளைக் காரனென்றால், உங்களைக்கொல்ல இரவில் வந்திருக்க மாட்டேனா? பட்டப் பகலிலா வருவேன்...?

அலி: ஆம்! (திரும்பி) மார்ஜியானா! உனக்கென்ன பைத்தியமா இப்படிக் கதை கட்ட...?

மார்: இன்னமும் ஏமாந்து விடாதீர்கள். முகத்திலுள்ள வெட்டுக்காயத்தினால் இவனை அடையாளம் கண்டு கொண்டேன். இவன் கொள்ளைக்கார அபுஹுசேன்தான். சந்தேகமே இல்லை.

அபுஹுசேன் சிரித்துக்கொண்டே மூன்று முறை கைதட்டுகிறான்.

அபு: சபாஷ்!

மார்: சபாஷ்!

அபு: சந்தேகமே இல்லை. நாட்டியமாடி, ஆடி இவளுடைய மூளையும் நாட்டியமாட ஆரம்பித்து விட்டது. இந்தப் பித்தம் தெளிய வேண்டுமானால் பீப்பாயிலிருக்கும் எண்ணையைக் கொஞ்சம் தடவ வேண்டியது தான்.

சிரித்து மீண்டும் மூன்றுமுறை கைதட்டுகிறான். மார்ஜியானா தானும் கைதட்டி நையாண்டி செய்கிறாள்.

மார்: தட்டு! அபுஹுசேன், நன்றாகக் கை ஓயும் வரையில் தட்டு. மரணத்தின் எல்லையை எட்டிப் பிடிக்கும் வரையில் கையைத் தட்டிக் கொண்டே இரு.

அபுஹுசேன் விழிக்கிறான்.

மார்: உன் ஜாடையை அறிந்து உன்னுடைய உதவிக்கு ஓடிவரக் கூடியவர்களெல்லாம் இந்த உலகத்தில் இல்லை.

அபு: என்ன உளறுகிறாய்...?

மார்: ஏமாந்த முண்டமே! உனக்குப் பக்கத் துணையாக வந்த படைகள் எல்லாம் பரலோகத்தில்

உன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

அபு: ஆங்! உண்மையைச் சொல்! அவர்களை என்ன செய்தாய்?

### பாதாள யாத்திரை

அப்போது தௌலத்தும் புல்புல்லும் அங்கே வருகிறார்கள்.

தௌ: எல்லாத்தையும் தீத்துக் கட்டிட்டோம். அடேங்கப்பா... ஒண்ணு...ரெண்டா...முப்பத்தி ஒம்பது பிபபாய்ங்க. அத்தனையும் அருவித் தண்ணியிலே தடதடா தடதடா ..தடதடா...இந்நேரம் அவங்கஎல்லாம் ஆனந்தமா அதல பாதாளத்திலே உருண்டு போயிகிட்டே இருப்பாங்க....ஏன் புல்புல்?

புல்: ஆமாம்! அதுமட்டுமா? ஆழம் எவ்வளவு இருக்கும்னு கணக்கெடுத்துக்கிட்டும் இருப்பாங்க.

அபு தௌலத்தின் அருகில் வந்து அவன் கழுத்தைப் பிடித்து நெரிக்கிறான்.

89685

அபு: முட்டாள்களா!

தௌ: நாங்க...மெதுவாத்தான் தள்ளி விட்டோம். அவங்கதான் வேகமா உருண்டுகிட்டே போயிட்டாங்க. ஏன் புல்புல்?

மார்: அவனை விட்டுவிடு. அம்பை எய்தவள் நான். என்னைக் கேள். பழிகாரா! உன்னைப் பூண்டோடு அழிக்கத் திட்டமிட்டேன். பழிவாங்கப் பதறினேன். ஆனால்.. நீ தப்பி விட்டாய்!

அபு தௌலத்தை கீழே தள்ளி விட்டு கட்டாரியை உருவியபடி மார்ஜியானாவைப் பிடித்து கட்டாரியைக் காட்டிக் கொண்டு பேசுகிறான்.

அபு: சாகசக்காரி! இந்த அபு ஹுசேனையா ஏமாற்றத் துணிந்தாய்?

அலி: அபுஹுசேன!

அபு: ஜாக்கிரதை. சண்டாளி! பழிக்குப் பழியாக உன்னைப் பலி வாங்குகிறேன். என் திட்டங்களைச் சிதற அடித்த உன்னைச் சிரச்சேதம் வைத்து சித்ரவதை செய்கிறேன். உன் உயிர் என் கையில்; முடிந்தால் அந்தப் பேடிப் பயல் வந்து காப்பாற்றட்டும்.

அலிபாபா பக்கத்தில் போகிறான்.

அபு மார்ஜியானாவை இழுத்துக் கொண்டே பேசுகிறான்.

அபு: நான் இரத்த வெறிபிடித்த புலி! நில்! நான் கொல்ல வந்தது உன்னை. ஆனால், நான் இப்போது கொல்லப் போவது மமதைக்காரி மார்ஜியானாவை. நீ வாழ இவள் கட்டிய கற்பனைக் கோட்டைகளும், கொத்தளங்களும ஆகாயத்தில் பறக்கப் போகின்றன. நெருங்காதே. (அலி தடுக்க ஓடும்போது) ஜாக்ரதை! நீ ஒரு அடி எடுத்து வைத்தால் இந்தக கட்டாரி உன் அருமை மார்ஜியானாவின் மார்பில பாயும். உன் கண்ணெதிரில் பிணமாவாள்.

மார்: பாபா! பாபா! பாபா!

### பழிக்குப்பழி!

மார்ஜியானாவை குதிரைமேல் ஏற்றிக்கொண்டு குகைக்கு விரைகிறான். அலிபாபாவும் அவனைத் துரத்திப் போகிறான். குகைக்குள்ளே நுழைந்த அபுஹுசேன் மார்ஜியானாவை பற்கள் நிறைந்த கூண்டில் நிறுத்தி விசையை அமுக்குகிறான். அது மார்ஜியானாவின் உயிரைக் குடிக்க வருகிறது. அலிபாபா அங்கே வந்து அபுஹுசேனுடன் சண்டை செய்கிறான். ஊராருக்கு அபுஹுசேன் வெட்டி வைத்த வெந்நீர் கால்வாயில் கடைசியில் அவனே வீழ்ந்து மாண்டுபோகிறான். அலிபாபா மார்ஜியானாவை விடுவிக்கிறான்.

### அண்டாகா கசம் அபுகா ஹுகும் மூடிடு சீசேம்!

அலிபாபாவும் மார்ஜியானாவும் வீடு திரும்புகின்றனர். மகிழ்ச்சியால் யாவரும் பூரித்துப் போகிறார்கள். பலவித இன்னல்களையும் கடந்தபின் அலிபாபா-மார்ஜியானா, தௌலத்-புல்புல் ஜோடிகளும ஆயேஷாவும் வாழ்வின் வெற்றிப்பாதையிலே பெருமிதத்தோடு பிரயாணத்தை ஆரம்பிக்கிறார்கள். தௌலத் வாழ்வை எப்போதும் ஹாஸ்யக் கண்கொண்டு பார்ப்பவன் அல்லவா! நம்மைப் பார்த்து, "அண்டாகா கசம், அபுகா ஹுகும் மூடிடு சீசேம்" என்கிறான். நாம் அசந்து போகும்போது திரை மூடிக்கொள்ளுகிறது. மனநிறைவுடன் வெளியே வருகிறோம். ★

விரைவில் வருகிறது!

H.M.ரெட்டி தயாரித்த

ரோஹிணியின்

# ரேணுகாதேவி

தமிழ்

[பரசுராமர்]

பண்டரிபாய், நாகேந்திர ராவ்,
நிரபராதி புகழ் மது
மற்றும் பலர் நடிப்பது

வசனம் உதயகுமார்
பாடல்கள் கம்பதாசன், மருதகாசி

* பின்னணி A.M.ராஜா, P.நாகேஸ்வரராவ், P.லீலா

டைரக்ஷன்: Y.R.ஸ்வாமி

இத்தமிழ்ப் படத்தின் உலக உரிமையாளர்:

கோல்டன் பிலிம்ஸ் லிட்., மதராஸ்.17.